முரசொலி

பொங்கல் மலர் 1961

ஆசிரியர்

மு. கருணாநிதி

விலை ரூ 1-25.


கொடிகட்டிப் பறக்கும் தாய்மை உணர்ச்சி
கொழுந்துவிட்டு மிளிரும்
சமுதாய எழுச்சி
பிரசாத்.....கருணாநிதி
'மனோகரா'வை உருவாக்கிய.
மகத்தான கலைஞர்கள்.
திரையுலகிற்குப் படைக்கும்.
தெவிட்டாத விருந்து.
பிரசாத் மூவீஸ்
அளிக்கும்
தாயில்லாப் பிள்ளை
டைரக்ஷன்
பிரசாத்
கதை. வசனம்
கலைஞர் மு. கருணாநிதி
இசை
K.V மஹாதேவன்
படப்பிடிப்பு
K.S. பிரசாத்
பாடல்கள்
கவிஞர் கண்ணதாசன்
கொத்தமங்கலம் சுப்பு
மருதகாசி
MOULIS


பொங்கல் வாரம்
சென்னை
வெலிங்டன்
பிரபாத்
சரஸ்வதி
மற்றும் தென்னாடெங்கும்
ஜூபிடரின்
அரசிளங்குமரி
டைரக்ஷன்: A.S.A. சாமி
கதை, வசனம்
கலைஞர் மு. கருணாநிதி, எம்.எல்.ஏ.
ஸ்டுடியோ
நெப்ட்யூன்
Rights controlled by
JAYANTHI FILMS (MADURAI) PRIVATE LTD., MADRAS-17.
Jupiter Advtg

பொங்கல் புதுநாளில் எங்களது நல்வாழ்த்துக்கள்

★

மகளிர் விரும்பும் மனம்கவர் பட்டாடைகளுக்கும்,
உத்திரவாதமுள்ள உயர் ரக காஞ்சிபுரம் –
பனாரஸ்–பெங்களூர்–ஆரணி – கைத்தறி
சேலைகளுக்கும் உகந்த இடம்

S. R. B. குப்புசாமி ஐயர் & சன்

குறைந்த விலை

உயர்ந்த ரகம்

★

117, நைனியப்ப நாயக்கன் தெரு,
சென்னை–3

தந்தி:- 'RENOWN'
தொலைபேசி:- 3506

230, கீழமாரட் வீதி,
மதுரை

தந்தி-: 'YESARBIKAY'
தொலைபேசி:- 36

பிப்ரவரி
வெளியீடு
புத்தா
பிக்சர்ஸ்
பாவ
மன்னிப்பு
திரைக்கதை & டைரக்ஷன்
A. பீம்சிங்
BUDDHA PICTURES
ஸ்டூடியோ
ஏவி எம்

தொலைபேசி : 88115

நல்லி சின்னசாமி செட்டி

(பட்டு ஜவுளி வியாபாரிகள்)

பொங்கல் வாழ்த்துகள் !

இவ்வருட பொங்கலுக்கு எமது வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்கள் அளித்த பேராதரவிற்கு மனமார்ந்த நன்றி. மேலும் தொடர்ந்து சேவை செய்ய வாய்ப்பளிக்க வேண்டுகிறோம்.

நல்லி சின்னசாமி செட்டி

பட்டு ஜவுளி வியாபாரிகள்,
நாகேஸ்வர ராவ் ரோட், (பனகல் பார்க் எதிரில்)
தியாகராயநகர், சென்னை-17.

வாடிக்கைக்காரர்களுக்கும், நண்பர்களுக்கும்
எமது உளங்கனிந்த வணக்கமும் வாழ்த்தும் உரித்தாகுக!

ஆர். எம். கனகசபாபதி

(டீலர்ஸ் இன் பர்மாஷெல்)

*

ஒயிட் ஸ்டவ், கிருஷ்ணாயில் ஒல்சேல், ரீடெயில்
சிமெண்ட் அண்டு ஜெனரல் மெர்ச்சண்ட்

ஆபீஸ்

23, முத்து முதலித் தெரு,
இராயப்பேட்டை, மதராஸ்—14.
[போன் நம்பர்: 85294.]

சேல்ஸ் டிப்போ :

2-46, தௌசண்ட்லைட் மார்க்கட்
மவுண்ட்ரோடு, மதராஸ்—6

எஸ். கோவிந்தசாமி அவர்களின்
நூல் தொகுப்பு



வியாபாரிகளுக்கும் வாடிக்கைக் காரர்களுக்கும்

எங்கள் உளம் கனிந்த

பொங்கல் வாழ்த்துகள்!

எமது புதிய தயாரிப்புகள்



உயர்ந்த பித்தளையினால் செய்யப்பட்ட பெட்ரூம் லைட், குத்துவிளக்குகள், வால்லைட், டேபிள் லைட், ஹேங்கிங் லைட் தயாரிப்பாளர்கள்

ஸ்டார் பிராஸ்லைட், மெட்டல் இண்டஸ்ட்ரீஸ்

தபால் பெட்டி எண்: 30 தந்தி: ஸ்லேட்ஸ் போன்: 72

மேனகா பில்டிங்ஸ்,

கும்பகோணம்.

கோட்டாகுடி பெரியநாயக்கர்
லெ. கோவிந்தசாமி அவர்களின்
நூல் தொகுப்பு

புதுப்பொலிவோடு
நல் அமைப்போடு

முத்தாரம்

ஆசிரியர் : மு. கருணாநிதி

மார்ச் முதல் வருகிறது

முத்தாரம், சென்னை-6

பொங்கல் மலர்—1961

*

சோலைவனமாக வளம் சொட்டுகின்ற தென்னகத்தைப்
பாலைவனமாக்குகின்றார் பாதகர்கள் என்றறிந்து
கொட்டமடக்கி நம் குவலயத்தை வாழ்விக்க
ஒட்டகத்தின்மீதும் ஊர்ந்தனரோ நம் தலைவர் !

*

புகைப்படம் : பி. பாண்டுரங்கன்
வண்ணம் : அய்க்கன்


Aykan

மலரும் மணமும்

அன்பு மழை பொழிகின்ற காதலரை இன்ப மழையில் நிற்க வைத்து அழகு மழை பொழிகின்ற மாதவனின் முகப்பும்—வாழ்த்து மழை, கருத்து மழை, வண்ணத் தமிழ்ச்சுவை மழை பொழிகின்ற மூத்தவரின் உவப்பும்—செயல்வலார், சொலல்வலார், கலைவலார் அனைவரது எழுத்தும்-சோர்விலார் இவர் எனப் புகழும் வண்ணம் திறன் காட்டிய சோதரர் சத்தியின் உழைப்பும்—தம்பி மாறன் ஆற்றலும்—ஆர்வமிகு சொர்ணம்• சௌந்தரின் ஓயாப் பணியும்—முயற்சி வென்றிட மூச்சடக்கித் தொண்டு செய்த மோகனதாஸ்-மற்றும் அலுவலகத்து என் ஆருயிர்த் தோழர்களின் நல்நினைவும், ஓவியர் செல்லப்பனின் ஒத்துழைப்பும் சேர்ந்துதான் இதோ; உங்கள் பொற் கரத்தில் முரசொலி, பொங்கல் மலராக எழில் சிந்திக் கோலம் புரிகிறது.

கிழமைக் கொருமுறை உங்கள் கரமேறி—கண் வழியே இதயக் கொலுவேறி நிலைத்துவிட்ட 'முரசொலி', இன்று நாள் தோறும் கதிருடன் தோன்றி நமது தோழமையை வளர்க்கின்ற நற்சேதி நீவிர் அறியாததன்றே!

இந்த வளர்ச்சிக் கட்டத்தில்—இடைவிடாப் பணியில்—மிக்க நெருக்கடியில்—மலர் முகம் காட்ட முடியாதோ என அனைவரும் எண்ணினர்- நாமும் எண்ணினோம்.

நம இருபாலாரையும் மீறி ஒளிந்திருந்த அன்புத் தேக்கம், இளஞ்சிரிப்புக் காட்டி பொங்கல் மலர்ப் பொலிவைக் கொட்டி விட்டது.

"முரசொலி மலர் என்றால் அதற்குத் தனிப்பெருமைதான்!" என்று ஆண்டு தோறும் முழங்குகின்ற உங்கள் நெஞ்சம், குற்றம் குறை இருந்தாலும் பொறுத்தருளி வழக்கம்போல் இந்த ஆண்டும் வாழ்த்து குவிக்க வேண்டுமென்று விழைகின்றேன்.

'மலர் சிறிது என்றாலும் மணம் சிறந்தது' எனப் போற்றும் உங்கள் பொன்னொளி முகங்களையெல்லாம் அகக் கண்ணால் காணுகின்றேன். மகிழ்கின்றேன். இன்பம் பெறுகின்றேன். ஏற்றதொரு செயலை முடிப்பதற்குப் புதுத்தெம்பு கொள்கின்றேன்.

வாழ்க தமிழ்! வாழ்க பொங்கல்! வளமுறுக திராவிடம்!



சிலை: சிற்
வெங்கடேச
சென்னை

மூத்தவர் வாழ்த்து

அறிஞர் அண்ணா

வாழ்க என்பது தமிழ்ச்சொல்மட்டுமல்ல, தமிழ்ப் பண்பு. கனிந்த மனத்துடன், மற்றவரின் வாழ்க்கை செழித்து அவர் இன்புற்று இருப்பது அவர்க்கு மட்டுமல்லாமல், சமூகத்துக்கு நல்லணி என்பதால், வாழ்த்துவது, தமிழ் மரபு—அந்தச் சொல்லிலே இசை ஒலியும் இதயக் குழைவும் இருப்பதனை, இதயமுள்ளோர் எவரும் உணருவர்.

அவரவர் வாழ்க்கை அவரவரின் முயற்சியின் அடிப்படையில்தான் அமைகிறது-இது சிறுரும் அறிந்துள்ள பாடம். ஆயினும், எவருடைய முயற்சியும் முட்டின்றி நடைபெற, வெற்றி திகழ வேண்டுமாயின், அவர்போன்ற எண்ணற்றோரின் செயல், துணை தருவதாகவும் சிறப்பளிப்பதாகவும் அமைதல்வேண்டும்.

உழவன் கரத்தின் தரத்தைப் பொறுத்தது ஏரின் ஏற்றம் எனினும், நிலத்தின் தன்மையும் பொருத்தமாக அமைந்திருத்தல் வேண்டுமன்றோ? எத்துணை திறம்பட உழைத்திடினும், கருங்கற் பாறையினை உழுது பயிரிடத்தக்க வயலாக்கிப் பலன் காண இயலுமோ.

அஃதேபோல, தனியொருவரின் முயற்சி செம்மையாக அமையினும், அம் முயற்சி தக்க விதமான பலனைப் பெற்றளிக்கவேண்டுமெனின், சமூகம் அதற்கு ஏற்றவிதமாக இருத்தல்வேண்டும்.

சமூகம் அவ்விதம் இருந்திட வேண்டுமெனில், மற்றவர்களும், செம்மையான, செயல்களில் ஈடுபட்டுப் பலன் காணவேண்டும். எனவேதான், வாழ்க என்று வாழ்த்தும் முறை எழுந்தது. ஒருவர் வாழ மற்றவர்கள் வாழ்ந்தாக வேண்டும்.



மலர் காணச் செடி வேண்டு மன்றோ!

இந்த அருமையான பண் பின் அடிப்படையிலே எழுந் ததே, வாழ்க எனும் இசை ஒலி.

தமிழரின் மனம், அழகு கண்டால், மயங்கும், துன்பம் கண்டால் உழலும், மகிழ்ச்சி காணுமிடத்தோ துள்ளும்!

சீரிய செயல் காணின் பாராட்டவும், வீரம் காண கையிலே எழுச்சிகொள்ளவும் தமிழர் மனம், பன்னெடுங் காலமாகவே பண்பட்டிருந்தி ருக்கிறது.

அந்தப் பண்பு எத்துணை உயர்வானது என்பதனை அறிய, தமிழர் வாழ்த்தும் முறையை மேற்கொண்டதிலி ருந்து மட்டுமல்ல; மக்களை மட்டுமேயன்றி, இயற்கையை அவர்கள் வாழ்த்தி இன்புற்ற திலிருந்து நன்கு உணரலாம்.

ஞாயிறு, திங்கள், மாமழை, மலர், அருவி, ஆடும் மயில், இசை பயிலும் குயில், கொஞ் சிடும் கிள்ளை என்பனவற்றை எல்லாம் வாழ்த்தினர். வீரத்தை வாழ்த்தினர். கொடைத் திறனை வாழ்த்தி னர். புலமையை வாழ்த்தி னர். வாழ்வுக்குச் செல்வமாக அமைந்த எதனையும் வாழ்த்து வதைத் தமிழர் தம் மரபு ஆக் கிக்கொண்டனர்.

புலவர் பெருமக்கள், அற வழி நின்ற தமிழகத்துக்கு அணியென விளங்கிய அற்றை நாட்களில், வாழ்த்தொலி எங்கணும் பரவிக் கமழ்ந்திருந் தது.

இடையே, வாழ்க எனும் இந்த இசை ஒலியே, தமிழ கம் இழந்துவிட்டதோ என்று எண்ணிக் கவலை கொள்ளத் தக்க விதத்தில், வேற்று மொழியான வெற்றொலிகள் கிளம்பின, தமிழ் மரபு கை விடப்பட்டுவிடுமோ என்ற அச்சம் எழத்தக்க அளவுக்கு.

எனினும், காடு கழனியாதல் போல, கருத்த வானில் மீண் டும் ஒளி கிடைத்ததுபோல, புதைபட்ட பொன்னும் மணி யும் தேடிடுவோர்க்குக் கிடைத்தல் போல, மடிந்தி டுமோ என்று அஞ்சத்தக்க நிலையில் மங்கிக் கிடந்த தமிழ் மரபு காட்டும் அந்த அழகிய, சுவை மிகு ஒலி, வாழ்க, வாழ்க—எனும் இசை, மீண்டும் தமிழகத்தில் எழுந் துள்ளது.

வாழ்க எனும் அந்தத்தேன் மொழியை இல்லமெலாம் பருகி இன்புறும் திருநாளாக, பொங்கற் புதுநாள் வந்துள் ளது. பொலிவு பெற்ற இல் லம், பூரிப்படையும் உள்ளம், போற்றி மகிழும் பண்பு, இவை, இந்தத் திருநாளின் எழிலணிகள்.

பூண்பனவும், பூசுவனவும், உண்பனவும், உடுத்துவன வும், என்னென்ன வகையின என்பதனை எடுத்துக்காட்டு வதுபோல, இன்று தமிழர் ஏற்றம் கொள் கோலம் கொண்டு, மகிழ்ச்சி பொங்க உலாவருதல் காண்கிறோம்.

கூண்டில் அடைபட்ட நிலையிலும், அரிமா தன் குர லெடுத்து முழக்குவதைக் கேட்கும்போது, வீரம் வியக் கத்தக்க வகையிலே இருப்ப தால், மனம் ஈர்க்கப்படும் நிலைபெறுகிறோம். பட்டா லான சேணமணிந்து, பாதங் கட்குக் கிண்கிணி பூண்டு கொண்டு கர்த்தபம், நெடுஞ் சாலையிலே, தடுப்பாரின்றி பவனி வந்து, தன் 'இசை' யைத் தந்திடின், எவரே கேட்டுத் தாங்கிக் கொள்ள முடியும்.

இன்று தமிழர், கூண்டில டைபட்ட அரிமா. எனவே இங்கிலையில் கிளம்பிடும் முழக் கமும் கேட்போருக்கு வியப் பளிக்கத்தான் செய்கிறது.

பொங்கற் புது நாளாம்! கேட்டீர்களோ, அது தமிழர் திருநாளாம்!—என்று பேசு வோர், கேலி மொழி பேசுவ தாக எண்ணற்க. விழித்துக் கொண்டனர், விளக்கம் பெற் றுவிட்டனர், எனவே விடுதலை பெற்றே தீருவார்கள் என்ற அவர் தம் அச்சம் கலந்த எண் ணத்தை, மிச்சமுள்ள மிடுக் குடன் கலந்து வீசிப்பார்க் கின்றனர் என்று பொருள்.

வாழ்க என்பதுதான் கூறு வது முறையாம்; மரபாம்; பண்பாம் — என்று அவர் கூறுங்காலை ஆயிரத்தெட்டு அரண் அமைத்துக் காத்து வந்த ஆதிக்கம், அடித்தளம் உடைபட்டு ஆட்டம் கொடுத்துவிட்டதை அறிந்த தனால் ஏற்பட்ட அச்சம் அவர்களை அச்சொல்லை உமி ழச் செய்கிறது என்று அறி மின்!

இரவுமணி இரண்டு! அணைத் தும் அணைக்காததுமான நிலை யில் ஆரணங்கு தான் பெற்ற செல்வத்தைப் பக்கம் படுக்க வைத்து, துயிலுகிருள். அந்தப் பசும்பொன் முகத்தினிலே, பாலும் நிலவும் பாங்காகக் குழைத்துப் பொலிவு அளிக் கிறது. தூங்கும் நிலை! எனி னும் கலகலவெனச் சிரிக் கிறது! — கேட்டதுண்டா? கண்டதுண்டோ, அந்தக் காட்சி.

அந்தச் சிரிப்பொலியைக் காட்டிலும் சுவைமிகு ஒலி யினை யாழும் குழலுமா எழுப் பிடும்?

எனினும், களவாட நுழைந் துள்ளோன் காதுக்கு அந்த

தொடர்ச்சி 6-ம் பக்கம்

கடல் கடந்த நம்மவர்

சொல்லின் செல்வர் ஈ.வி.கே.சம்பத் எம்.பி.

தமிழர் திருநாளென நாம் விழாக் கொண்டாடி டும் இந்நாளில் பிற நாடு களில் வதியும் நம் தமிழ் மக்களின் நினைவு நமக்கு வருதல் வேண்டும்.

சிங்களத் தீவிலும், மலேயா, பர்மா, தென்னாப் பிரிக்கா நாடுகளிலும் நம் மவர் இலட்சக் கணக்கில் பெருகியுள்ளனர். இவர் கள் அங்கு படையெடுத் துச் சென்று, வெற்றி கொண்டு ஆதிக்கம் புரிய வில்லை. அழைப்பின்மீது அன்றிருந்த வெள்ளை அர சின் ஏற்பாட்டின்படி கூலி களாய்ப் பாடுபடச் சென்ற வர்கள். இன்று நீண்ட நாட்கள் அந் நாடுகளில் தங்கி, அந்நாட்டவர்களாகி விட்டனர்

மொழியாக இன்னும் தமிழ்தான் விளங்குகிறது. ஆனால் அரசியல் முறை யில் அந் நாட்டுரிமை பெறத் தகுதி படைத்தவர் கள். இன்னும் நம் மொழி பேசும் ஒரு குற்றத்திற்கா கவே, பெற வேண்டிய உரிமை கிடைக்காது தவிக் கின்றனர்.

இந்தியத் தூதுவரால யங்களில் பணியாற்றும் தமிழரல்லாத — சிலவேளை களில் தமிழ்ப் பகைவர் களான — அதிகாரிகளால் விளைந்துள்ள கொடுமை கள் தாங்கொணாதவை யாகும்.

இந்நாட்டு அரசியலில் திளைத்திருக்கும் தமிழ்த் தலைவர்களும் சிறிது சிறி தாகக் கடல் கடந்த தமி ழர்களைக் கைகழுவத் தொடங்கி விட்டனர்.



இலங்கைத் தமிழர் ஒருவர் சின்னாட்களுக்கு முன் என்னைச் சந்தித்தபோது

"உலகத் தமிழர்கள், தமிழ் நாட்டுத் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பெரிதும் நம்பிக் கிடக்கின்றனர்" என்று கூறியது கேட்டுத் திடுக்கிட்டேன். உலகத் தமிழர் என்ற சொற்கூட்டே என் உள்ளத்தில் புதிய உணர்வினை உண்டாக்கிற்று. இத்தனைக்கும் இதனைக் கூறிய நண்பர் யாழ்ப்பாணத் தமிழர்— பல நூற்றாண்டுகட்கு முன் மூவேந்தர் காலத்தில் இங்கிருந்து அங்கு ஆளச் சென்று தங்கியோரது பரம்பரை. அவர் உள்ளத்திலிருந்த உறவுணர்வு தாய் நாட்டில் எத்தனை பேருக்கிருக்கிறது என்று எண்ணிப் பார்க்கையில், வெட்கித் தலை குனிவதைத் தவிர வேறு வழியில்லை.

தாயகத்துத் தமிழர்கள் கடல் கடந்து வாழ்பவர்களைப் பற்றிய விவரங்களையும், அவர்களது பிரச்னைகளையும் தெரிந்து செயல்பட இவ்வாண்டில் ஈடுபட்டுக் கழுவாய் தேட வேண்டும். செயலாற்றாவிடினும் அவர்களை மறந்துவிடவில்லை என்பதை வெளிப்படுத்த வேண்டும்.

அரசியல் என்பது எங்கோ தொலை தூரத்திலிருக்கும் நட்சத்திர மண்டலத்தை ஆராயும் வான சாஸ்திரமல்ல; நம்மைச் சூழ்ந்துள்ள நம்மவர்கள் பிரச்னைகளைத் தீர்த்து நலங்காண வழி கோலுதலே அரசியல்.*

12-ம் பக்கத் தொடர்ச்சி

ஒலி, தேளாகும், தேளாகா தன்றோ?

அதுபோலவே வாழ்க எனும் ஒலி, நமக்கு இசை; இசைபட வாழ்ந்த நம்மை இடர்ப்பாட்டில் தள்ளி இன்று ஆதிக்கம் செய்கின்றோர்க்கு அந்தச் சொல்லே, அரிமாவின் முழக்கமாகிறது. அதுவுந் தேவை!!

அனைவரும் வாழந்திட வேண்டும். அதிலேதான் நம் வாழ்வு அமைந்திருக்கிறது என்ற மரபு கொண்ட தமிழர் நல் வாழ்வு வாழ்ந்திட, என்னென்ன தேவையோ, அவ்வளவும் குறைவற இங்கு உள்ளதனை, குறைமதியாளரன்றி மற்ற எவரும் அறிவர்,

நிலமெனும் நங்கை உளாள், இலம் என்ற சொல் ஏன் என்று கேட்டு, நகைத்திட! ஆரணங்கென ஆடி வருகிறாள், வளம் பாடி வருகிறாள், அருவி! மலை மகளோ, என் தோற்றம் காணீர் – என்று பேசுகிறாள்! அவள் வளர்க்கும் செல்விகளாம், தருக்களோ 'ஆமாமாம்! ஆமாமாம்!' எனப் பண்பாடுகின்றன. கடற்கன்னி கணக்கற்ற 'முத்தம்' உண்டு என்று கூறி; என்றாலும் சுவை மிக்க முத்தம் வேண்டின், அது சுக்கல்ல, மிளகு அல்ல, எளிதாகக் கிடைத்திட, சுழலுக்கும் சுறாவினுக்கும் அஞ்சாத வீரம் வேண்டும்; அவ்வீரம் காட்டுவோரை; அலைக் கரத்தால் அணைத்து நானும் 'முத்தம்' சொரிந்திடுவேன் என்று நித்தம் செப்புகிறாள்.

உழைத்தால் பிழைக்கலாம் என்ற உறுதியைத் தரத்தக்க முறையில் எல்லா வளமும் இங்கு உண்டு.

இந்த நல் வளமெல்லாம், இயற்கையின் எழில் என்பதால், அதை வாழ்த்தி நின்றார், நம் தமிழர்.

இன்னும் வாழ்த்துகிறோம், எத்தனையோ இருளதனை நமைச் சூழப் பிறர் அமைத்தும், நாம் யாவர் என்பதனை நன்குணர்ந்தோம், வாழ்த்துகிறோம். அது போதும் என்றிருத்தல், முறையல்ல, ஆகையினால், இகல் வெல்லும் என்பதனை எந்நாளும் மறவாமல், தமிழர் துயர் வென்று வாழ்த்திடுவர் என்ற மொழி இகழாமல், எழுந்திட்ட ஏற்ற மிகு இன் முயற்சியில் ஈடுபட்டு, விலங்கொடித்து, தமிழகத்தில், வீர விளக்கொளியைக் காண்போம், வாரீர்.

இந்த ஒரு எழுச்சியினைத் தமிழ் மறவர், பெற்றிடவும், என் உயிரினும் இனியர், மாவீரர், என்று மறக்குலத்து மங்கையரும், மதலையருடன் குலவி, மகிழ்ந்து மொழிந்திடவு மானதோர் விழாக்கோலம் கொள்ளட்டும், உம் இல்லமெலாம் உள்ளமெலாம்!

எழில் எங்கும் இருப்பினும்' தழினிலே இடுப்பினிலே, தொடுத்திடும் விழியினிலே, எங்கும் எழில், இன்பம், இருந்திடினும், என் வாழ்த்தும் சேர்த்து மகிழ்ந்திடுக என்று அளிக்கிறார் மலரும், என் தம்பி முரசொலியார்!

தம்பியின் முரசு தன்னைச் சிறிது போழ்ந்து தட்டி மகிழ்கின்றேன்; என்வாழ்த்து உங்கட்கு என்றும் உண்டன்றோ!

வாழ்க தமிழர்கள்
வளமெலாம் பெற்று!
வாழ்க தமிழர்கள்
வையகம் வாழ்ந்திட!
வாழ்க தமிழ் அறம்
தாரணி தழைத்திட!
வாழ்க தமிழ்மொழி
இனிமை பொங்கிட!



ஒரிசாவில் மகா--
ராஜாக் கட்சியோடு
மஞ்சத்திலே
கொஞ்சலாம்!
முஸ்லீம் லீக்கை
வகுப்புவாதக் கட்சி
என்று வர்ணித்து-
விட்டு அதன் மடி-
யிலே புரளலாம்!
1
2
கேரளத்தில்
பி.சோ. கட்சியை
நிரந்தர கள்ளக்
காதலனாக
வைத்துக்
கொள்ளலாம்!
3
உன் தாடி தான்
குத்துகிறது!
பரவாயில்லை!
வகுப்பு
வாதம்
ஆனால் சென்னையில்...
கௌரவமான உடன்-
பாட்டோடு மற்றவர்
கள் மட்டும் ஒன்று
சேரக்கூடாதாம்!

காட்சி : 1

[கோழி கூவிபது!

காலைச் சங்கு முழங்கியது!

மாதவியின் மாளிகையில் உள்ள அலங்காரப் பள்ளியறையிலே விளக்கு எரிந்தது. விடியவில்லை இன்னும்!

படுக்கையில் புரண்ட மாதவியின் விழிகள் மெதுவாகத் திறந்தன.

பக்கத்தில் உறக்கத்தில் ஆழ்ந்திருக்கும் கோவலனை ஏறிட்டு நோக்கினாள்.

"அத்தான்" என்றாள் மென் குரலில்.

கோவலன் எழவில்லை. அவனை எழுப்பும் வழியை நன்குணர்ந்த மாதவி யாழை எடுத்து மீட்டினாள். குவிந்திருந்த கோவலலன் விழிகள் அப்போதுதான் மலர்கின்றன.]

மு. கருணாநிதி

மாதவி : அத்தான்! இன்ருேடு இருபத்தெட்டு நாட்கள்......இந்திர விழா முடிவுறுகிறது! வாருங்கள்......... கடற்கரைக்குப் போய் அருணோதயக் காட்சியைச் சுவைக்கலாம்!

கோவலன் : வருகிறேன்.........அங்கு நீ கானல் வரி பாடி, என்னை மகிழ்விக்க வேண்டும்!

மாதவி : நீங்களும் பாடவேண்டும்!

கோவலன் : உன்னைப்பற்றி என்ருல் நான் பாடுவேன்.........கடற்கரையைப் பற்றிப் பாடும் கானல் வரி பாடுவதென்ருல்...........

மாதவி : அப்படியாஞல் நானும் பாடமாட்டேன்!

கோவலன் : சரி......சரி...வா! இருவரும் பாடுவோம்......

[மாதவி முகத்தில் மகிழ்ச்சிக் கொப்பளிக்க வசந்தமாலையை அழைக்கிருள்.

மாதவி : "வசந்தமாலை! யாழ் தயாராகட்டும்! நாங்கள் அருணோதயத்திற்குள் கடற்கரை செல்ல வேண்டும்! அதற்குப் புரவி பூட்டிய தேரும் தயாராகட்டும்! கடற் கரையில் நாங்கள் அமர்ந்து கானல் வரி பாட — புன்னை மரத்து நிழலில்—புது மணற் பரப்பில்—சித்திரத் திரைகட்டி — விதானம் விரித்த வெண் கால் கட்டில் ஏற்பாடாகட்டும்!

வசந்தமாலை : இதோ, ஒரு நொடியில்.........

காட்சி: 2

[வீதியில் கோவலனும் மாதவியும் புரவி பூட்டிய தேரில் ஏறிப்போய்க் கொண்டிருக்கிருர்கள்.

விளக்குகள் எரிந்து கொண்டிருக்கும் புகார் நகரின் தெருக்களில் தேர் போகிறது.

வெளிநாட்டார் வாணிப நிலையங்கள், பண்டகசாலைகள் விளக்குகளால் மின்னுகின்றன!

கலங்கரை விளக்கின் ஒளி அவர்கள் தேர் மீது பட்டுப் பட்டுச் சுழல்கிறது.

கடற்கரையில், ஆடவர் பெண்டிர்......விளையாடிக் கொண்டிருக்கிருர்கள்......

கோவலனும் மாதவியும் புன்னை மரத்தடிக்கு வருகிருர்கள்—அங்கேஅழகிய வேலைப்பாட்டுடன் திரை கட்டப்பட்டுள்ளது. அதன் மறைவில் கடற்கரையையும், காவிரி கடலில் கலக்குமிடத்தையும் பார்த்தவாறு அமைந்த எழில் மிக்கக் கட்டிலில் அமருகிருர்கள்.

அமர்ந்ததும், வசந்தமாலை யாழை எடுத்துக் கொடுக்கிருள், மாதவியிடம்!

மாதவி, யாழைப் பெற்று, இசை கூட்டுகிருள். தன் செங்காந்தள் விரல்களால் சிறிது நேரம் பாட்டின்றி யாழொலியால் கோவலனை மயக்குகிருள்.

கடற்கரையில் விளையாடிக் கொண்டிருந்தவர்கள் எல்லாம் யாழ் ஒலியின் இனிமையில் மெய்மறந்து நின்று விடுகிருர்கள்.

கடல் அலைகூட அமைதி பெறுகிறது—குளத்தைப்போல் கடல் மெதுவாக அலைக் கரங்களை அசைக்கிறது.

யாழ் ஒலி.........கடற்கரையையே தன் வயப்படுத்திய பின்.........மாதவி யாழைக் கோவலன் கையில் தருகிருள்.]

மாதவி : அத்தான்!......முதலில் நீங்கள் பாடுங்கள்!.........

[கோவலன், மாதவியின் விரல்களை எடுத்து, குளிர் பார்வையை அவைமீது வீசி, அவைகளைக் கண்களில் ஒத்திக் கொள்கிருன்.]

கோவலன் : இந்த விரல்களால் விழிகளில் கூடக் குத்திக் கொள்ளலாம்; காயம் ஏற்படாது. அவ்வளவு மென்மையான அனிச்ச மலர் விரல்கள்! இந்த விரல்பட்ட யாழின் நரம்புகளைத் தொடுவதற்கு என் முரட்டு விரல்களுக்குத் தகுதியுண்டா மாதவி?

மாதவி : இந்த யாழுக்கு மாத்திரம் என்னைப் போல உயிர் இருந்தால், உங்கள் விரல்போலே படும்போது ஏற்படும் சுகத்தை ஒரு கவிதையாகவே பாடிவிடும்!

கோவலன் : அப்படியா?.........மாதவி.........

மாதவி : அத்தான்... பாடுங்கள்......கண் பெற்ற இன்பம், என் செவியும் பெறட்டும்!......

[கோவலன் யாழ் மீட்டிப் பாடுகிருன்]

"திங்கள் மாலை வெண்குடையான்
சென்னி செங்கோல் அதுவோச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்,
புலவாய் வாழி! காவேரி!.........
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவா தொழிதல் கயற்கண்ணாய்!
மங்கை மாதர் பெருங்கற்பென்று
அறிந்தேன், வாழி! காவேரி!.........

மன்னும் மாலை வெண்குடையான்
வளையாச் செங்கோலது வோச்சி
கன்னி தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி! காவேரி!
கன்னி தன்னைப் புணர்ந்தாலும்,
புலவா தொழிதல் கயற்கண்ணாய்!
மன்னுமாதர் பெருங் கற்பு என்று
அறிந்தேன், வாழி! காவேரி!"......

மாதவி : அத்தான்! அழகான பாடல்...சுவையான இசை... ஆனல்...?

கோவலன் : என்ன மாதவி?

மாதவி : பாட்டின் பொருளில்......

கோவலன் : பொருளில்......? சந்தேகமா?...... காவேரி வாழ்த்துப் பாடினேன்...காவேரிக்கு உரியவனை கரிகாற் சோழன், கங்கையையும் வெற்றி கொண்டான்! அப்படி அவன் வடநாட்டில் படையெடுத்து, கங்கையைத் தன்னோடு சேர்த்துக்கொண்டதைக் கண்டும் முதல் மனைவியான காவேரி அவனோடு கோபிக்கவில்லை. பிணங்கவில்லை...இது கற்புள்ள பெண்களின் இலக்கணம். அப்படிப்பட்ட கற்புடைய காவேரி நதியே...நீ வாழ்க என்பதே கருத்து!

மாதவி : ஓகோ, சரி! காவேரியிருக்கும்போது கங்கையைச் சேர்த்துக் கொண்டவன், உங்

கள் பாட்டின் படி அதோடு நிற்கவில்லையே...

[இசையுடன் பாடிக் காட்டுகிறாள்.]

''மன்னும் மாலை வெண்குடையான்
வளையாச் செங்கோல் அதுவோச்சி;
கன்னி தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய், வாழி, காவேரி!''

கோவலன்: ஆமாம்......பாடினேன்!......காவிரியிருக்கக் கங்கையைக் கூடியவன், அதோடு நிற்காமல், பாண்டியரை வென்று, கன்னியாக் குமரியையும் சேர்த்துக் கொண்டான்! அதை கண்டுக், கரிகாலனோடு வெறுப் படையாமல், பிணங்காமல் இருந்த கற்புக்கரசி காவேரியே, நீ வாழ்க!......

மாதவி: சரிதான்! கணவன் கங்கையோடும் கூடுவான்; குமரியோடும் ஓடுவான் அதைக் காவேரிபோலப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமோ? அத்தான்! இந்தப் பாடல் உங்கள் பாதுகாப்பிற்காகப் பாடினீர்களோ? கண்ணகியைவிட்டு மாதவி......பிறகு மாதவியைவிட்டு...?

கோவலன்: மாதவி! தவறாகப் பொருள் கொள்ளாதே! நான் பாடியது கரிகாலன் பெருமையையும், காவேரியின் வளத்தையும் எடுத்துக் காட்டத்தான்!

[மாதவி இப்போது அவனிடமிருந்து யாழைப் பெறுகிறாள்.]

மாதவி: இதோ, நான் பாடுகிறேன்!

''மருங்கு வண்டு சிறந்தார்ப்ப,
மணிப்பூ ஆடை அது போர்த்துக்
கருங்கயற்கண் விழித்தொல்கி,
நடந்தாய் வாழி காவேரி!
கருங்கயற்கண் விழித்தொல்கி
நடந்த வெல்லாம் நின் கணவன்
திருந்து செங்கோல் வளையாமை
அறிந்தேன்! வாழி! காவேரி!......''

கோவலன்: ஓகோ! காவேரி மங்கை வளங் குறையாமல் இருப்பதற்குக் காரணம், அவள் கணவன் சோழனுடைய சிறப்புதான்! கணவன் பண்போடு நடப்பதால், காவேரி சிரித்து மகிழ்ந்து செழிப்பு தருகிறாள்! இதுதானே உன் பாட்டின் கருத்து? அதாவது... காதலன் அன்போடு இருந்தால் காதலியும் அன்போடு இருப்பாள்! எனக்கு உன்மீது அன்பு குறைந்தால், உனக்கு என் மீது அன்பு குறைந்து...பிறகு அந்த அன்பு வேறொருவனிடம்...

மாதவி: (துடுக்கிட்டு) அத்தான்!......நன்றாக இருக்கிறது. நீங்கள் பாட்டுக்குப் பொருள் கூறும் அழகு!

[யாழைக் கீழே வைத்துவிட்டு எழுந்து போகிறாள்.]

கோவலன்: மாதவி...

[அழைத்துக்கொண்டே பின்னால் போகிறான். ''மாதவி, நில்!'' என பின்னால் விரைகிறான். அங்கே வலைகளுக்கிடையே ஒரு செம்படவப் பெண் நின்றுகொண்டிருக்கிறாள். அவளைக் கோவலன் பார்க்கிறான். செம்படவப் பெண் கோலத்தில், மாதவியே மீன் காயவைப்பது போல் தெரிகிறது, அவனுக்கு! அப்படி ஒரு கற்பனை அவன் உள்ளத்தில் எழுகிறது.

கோவலன்: ஆகா......தேன் நிறைந்த நீலோற்பலப் பூவின் தண்டுகளைக் கையிலேந்திப் புலாலை உண்ணவரும் பறவைகளை ஓட்டுகின்ற இந்தப் பாவையின் கண்களோ மிகக் கொடியன!......ஆகா!...... பொழில் தரும் நறுமலர்! பழுதறு திருமொழி! முழுமதி புரை முகம்!......

[மாதவி நின்று கவனிக்கிறாள். அதைக் கவனியாத கோவலன் செம்படவப் பெண்ணை, மாதவியெனக் கற்பனை செய்தவாறு பேசுகிறான்]

கோவலன்: அடடா! நகைநட்டு ஏதுமின்றி எழில் சொட்டும் பருவத்தாள்! புகையொத்த கொடிபோல நெளிந்தாடும் உருவத்தாள்! இடையோ ஒரு பிடிக்குங் காணாத இளம்பிடி! இதழ்களிலே தேன் ஒரு படி! இல்லை இவளுக்குக் குறையென்னும் புகழ்பெற்ற முல்லை! பேச்சிலோ கிள்ளை! இவளை விடுமோ காதல் தொல்லை?...

[என்று கூறி உடனே பாடவும் ஆரம்பித்து விடுகிறான்]

''திரைவிரி தருதுறையே
திருமணல் விரிஇடமே
விரைவிரி நறுமலரே!
மிடைதரு பொழிலிடமே—
மருவிரி புரிகுழலே
மதிபுரை திருமுகமே!
இருகயல் இணைவிழியே
எனை இடர் செய்தவையே!''

[எனப் பாடிக்கொண்டு அருகே போகிறான். அருகே சென்றதும், அவள் மாதவி அல்ல—செம்படவப் பெண் என்று தெரிகிறது!......... அவளும் மிரண்டு, வேறு பக்கம் போகிறாள். அதுகண்ட மாதவி, அதிகக் கோபமுற்று வசந்தமாலையிடம் சென்று முறையிடுகிறாள்.]

மாதவி: பார்த்தாயா, வசந்தமாலை?

வசந்தமாலை: பார்த்தேன், பார்த்தேன்! மாதவி! ஊடலுக்கும் ஒரு அளவு வேண்டும்.........

மாதவி: அவருக்கு என்னைத் தவிர வேறு யாரிடத்திலோ விருப்பம் ஏற்பட்டிருக்கிறது. அதை அவரால் மறைக்க முடியவில்லை. உண்மை வெளிப்பட்டு விட்டது! இருக்கட்டும்; வேண்டுமென்றே நான் அவர் மனதை நோக வைக்கிறேன்! நானும் வேறொரு ஆடவர்பால் காதல் கொண்டதுபோல் நடித்து...........

வசந்தமாலை: வேண்டாம் மாதவி!... விளையாட்டு வினையாகிவிடப் போகிறது!...

மாதவி: அதெல்லாம் ஆகாது! நீ போய் விடு... அவர் வருகிறார்!

[அங்கே ஒரு வீரனுடைய சிலை இருக்கிறது. அந்தச் சிலையை மாதவி உற்றுப் பார்க்கிறாள். சிலை, கோவலன் சிலைபோலக் கண்ணுக்குத் தெரிகிறது; சிலையிலுள்ள வீரனுக்குரிய உடைகளுடன்!]

மாதவி : காதல் தலைவரே! நீர் என்னை உண்மையான காதலோடு தேடிவரவில்லை! என் பற்களை மெய்யாகவே முத்துக்கள் என்று கருதி, அவைகளை விலைபேசும் வர்த்தகன்போல என்னிடம் வந்தீர் !..............இதழ்களிலே பவளமிருக்கிறது; அதை எடுத்துப் போகலாமென்று கள்வனைப்போல் என்னிடம் வந்தீர்! கன்னத்துச் சிவப்பைக் காட்டு ரோஜா எனக் கருதி, கேட்பதற்கு ஆளில்லை......பறித்துப் போகலாம் என எண்ணி என்னிடம் வந்தீர்!...

நீர் எப்படி நினைத்து வந்திருந்தபோதிலும், என் உள்ளங் கொள்ளை கொண்டீர்! உடல், உயிர், அழகெல்லாம் உமக்கே சொந்தம்! சிலைபோல நிற்கின்ற ஆருயிரே! தென்னைமரச் சோலையிலே என்னைத் தழுவிடவே எப்போது வருகின்றீர்?......... புன்னை மரத்தில் அன்னம் உட்கார, அதைச் சூழ்ந்திருக்கும் பூக்களெல்லாம் விண்மீன் என்றும், நடுவில் உள்ள அன்னந்தான் அமுத நிலவென்றும் நினைத்துக் கொண்டு அல்லி மலர் பூத்துவிடும் அழகிய பூம்புகார் நகரத்துக் கலைப் பெண்ணாள் — மாதவியைக் காதலால் துடிக்கவிடாமல்......

கண்ணாளா வந்துவிடும்!
மாவீரா வந்துவிடும்!
மன்னவரே வந்துவிடும்!

கோவலன் :(கோபமுடன்) நிறுத்து...!நிறுத்து மாயக்காரி, நிறுத்து!

மாதவி : அத்தான்!

கோவலன் . சே, அத்தான்! விலை மகளே! நிலையில்லா மனம் படைத்த குலம் விளங்க வந்துற்ற குடிகேடி! கலை காட்டி — கயல்விழி காட்டி—மயல் முழுதும்காட்டி—மயக்குகின்ற பெண் பேயே!.........உனை நம்பி உழுமிழந்தேன்! வளமிழந்தேன்! நலமிழந்தேன்! உற்றார், பெற்றார், உழுவலன்பு கொண்ட நண்பர், அனைவருமே வெறுக்கின்ற பண்பு கொண்டேன்! உத்தமியாம் கண்ணகியின் உயிர் கருக்கி—உளம் வருத்தி உற்சாகச் சகதியிலே இதுவரையில் வீழ்ந்து கிடந்தேன்! இன்றுணர்ந்தேன் — நீ யார், நின் குலத்தின் பழம் பெருமையென்ன என்ற சேதி!.........



மாதவி : அத்தான்! போதுமத்தான் போதும்! இந்தப் பொல்லாங்கு நேர்வதற்கோ பொழுது விடிந்தது?

கோவலன் : பொழுது விடிந்தது! பொற் கோழி கூவிற்று! புனித நன்மலராம் கண்ணகியை வாடவிட்டுப் புழுதியிலே கிடக்கின்ற பொங்கல்தனை உண்ண வந்தேன்! அந்த இருட்டு மதி நீங்கிடவே பொழுது விடிந்ததடி; பொல்லாதவளே! பொழுது விடிந்தது!

மாதவி: அய்யோ! எனக்கு ஒன்றுமே விளங்கவில்லையே! நான் என்ன குற்றம் செய்தேன்?...

கோவலன் : ஆகாகா......கைகாரி! கானல்வரி நான் பாட, நீ யார் மேலோ மனம் வைத்து மாயப் பொய் பல கூட்டும் காதல் மொழி சிந்தியதை இந்தக் காதுகளால் கேட்டிருந்தேன்!......கணிகை வீட்டுக் கட்டுத்தறியும் கண்காட்டி ஆள் மயக்கும் என்ற உண்மைதனை அறியாமல் ஏமாந்தேன்!...

மாதவி: அத்தான்! சகிக்க முடியாத சொல்லம்புகளால் என்னைக் கொல்லாதீர்கள்! மாதவி கணிகைதான்! ஆனாலும் மன்னரே; உமையன்றி என் மனம் யாரையும் நினைத்ததுமில்லை...நினைக்கப் போவதுமில்லை... நம்புங்கள் என்னை!......

கோவலன் : காலையரை ஏமாற்றக் காட்சி வரி, கண்கூடு வரி...முதலிய எட்டுவகை நடிப்பு வரியும் கற்றவளடி நீ......தெரியும் எனக்கு! குமிழம்பூ மூக்கும், குவளை மலர்க் கண்ணும் கொண்டு, கொவ்வைப்பழம் போன்ற வாய் மொழியால் இனி இந்தக் கோவலனை ஏமாற்ற ஒருககாலும் முடியாது!...அதோ, சிலையாக இருக்கின்றானே உன் இலட்சியக் காதலன், அவன் வரும் வரையில் காத்திரு! அவன் பொருள்தரும் வரையில் காதலியாய் இரு! பின்...காமக் கடையைக் கட்டி, அவன் எதிரே வேறொரு சீமானிடம் நடையைக் கட்டு!...போ...போ...உன் குலத் தொழிலைக் குறைவின்றி நடத்து! கோணல் மதி படைத்தவளே! குலமற குணங் கொண்டவளே! போ,போ!...என் எதிரே நிற்காதே... போ!...போ!!...

மாதவி: அத்தான்! அத்தான்!! அத்தான்!!!

[கோவலன் போகிறான், அதை விட்டு! மாதவி, பின்னே ஓடுகிறாள். அவன் நெடுந்தூரம் போய்விடுகிறான்! மாதவி, ஓடி மணலில் விழுகிறாள்.]

தண்ணீரெல்லாம் தகத்தகாயம்;
தங்க நிறக் கதிரோன் செய்மாயம்

[புகைப்படம்: அமிர்தம்]

வாழி காவேரி

நம் வீடுகளில் குழாயைத் திறந்ததும் வரும் நீரைப் பருகும்போதும், புறத்தூய்மைக்குப் பயன்படுத்தும் போதும், "இந்த நீர் எங்கிருந்து எப்படி", நம் வீட்டில் யாரால் கொண்டு சேர்க்கப்படுகிறது?" என்று நம்மில் எத்தனை பேர் சிந்திக்கிறோம்? அருளற்றவர்கள் ஏழைகளது துயர் கண்டு போலிக் கண்ணீர் சற்றே சிந்துவதுபோல் நம் வீட்டுக் குழாயிலும் நீர் சிந்தும்போதுதான் நமக்கு ஆத்திரம் வருகிறது; அருகிலுள்ள தண்ணீர் வழங்குதுறை ஓவர்சியரைப் பார்க்கிறோம்; தண்ணீரின் அவசியத்தை உணருகிறோம்.

"நீர் இன்று அமையாது உலகெனின் யாா"
யார்க்கும் வான் இன்று அமையாது ஒழுக்கு"

என்னும் குறளால் நீரின் இன்றியமையாமையை இயம்பும் உலகுக்கு நீதிவழங்கு வான் வந்த வள்ளுவரின் வாக்கு நினைவிற்கு வருகின்றது. நம் பழம் தமிழ்ப் பெருங்குடிகள் நீரைப் போற்றினர்கள். "மாமழை போற்றுதும்! மாமழை போற்றுதும்!" என்று நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்திலே இளங்கோ அடிகள் போற்றிப் புகழ்கின்றார்.

நம் அன்றாட வாழ்வுக்கு மிகவும் தேவையான நீர், நம் வீட்டிலேயே எளிதில் கிடைக்கும்படிச் செய்வது சென்னை மாநகராட்சியே.

மாநகர முதல்வர்
வி. மனைசாமி

சென்னை மாநகருக்குத் தண்ணீர் வழங்கத் திட்டத்தைத் தீட்டியவர் திரு ப்ரேசர் என்பார். அவரது யோசனையின் படி 1872–ஆம் ஆண்டில், தாம்பரம்பாக்கம் கொற்றலையாற்று நீரை புழலேரியில் தேக்கி, அதனைச் சென்னை நகருக்குள் பெருங் குழாய்கள் மூலம் கொண்டுவர ஏற்பாடு செய்யப்பட்டது. அந்நாட்களிலே தண்ணீர் வடிகட்டப்படவில்லை. ஆனால், இந்நிலை நீடிக்கவில்லை. நகரின் பெருகி வரும் மக்கட் தொகைக்கும், தொழிற் கூடங்களுக்கும் ஏற்ப அவ்வப்போது அபிவிருத்திகள் செய்யப்பட்டன. மிகப் பெருஞ் செலவில் 6 66 000 மக்களுக்குப் போதிய அளவிற்கே அந்நாளில் நீர் வழங்குத் திட்டம் வகுக்கப்பட்டது.

ஆனால், இன்றோ சென்னை மாநகரின் மக்கட் தொகை 20 இலட்சமாகப் பெருகி வளர்ந்துவிட்டது. சென்னையில் நாளுக்கு நாள் தொழிற் கூடங்கள் பல தோன்றி வளருகின்றன. இவைகளுக்கே பெரும் அளவு நீர் தேவைப்படுகிறது. வேண்டுவோர்க்கு வேண்டுமளவு நீர் வழங்க வேண்டியது சென்னை மாநகராட்சியின் தலையாய பொறுப்பாகிவிட்டது. தளரா முயற்சியுடன்—அயரா ஊக்கத்துடன்—பொருட் செலவினையும் பொருட்டாகக் கருதாது—திட்டங்கள் பல நகராட்சியால் உருவாக்கப்படுகின்றன.

1. நீர் வழங்கும் விஷயத்தில் இம்மாநகரை ஒன்பது வட்டாரங்களாகப் பிரித்தல்.

2. ஒவ்வொரு வட்டாரத்திற்கும் தேவையாகும் நீரை கீழ்ப்பாக்கம் நீர் நிலையத்திலிருந்து பெருங் குழாய்கள் மூலம் தகுந்த அழுத்த வேகத்தில் கொண்டு சேர்த்தல்.

3. நவீன முறையில் சுகாதாரத்திற்கேற்ப அதி வேகமாக இயந்திரங்களைக் கொண்டு நீரை வடிகட்டுதல்—ஆகிய அம்சங்களைக் கொண்ட விரிவான அபிவிருத்தித் திட்டத்திற்கு ரூ. 400 லட்சம் செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

வடசென்னையில் தண்ணீர் குறைபாடு நீண்ட நாட்களாகத் தீர்க்கப்படாத பிரச்சினையாக இருந்து வந்துள்ளது. ரூ 62.52 லட்சம் செலவில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், வட சென்னைக்கு 33 அங்குலம் பெருங் குழாய் அமைக்கும் வேலை தொடங்கப்பட்டுள்ளது.

மேலும், கோடம்பாக்கம் வட்டாரத்திற்கு நீர் வழங்க அனுகூலமாக ரூ. 14.86 லட்சம் செலவில் தனியே பெருங் குழாய்கள் அமைக்கபடவிருக்கின்றன. 5 அல்லது 6 ஆண்டுகளுக்குள் இவை போன்ற தண்ணீர் பெருங் குழாய்கள் பிற வட்டாரங்களிலும் அமைக்கப்படும். இவையாவும் நிறைவேறியதும் நீர் நிலைமை முழுவதும் திருப்திகரமாகிவிடும் என்று நம்பலாம்.

தண்ணீரை அதிக அளவில் வழங்கிவிட்டால் மட்டும் போதாது. தண்ணீரில் நோய் செய்யும் கிருமிகளும், நச்சுத் தாவரப் பொருட்களும் இருத்தல் பேராபத்தை விளைவிக்கும். பொது மக்களின் உடல் நலனுக்கு ஊறு ஏற்படா வகையில் நீர் வடிகட்டப்படுதல் வேண்டும். 1914-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட 17 தாமத மணல் வடிகட்டிகளும், 1957–ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட அதி வேக இயந்திர வடிகட்டியும் நீரை வடிகட்டி, நகர் வாழ் மக்களுக்கு ஊட்டி வருகின்றன. நகர்வாழ் மக்களின் வாழ்க்கையில் எதிலும் வேகம் தான் காணப்படுகிறது. அவர்களது வாழ்க்கையின் வேகத்திற்கேற்ப நீரும் அதிவேகமாக வடிகட்டப்பட்டு வழங்கப்பட வேண்டியதாகிறது. எனவே பழைய மணல் வடிகட்டிகளின் ஆமை வேகத்தால் பயனில்லை. ஆகவே ரூ. 80 லட்சம் செலவில் அதி வேக இயந்திர வடிகட்டிகளை மேலும் அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. 3-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் இது செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சத்தியமூர்த்தி சாகரத்திலிருந்து புழலேரிக்குக் கொண்டு வருவதற்குள் 500 மில்லியன் கன அடி நீர் ஆவியாக மாறிவிடுகிறது. அதனையும் பாதுகாத்து நகருக்குள் கொண்டு வந்தால் ஓரளவுக்கு நகர் நீர் பிரச்சினை தீரும். ஆகவே, ரூ. 250 லட்சம் செலவில் பூண்டியிலிருந்து புழலேரி வரை மூடுவாய்க்கால் கட்டும் திட்டம் பரிசீலனையில் உள்ளது. இவ்வேலை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முடிக்கப்படலாம்.

நகருக்குத் தேவையான நீரை தாம்பரப்பாக்கம் கொற்றலையாற்றிலிருந்து சென்னைக்குப் புறம்பேயுள்ள புழலேரியில் தேக்கிக் கொள்வதாக அறிந்து, அதனால் நகரின் நீர் நிலை திருப்திகரமாக இருப்பதாக எண்ணிவிட முடியவில்லை. தனி மனிதனின் வாழ்க்கை வளமாக அமைய வேண்டுமாயின், அவன் பல வகையில் பொருளீட்ட வேண்டிய நிலையில் இருக்கின்றான். ஒரு வழியில் மட்டும் வரும் ஊதியத்தைக் கொண்டு அதனை நிலையானதென்றுகருதி அமைதி காண முடிவதில்லை. காரணம், பல வழியி

லும் பொருள் வருமாயின் நம்பகமாக வாழ்க்கை நடத்தலாம் என்னும் கருத்தேயாகும்.

அதேபோல், நகர்வாழ் மக்களின் வளமான வாழ்விற்குத் தேவையாகும் நீருக்கு ஒரே வழியை நம்பியிருப்பது எப்போதும் ஆபத்தாகிவிடுகிறது. வானம் சுருங்கில், நீர் பெறுவது எங்ஙனம் என்று ஏங்கி வானம் பார்க்கும் பயிர்கள்போல் பரிதாப நிலையில் நிற்க வேண்டியதாகிறது. பல வழிகளால் நிரந்தரமாகத் தண்ணீர் பெறவேண்டியதன் அவசியத்தையும் அவசரத்தையும் நாம் நாளும் உணர்ந்து வருகின்றோம்.

தமிழ்ப் பெண்ணினத்தின் கற்புக்குக் காவியக் கோயில் எடுத்த இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்திலே, கானல் வரியிலே,

"திங்கள் மாலை வெண்குடையான்
சென்னி செங்கோ லது [வோச்சி
கங்கைதன்னைப் புணர்ந்தா [லும்
புலவாய் வாழி காவேரி,"

என்று அருமையாகப் போற்றிப் புகழ்ந்து பாடிய காவேரி ஆற்றின் வளமான நீரை—பாரியின், பச்சையப்பரின் வள்ளல் தன்மை போன்று பெருகி வரும் நீரை நகருக்குள் கொணர்ந்துவிட்டால், அன்னை காவேரி சென்னையில் அடியெடுத்து வைத்துவிட்டால், நீருக்குக் குறைவு முண்டோ? நல்வாழ்வுக்குத் தடையுமுண்டோ? காவேரி எங்கே; சென்னை எங்கே; இடையிலுள்ள தொலைவு என்ன; இது ஆகக்கூடிய காரியமா? என ஐயுறுவாருமுளர். சந்திர மண்டலத்திற்குப் பயணம் போகும் இக் காலத்திலே காவேரியாற்று நீரை சென்னைக்குக் கொண்டு வருவதென்பது செயல்படக்கூடிய "இன்பம் பயக்கும் வினை" யாகும்.

சென்னை மாநிலத்தை அடுத்துள்ள ஆந்திர, கேரள, மைசூர் நாட்டு உடன்பிறந்தோர்: தமக்குத் தேவையான அளவுக்கும் மேலாகப் பெருகி வரும் நீரை நமக்கும் சிறிது அளித்தால், அது காலத்தால் செய்த உதவியாகி ஞாலத்திலும் மாணப் பெரிதாகி நிற்குமன்றோ! அவர்கள்தம் நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் வெள்ளத்தால் சேதம் ஏற்படாதன்றோ? காவேரியின் வளமான நீரை சென்னை நகர்வாசியும் பருகி சுகவாழ்வு பெறுவதும் சாத்தியமாகாதோ? அதற்கு ஐந்தாண்டுத் திட்டமென்னும் அருள் நோக்கு தான் தேவை.

நீரின் நிலை, அபிவிருத்தி, இனிச் செய்ய வேண்டுவன ஆகியவற்றை பற்றிப் பார்த்தோம். இனி, பொதுமக்களுக்கு ஒரு சொல். நம் நாட்டிலே பாட்டிமார்கள் தங்கள் பேரப்பிள்ளைகளுக்குப் பெண் பார்க்கப்போகும் நேரத்தில், பெண் தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துகிறாள் என்றால், வாழ்க்கையில் பிற பொருட்களிலும் சிக்கனமாக இருந்து, தான் புகுந்த வீட்டை விளங்க வைப்பாள் என்று சொல்வர். நம் நகருக்குத் தேவையான தண்ணீர் பெருஞ் செலவில் கொண்டுவரப்படுகிறது. அதனைச் சிக்கனமாகப்பயன்படுத்தி பாட்டி போன்று பழமையான சென்னை மாநகராட்சியின் பாராட்டுதலைப் பொதுமக்கள் பெறவேண்டும்.

அலையோடு போராட புறப்பட்ட அணிவகுப்பு
—புகைப்படம்: பி. குருமூர்த்தி

காலை

வெண்ணிலவு மேற்றிசையில் ஒளிமங்கிச் சாயும்!
விடிவெள்ளி கீழ்த்திசையில் புன்முறுவல்
பூக்கும்!
பண்ணெழுப்பும் வரிவண்டு! முல்லைமலர் நாறும்!
பசுங்குழவி விழிமலர்த்திக் காலுதைத்துக்
கத்தும்!
கண்ணுறங்கா துறங்குகின்ற இளந்தாயின்
கைகள்
கைக்குழந்தை உடல்வருடும்! பூமணத்தை வாரி
மண்ணெழுந்து குளிர்காற்று மெல்லவந்து
சேரும்
மரக்கிளைகள் சலசலக்கும்! மலர்ந்துவரும் காலை!
கொல்லையிலே இளநாகு கன்றுன்னிக் கத்தும்!
குடிசெய்ய நீர்மொள்ளும் குடத் தோசை
கேட்கும்!
எல்லையிலே நிற்கின்ற பெருமலையின் உச்சி
எரிஇட்ட சூளையைப்போல்பனிப்பு
கையைக் கக்கும்!
முல்லைநில இடைப் பெண்கள் தயிர்கடையும்
ஓசை
முறைகெட்ட மலையருவி இசைப்பாட்டை
ஒக்கும்!
மெல்லமெல்ல ஒளிபெருகும்! ஊர்விழித்துக்
கொள்ளும்!
விடிவெள்ளி எழத்தொடங்கும்!
விரைந்துவரும் காலை!
வாலுயர்த்தி இளங்கன்று தாய்மடியை முட்டும்!
மடிகறக்கும் நல்லாயன் கலம்நிறையும்
தீம்பால்!
காலுயர்த்திப் பாய்ந்தோடும் கட்டவிழ்த்த காளை!
கடைமுன்றில் மாக்கோலம் கைத்திறத்தைக்
காட்டும்!
கோலுயர்த்தி எருதோட்டி உழவுபடை தூக்கிக்
கொல்லைக்குச் செல்கின்ற நல்லுழவன்
இன்றேல்
வேலுயர்த்தி அரசாளும் எந்நாடும் என்றும்
விடியாதே எனச்சொல்லி விடியவரும் காலை!
வல்லிருளைப் புறங்கண்டு வாழுமுயிர் ஓம்பும்!
மண்ணுலகும் விண்ணுலகும் வாழ்வளித்துக்
காக்கும்!
எல்லையிலா நெடுங்கால இயற்கைதந்த வான
எழிற்செல்வம், தீச்செல்வம்! ஒளிச்செல்வம்!
பாழாம்
மெல்லிசையில் குயில்பாட விரிந்தமலர் நாற
விரைந்தோடும் நீள்குன்ற அருவிமுழ வார்க்க
கொல்லர்தீ உலைபழுக்கும் நெடுமாடச் செப்புக்
குடம்போல வானுயரும்! குளிர்ந்துவரும் காலை!

கவிஞர் வாணிதாசன்

நெல்லிடைப் புல்

ஒரு நாள் இரவு எட்டு மணி இருக்கும். ஒரு காலத்தே சோழ நாட்டின் தலை நகராகச் சீருஞ்சிறப்புடன் திகழ்ந்த திருவாரூர், பார்ப்பனச் சேரித் தெரு திண்ணையொன்றில் முதிர் பருவமுடைய நாலைந்து மறையவர்கள் உட்கார்ந்திருந்தனர். அவ்வீட்டுக்காரர் வாயிலில் நின்று கொண்டிருந்தனர். ஏழாண்டுப் பருவமுள்ள சிறுவன் ஒருவன் அவர் பக்கத்தில் நின்று கொண்டிருந்தான்.

அச் சிறுவன் ஏதோ கூறிக்

புலவர் குழந்தை

கொண்டிருந்தான். அச்சிறுவன் கூறுவதை அவர்கள் மிக்க வியப்புடன் கண்ணுங் கருத்துமாய் உற்றுக் கேட்டுக் கொண்டிருந்தனர். அச்சிறுவனுக்குப் பக்கத்தில் நின்றவர், உவகையும் வியப்பும் ஒருங்கு கலந்த முகத்துடன் அச் சிறுவனைப் பார்த்தபடியே நின்று கொண்டிருந்தார்.

யார் அந்தச் சிறுவன்? அம்முதியோர்களைப் பார்த்து அவன் என்ன கூறினன்? அம்முதியோர்கள் அவ்வாறு வியப்போடு கேட்கும்படி அச்சின்னஞ் சிறுவனுல் அப்படி என்ன கூறியிருக்க முடியும்? அவன் அம்முதியோர்களைப் பார்த்து கைநீட்டிக் கைநீட்டிப் பேசுவதைப் பார்த்தால், கடாவிடையோடு கருத்துச் செறிவுடன் பேசும் பெரும் பேச்சாளனுகவன்றோ தோன்றுகிருன்? அவன் பேசுவதைக் கேட்டுக் கொண்டு, அவனைப் பார்த்தபடியே அவ்வளவு உவகையுடன் பக்கத்தில் நின்று கொண்டிருப்பவர் யார்? இக் காட்சி சிறந்த ஒரு நாடகக் காட்சியாகவன்றோ இருக்கிறது? ஆம்; தமிழர் வாழ்க்கை வரலாறென்னும் அமிழ்திடை நஞ்சைக் கலக்கும் நாடகக் காட்சிதான்!

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' 'யாமறிந்த புலவரிலே வள்ளுவர்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை; உண்மை வெறும்புகழ்ச்சி யில்லை' என்னும் சிறப்புக்குரிய வள்ளுவர் வாழ்க்கை வரலாற்று நாடகக் காட்சிக்குள் ஒன்றுதான் இக் காட்சி. 'வள்ளுவர், ஆதி என்னும் பறைச்சிக்கும், பகவன் என்னும் பார்ப்பானுக்கும் பிறந்தவர்' என்று தொடங்குகிறது வள்ளுவர் வரலாற்று நாடகம். அந்நாடகத்தின் கட்டியக்காரன் காட்சிதான் மேலே கண்ட காட்சி.

தமிழர் வாழ்க்கைச் சட்ட நூலாகிய திருக்குறளைச் செய்து, தமிழர் பெருமையைக் கல்மேல் எழுத்துப்போல் நிலைபெறச் செய்த வள்ளுவரின் பெற்ருேர் எனப்படும் ஆதியும் பகவனும், அக்காலத் தமிழ் வழக்கப்படி ஒருவரை யொருவர் காதலித்து, களவொழுக்கமொழுகிக் காதல் முதிர்ந்து, பெற்ருேரும் சுற்றமும் அறிய மணஞ் செய்துகொண்டு, இல்லறம் இனிது நடத்தி வள்ளுவரைப் பெற்று வளர்த்துப் பெருமையுடன் வாழ்ந்தார்களில்லை. அவர்கள் தமிழர் பண்பாட்டுக்கு, பழக்க வழக்கத்திற்கு மாருக, மணம் செய்துகொள்ளாமல் வள்ளுவரைப் பெற்றனர்.

ஆதியைக் காதலித்த பகவன், அவளை மணக்கத் தன் உயர்சாதி இடந் தராதென மறுத்து, அவளைக் கூட்டிக்கொண்டு ஒருவருக்கும் தெரியாமல் ஊரைவிட்டே ஓடிவிட்டான். அவ்வாறு ஓடினவன் தன் ஊருக்குச் சென்றிருந்தால் அது உடன் போக்கு, அல்லது கொண்டுதலைக் கழித்தல் என்னும் களவியற் பிரிவில் ஒன்ருயடங்கும். ஆனுல், பகவன் தன் ஊர் செல்லாமல் எங்கேயோ ஓடித் தமிழர் ஒழுக்க முறைக்கே ஒரு மாசை உண்டாக்கிவிட்டான். அவ்வாறு ஓடிய அவர்கள், நாடோடிகளாக ஊர் ஊராய்த் திரிந்து வந்தார்கள்.

அவ்வாறு நாடோடி வாழ்க்கை நடத்தி வந்த அவர்கட்கு உப்பை, உறுவை, வள்ளி, ஔவை என்ற பெண் மக்களும், வள்ளுவர், அதிகமான், கபிலர் என்ற மூன்று ஆண் மக்களும் பிறந்தனர். ஆதியும் பகவனும் தாங்கள் செய்து கொண்ட முன்னேற்பாட்டின்படி அப் பிள்ளைகளைப் பெற்ற அவ்வவ்விடத்திலேயே வைத்து விட்டுச் சென்றனர். அக் குழந்தைகளைக் கண்டோர் எடுத்து வளர்த்து வந்தனர். வள்ளுவர் சென்னை மயிலாப்பூரிலுள்ள ஒரு பறையரால் எடுத்து வளர்க்கப்பட்டார். இவ்வாறு தொடங்குகிறது வள்ளுவரின் பிறப்பு வளர்ப்பு நாடகம்! அப்பிள்ளைகள் எழுவருள், கடைப்பிள்ளையான கபிலன் தான் நமது சின்னஞ் சிறுவன்.

ஆதியும் பகவனும் ஊர் சுற்றிக்கொண்டே திருவாரூர் சென்றபோது ஓர் ஆண் குழந்தை பிறந்தது. வழக்கம்போல் அவர்கள் பெற்ற அப்பிள்ளையை அங்கே வைத்துவிட்டுச் சென்றனர். அப்பிள்ளையை ஒரு பார்ப்பனர் கண்டு எடுத்துப்போய், கபிலன் என்று பெயர் வைத்து வளர்த்து வந்தார்.

கபிலன் ஏழாண்டுப் பருவத்தைக் கடந்து எட்டாவதாண்டை அடைந்தான். மனுமுறைப்படி (மனு 2-36) அது பூணூலணிய வேண்டிய பருவம். எனவே, கபிலனது வளர்ப்புத் தந்தை அவனுக்குப் பூணூற் சடங்கு (உபநயனம்) செய்ய அவ்வூர்ப் புரோகிதரை அழைத்தார். அஃதறிந்த அவ்வூர்ப் பார்ப்பன முதியோர் சிலர் கபிலன் வீட்டுக்கு வந்து, அவன் தந்தையை அழைத்து, 'இச்சிறுவன் நமது மரபில் பிறந்தவன் அல்லனுகையால் இவனுக்குப் பூணூற் சடங்கு செய்யக் கூடாது' என மறுத்தனர். அது கண்ட வளர்ப்புத் தந்தையார் செய்வதறியாது மனங் கலங்கி நிற்கக் கண்ட கபிலன், கடவுள் திருவருள் பெற்று, உண்மையறிவுற்று, அச்சாதி வெறி பிடித்த அப்பார்ப்பன முதியோர்களைப் பார்த்து, 'பிறப்பிலே சாதி வேற்றுமையில்லை' யென்பதை, ஏதுவும் எடுத்துக்காட்டும் பொருந்த, எளிய இனிய அகற்பாவினுல் ஆணித்தரமாக எடுத்துக் கூறினுன். அச்சீரிய தெளிவுரையைக் கேட்ட அப்பார்ப்பனர்கள் பூணூற் சடங்கு செய்ய உடன்பட்டனர். கபிலன் கூறிய—பாடிய—அவ்வகவல் கபிலர் அகவல் என வழங்குகிறது.

> "ஒட்டியர் மிலேச்சர் ஊணர் சிங்களர்
> இட்டிடைச் சோனகர் யவனர் சீனத்தர்
> பற்பலர் நாட்டிலும் பார்ப்பார் இலையால்"

> "நால்வகைச் சாதியிந் நாட்டினில் நாட்டினீர்
> பெற்றமும் எருமையும் பிறப்பினில் வேறே
> அவ்விரு சாதியின் ஆண்பெண் மாறிக்
> கலந்து கருப்பெறல் கண்ட துண்டுமோ"

எனச் சாதிவேற்றுமைக் கொடுமையைத் தவிடு பொடியாக்குகிருன் ஏழாண்டுப் புலவன்!

அவன் அத்துடன் நிற்கவில்லை. தன் உடன் பிறந்தவர்களான உப்பை, உறுவை முதலிய அறுவர்களின் வாழ்க்கை வரலாற்றையும் எடுத்துக் கூறுகிருன். உப்பை, உறுவை, வள்ளி, ஔவை, வள்ளுவர், அதிகமான், கபிலர் என்னும் எழுவரும் உடன்பிறந்தார் என்பதற்கும் ஆதி பகவன் மக்கள் என்பதற்கும் சான்ருக உள்ளது கபிலரகவல் என்னும் இச்சிறு நூலேயாகும்.

134 அடிகளே உடைய அவ்வகவல், சொல்லில் சிறிதே யெனினும், பொருளில் மலையினும்

மாணப் பெரிதாகும். அத்தகு ஆன்ற பொருட் செறிவும் செய்யுட் சிறப்புமுடைய அவ்வகவல், ஏழாண்டுச் சிறுவனால் பாடப்பட்டதென்பது, அதுவும் ஆசுகவியாக அறையப்பட்டதென்பது முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பது போலாகுமன்றோ? ஏதோ பல்லாயிரத்திலொருவர்க்குப் பத்தாண்டுப் பருவத்திலேயே கவியுள்ளம் வாய்க்கப் பெறுமெனினும், கபிலரகவல் போன்ற அத்தகு சிறந்த கருத்தமைந்த கவி பாட முடியாததொன்றாகும்.

பின் எப்படிப் பாட முடிந்தது என்பதற்குத்தானே, எதற்கெடுத்தாலும் கடவுளின் திருவருட்டன்மை கற்பித்துத் தமிழ் மக்களின் அறிவியலாராய்ச்சித் திறனைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கி வரும் அத்திருவருள் வந்து குறுக்கே நிற்கிறது? அத்திருவருட்பேறின்றி அச்சிறுவன் அவ்வகவலைப் பாடியிருந்தால் அவனுக்குத் தனிப் பெருமை. தமிழ் மக்கள் தனிப்பெருமையடையக்கூடாது என்பதற்காகக் குறுக்கே நிற்பது தானே திருவருள்!

இத்திருவருட் பேறு முன்னுக்குப் பின் முரணாக அமைந்துள்ளது. ஆதி பத்துமாதம் சுமந்து பெற்ற பிள்ளைகளைப் பெற்ற அப்போதே எறிந்து விட்டுப் பிரிந்து செல்ல மனந் துணியாமல் பிரிவாற்றாது வருந்துவது கண்ட ஒவ்வொரு பிள்ளையும் பிறந்த அப்போதே, தாய் வயிற்றிலிருந்து வெளிவந்த அப்போதே, கடவுளின் திருவருளால் உண்மையறிவும், கவிப்புலமையும் கைவரப் பெற்று, ஒவ்வொரு வெண்பாப் பாடித் தாயைத் தேற்றியனுப்பினதாகக் கூறப்படும் ஏழு வெண்பாக்கள் உள்ளன. அவ்வெண்பாக்கள் ஒவ்வொன்றும் 'காரிகையோடு தொல்காப்பியங்' கற்று கவி சொல்லும் நாவலர்களும் கண்டு பொறாமை கொள்ளும்படி அத்தகு சிறப்புடன் திகழ்கிறது.

"கண்ணுழையாக் காட்டில் கடுமுள்
மரத்துக்கும்
உண்ணும் படி தண்ணீர் ஊட்டுவார்—
எண்ணும்
நமக்கும் படியளப்பார் நாரியோர் பாகர்
தமக்குந் தொழிலதுவே தான்."

இவ்வெண்பா, கபிலர் பிறந்தபோது பாடித் தாயைத் தேற்றிய வெண்பாவெனக் கூறப்படுகிறது. என்னே கடவுளின் திருவருட் பெருக்கு? இத்தகைய சீரும் சிறப்பும் செறிவும் நிறைவும் திட்பமும் நுட்பமும் உடைய அழகிய வெண்பாப் பாடற்கமைந்த திருவருள் இருக்க, ஏழாண்டுக்குள் மீண்டும் கடவுள் திருவருள் பெறுவானேன்? அன்றடைந்த புலமை என்னானது? அப்பொழுதே நீங்கிவிட்டதெனின், அத்திருவருளின் பெருமைப்பாடு எத்தகையது?

இரண்டாண்டுப் பருவத்தில் திருவருள் பெற்ற மெய்கண்ட தேவரும், மூன்றாண்டுப் பருவத்தில் திருவருள் பெற்ற திருஞான சம்பந்தரும், ஐந்தாண்டுப் பருவத்திலே திருவருள் பெற்று ஊமை நீங்கிப் புலமையுற்றுக் கவிபாடிய குமர குருபரரும் என்றும் அப்புலமை நீங்காமல் அப்படியே இருந்ததாகக் கூறும்போது கபிலருக்கு மட்டும் பெற்ற திருவருட் பேறு நீங்கி மறுபடியும் அப்பேறுபெறவேண்டியதன் காரணமென்ன?

எனவே, கபிலரகவல் ஏழாண்டுச் சிறுவனான கபிலன் பாடினானென்பதும், கபிலன் கூற்றைக் கேட்ட பார்ப்பனர் தங்கள் கொள்கையை விட்டுப் பூணூல் சடங்கு செய்ய உடன்பட்டனர் என்பதும் கட்டுக்கதையேயாகும். இன்னார் பிள்ளையென்றே தெரியாதபோது உடன்படாத அவர்கள், புலைச்சி பிள்ளையென்பதை அறிந்த பிறகு எவ்வாறு உடன்படுவர்?

இனி, கபிலர் பாடியதாகக் கூறப்படும் அவ்வகவலில் கபிலர் தன்னைப் பற்றியும், தன் உடன் பிறந்தாரைப் பற்றியும், தன் பெற்றோரைப் பற்றியும் கூறுகிறார். அப்பகுதிதான் இங்கு ஆராய்ச்சிக்குரியது.

"பார்ப்பன மாந்தர்காள் பகர்வது
கேண்மின்!

அருந்தவ மாமுனி யாம்பகவற்குக்
கருவூர் பெரும்பதிக் கட்பெரும் புலைச்சி
ஆதி வயிற்றில் அன்றவ தரித்த
கான்மூளை யாகிய கபிலனும் யானே.

என்னுடன் பிறந்தவர் எத்தனை பேரெனில்,
ஆண்பால் மூவர், பெண்பால் நால்வர்
யாம்வளர் திறஞ்சிறி தியம்புவல் கேண்மின்!



பொற்சிலையல்ல; வெள்ளியில் சித்திரம்!

புகைப்படம்: டி. பி. எஸ். சுந்தரநாதன்

ஊற்றுக் காடெனும் ஊர்தனில் தங்கியே
வண்ணா ரகத்தில் உப்பை வளர்ந்தனள்.
காவிரிப்பூம் படடினத்தில் கள்விலைஞர்
சேரியில்
சான்றா ரகந்தனில் உறுவை வளர்ந்தனள்.
நரப்புக் கருவியோர் நண்ணிடு சேரியில்
பாண ரகத்தில் ஔவை வளர்ந்தனள்.
குறவர் கோமான் கொய்தினைப் புனஞ்சூழ்
வண்மலைச் சாரலில் வள்ளி வளர்ந்தனள்.
தொண்டைமண் டலத்தில் வண்டமிழ்
மயிலைப்
பறைய ரிடத்தில் வள்ளுவர் வளர்ந்தனர்.
அரும்பார் சோலைச் சுரும்பார் வஞ்சி
அதிகன் இல்லிடை அதிகமான் வளர்ந்தனன்.

பாரூர் நீர்நாட் டாரூர் தன்னில்
அந்தணர் வளர்க்க யானும் வளர்ந்தேன்"
—கபிலரகவல்

அருளிளங் கவியாகிய கபிலரோ தம்மைக் கடைசிப் பிள்ளையாகக் கூறிக்கொள்கிறார். தம் அக்கைமார்களையும் அண்ணன்மார்களையும் வரிசையாகக் கூறுகிறார். அருட் கவியல்லவா!

ஊற்றுக்காடு, காவிரிப்பூம்பட்டினம், வள்ளி வளர்ந்த திருத்தணிகை, மயிலை, வஞ்சி, திருவாரூர் ஆகிய ஊர்களோ ஒன்றுக்கொன்று நூற்றுக் கணக்கான கல் தொலைவில் உள்ளவை. இவர்கள் பெற்றோராகிய ஆதியும் பகவனும், இவர்களைப் பெற்ற அப்பொழுதே, இவர்கள் பிறந்த அவ்விடத்திலேயே வைத்துவிட்டுச்சென்றுவிட்டனர். அப்பிள்ளைகளை யார் யார் எடுத்து வளர்த்தனர். அல்லது, அப்பிள்ளைகள் என்னாயின என்பது அப் பெற்றோர்களுக்கே தெரியாது. என்னவோ பிள்ளை பெற்றோம் என்பதுதான் அவர்கட்குத் தெரியும். அக்காலத்தோ ஊரி, தொடர் வண்டி, அஞ்சல் முதலிய போக்கு வரத்து வசதிகள் ஒன்றுமில்லை. இவர்களை எடுத்து வளர்த்தவர்களுக்கும் இவர்கள் இன்னாருடைய பிள்ளைகள் என்பது தெரியாது. அப்படித் தெரிந்திருந்தால் இவர்களை அவர்கள் எடுத்து வளர்த்திருக்கவே மாட்டார்கள்.



ஆடிவரும் வண்டினுக்கு
மலர்கள் இதழ் விரிக்கும்!

பாடிவரும் பாணனுக்குப்
பாண்டியன் கை திறக்கும்!

வாடிவரும் பயிர்களுக்கு
வான்முகில் பை சுரக்கும்!

நாடிவரும் முரசொலிக்கு முன்
நெஞ்சு நெகிழாதோ?

கபிலருடைய வளர்ப்புத் தந்தைக்கே கபிலர் இன்னாருடைய பிள்ளை என்பது தெரியாதல்லவா? 'யாரோ பாவம்' பெற்று வைத்துவிட்டுச் சென்றுவிட்டனர் என்ன காரணமோ; யார் கண்டார்? பச்சைக் குழந்தை பாவம்! தனியாகக் கிடக்கிறது!' என்றுதானே எடுத்துப் போய் வளர்த்து வந்தனர்? பார்ப்பானுக்கும் பறைச்சிக்கும் பிறந்த குழந்தையென்று தெரிந்திருந்தால் அவர் கையால் தொட்டிருப்பாரா என்ன? பக்கத்தில்கூடப் போயிருக்கமாட்டார் அல்லவா?

இவ்வாறிருக்க, கபிலருக்கு எப்படித் தெரியும் தன் உடன் பிறந்த அறுவரின் பேரும், அவர்கள் பிறந்து வளர்ந்துவரும ஊரும, எடுத்து வளர்த்து வருபவர் சாதியும அவ்வளவு பொட்டுக் குறித்தாற்போல? தன் அண்ணன்மார் ஊர்கட்கும், அக்கைமார் ஊர்கட்கும் அடிக்கடி போய் வருபவர் போலல்லவோ கூறுகிறார்? எங்கேயோ ஒரு மூலையில் உள்ள 'ஊற்றுக்காடு' என்னும் சிற்றூர்கூடத் தெரிந்திருப்பதைப் பார்த்தால் உலக வரலாற்றையே அன்றே இவர் எழுதியிருந்தாலும் எழுதியிருப்பார் போலல்லவோ தோன்றுகிறது?

கபிலரகவல் என்னும் நூல், நமது ஏழாண்டு பருவக் கபிலன் பாடியதன்று; வேறு கபிலரும பாடியதன்று. அது பிற்காலத்தில் யாரோ ஒருவரால் பாடப்பட்டது. அவரோ, அல்லது வேறொருவரோ வள்ளுவர் வாழ்க்கைக் குறிப்புக்காக, இப்பகுதியைப் பாடி அதில் சேர்த்துவிட்டனர் என்பது வெளிப்படையாகும். இதற்கு அவ் வகவலிலேயே சான்றுகள் பலவுள்ளன.

'உப்பை வளர்ந்தனள், உறுவை வளர்ந்தனள், வள்ளுவன் வளர்ந்தனர், அதிகமான் வளர்ந்தனன்' என இறந்த காலத்தால் கூறுவதை நோக்கினால், அன்னார் காலத்திற்கு நெடுங் காலத்திற்குப் பின்னர் இருந்த ஒருவர் பாடியதென்பது வெளிப்படை. அதிகமான் கபிலர்க்கு ஓரிரண்டாண்டுக்கு முன்னரும், வள்ளுவர் மூன்றல்லது நான்காண்டுகட்கு முன்னருந்தானே பிறந்திருப்பர்? கபிலருக்கு ஏழாண்டென்றால், அதிகமானுக்கும் வள்ளுவருக்கும் முறையே எட்டு, பத்து ஆண்டுகள்தானே இருக்கும்? அப்படியிருக்க, வளர்கின்றாள், வளர்கின்றார் என நிகழ் காலத்தால் கூறுவதுதானே பொருத்தமுடையதாகும்? ஏதோ நீண்ட காலத்திற்கு முன் இருந்தவர்களைப்போல, 'வளர்ந்தனள், வளர்ந்தனர்' என்பதே கபிலருக்கும் இக் கூற்றுக்கும் யாதொரு தொடர்பும இல்லையென்பதற்குச் சான்றாகும்.

மேலும், பகவனுக்கு, 'அருந்தவ மாமுனி' என்ற அடையும், ஆதிக்கு, 'பெரும் புலைச்சி' என்ற அடையும் கொடுத்திருப்பதே இது கபிலர் கூற்று அல்லவென்பதைத் தெள்ளத் தெளியக் காட்டுவதாகும். தந்தையை 'அருந்தவ மாமுனி' என்று உயர்த்திக் கூறிவிட்டு, பத்து மாதஞ் சுமந்து பெற்ற தாயை, 'பெரும் புலைச்சி' என்று அவ்வளவு இழிவுபடக் கூறுவதா பிள்ளைக்கழகு? தாய் இன்னார் என்றுதான் கபிலருக்குத் தெரியாதே? மேலும், பார்ப்பனர் பிள்ளையல்ல



கிரகப் பிரவேசம்
கிரகச்சாரம்
கிரகக் கோளாறு
'கர்ப்ப'க் கிரகம்
நவக் கிரகம்
9

வென்று பூணூற் சடங்கு செய்ய மறுப்போரிடம் பெரும் புலைச்சி பெற்ற பிள்ளை என்று தன்னைக் கூறிக்கொள்வது எங்ஙனம் அறிவொடு பட்டதாகும்? பகவன் உயர் குலத்தினன் என்பதையும், ஆதி இழி குலத்தினள் என்பதையும் காட்ட எழுந்ததேயாகும் இக் கூற்று.

இனி, வள்ளுவரை 'வளர்ந்தனர்' எனவும், அதிகமான் 'வளர்ந்தனன்' எனவும் கூறியிருப்பதிலிருந்தே இது வள்ளுவரைப் பற்றி, வள்ளுவர் வாழ்க்கை வரலாறுபற்றி பிற்காலத்தொருவர் கூறிய கூற்றே யென்பதும், கபிலர் கூற்று அல்லவென்பதும் வெளிப்படையாகும். வள்ளுவரைப் புலவர் நிலையில் வைத்து 'வளர்ந்தனர்' என உயர்வுப் பன்மையாகவும், அதிகமான் அரசன் நிலையில் வைத்து 'வளர்ந்தனன்' என ஒருமையாகவும் கூறுகிறார். இது தன் காலத்தவரான, தனக்கு இரண்டு மூன்றாண்டுகட்கு முன் பிறந்தவரான தன் அண்ணன்மார்களைப் பற்றிக் கபிலர் கூறிய கூற்றாகவே ஆகாது இது. எனவே, இப் பகுதி வள்ளுவர் வரலாற்று நாடகத்திற்காகவே அண்மைக் காலத்திலிருந்த ஒருவரால் பாடிக் கபிலரகவலில் சேர்க்கப்பட்டதென்பதில் சிறிதும் ஐயப்பாடில்லை. பெற்றோர் இன்னார் என்று தெரியாது ஐயுற்றுச் சடங்கு செய்ய மறுத்த பார்ப்பனரிடம் 'பெரும் புலைச்சி கான்முளை' என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொள்வதே இது கபிலர் கூற்றல்லவென்பதற்குச் சான்றாகும்.

கபிலர், வள்ளுவர் காலத்தே இருந்த கடைச் சங்கப் புலவருள் ஒருவராவர். கடைச் சங்க நூல்களான பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, கீழ்க்கணக்கு என்னும் மூவகை நூல்களிலும் கபிலர் பாட்டுக்கள் உள்ளன. 'கபிலரது பாட்டு' என்னும் இலக்கண எடுத்துக்காட்டு இவரது புலமைத் திறனைப் புலப்படுத்தும். இவர் பாடிய பாட்டுக்கள் எதிலும் கபிலர் அகவல் போன்ற புரட்சிக் கருத்துக்கள் இல்லை.

கபிலர் கடைச் சங்கப் புலவர் 49-ன்மரில் ஒருவராவர். திருக்குறள் அரங்கேற்றியபோது, சங்கப் புலவர்கள் 49 பேரும் திருவள்ளுவரையும் குறளையும் புகழ்ந்து ஒவ்வொரு வெண்பாப் பாடினர். அவ்வெண்பாக்கள், 'திருவள்ளுவ மாலை' என்னும் பெயருடன் வழங்குகின்றன. திருவள்ளுவ மாலையின் ஐந்தாவது பாட்டான 'தினையளவு போதா' என்பது கபிலர் பாடிய வெண்பாவாகும். அதில், 'வள்ளுவனார் வெள்ளைக் குறட்பா விரி' என மற்ற புலவர்கள் போலவே வள்ளுவரைப் பொதுவாகவே கூறுகிறார். வள்ளுவரின் ஊர் பேர் முதலியன வெல்லாந் தெரிந்திருந்த கபிலர் வள்ளுவரைக் கண்டதும், அல்லது வள்ளுவர் தம்மை இன்னார், இன்ன ஊர் எனச் சொன்னதும் அளவிலா மகிழ்ச்சி கொண்டு, 'என்னுடன்பிறந்தார், என் அண்ணர்' என்று சங்கப் புலவர்களிடம் வள்ளுவரை அறிமுகம் செய்திருப்பாரல்லவா? ஒன்றுவிட்ட, அல்லது தூரத்துப் பங்காளி ஒருவர் செல்வத்திலோ, கல்வியிலோ, அதிகாரத்திலோ சிறப்புற்றிருந்தால், 'எங்கண்ணன்' என உரிமை கொண்டாடுதல் மக்களியல்பாயிருக்க, தமிழ்ச் சங்கமே புகழும் அத்தகு சிறப்புடைய வள்ளுவரை 'எங்கண்ணன்' என்று உரிமை பாராட்டாமல், பிறர் போல, 'வள்ளுவனார்' என்று கூறியிருப்பார்?

இனி, இக்கபிலர் இளமையில் கபிலரகவல் பாடியிருந்தால், தமது தோழர்களான சங்கப் புலவர்களுக்கு அதைக் காட்டாமலா இருந்திருப்பார்? அப்புலவர்கள் அவ்வகவலைப்படித்திருந்தால் திருவள்ளுவரைப் பற்றியும் அறிந்திருப்பாரல்லவா? மேலும், தாம் பாடிய மற்ற பாக்களை அரங்கேற்றிய கபிலர், அவ்வகவலையும் அரங்கேற்றியிருப்பாரல்லவா? மற்றும் திருக்குறள் அரங்கேற்றத்தின்போது அங்கு வந்திருந்த ஔவை யாரைப் பற்றியும் கபிலர் இன்னாரென்று—தன் உடன் பிறந்தாரென்று தெரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

திருவாலங்காட்டில் சிவன் ஆடிய திருக்கூத்தை மயிலையிலிருந்தபடியே கண்டு களித்த வள்ளுவருக்குக் கபிலர் தம் உடன் பிறந்தவர், ஔவை தம் உடன் பிறந்தவர் எனத் தெரியாதிருக்க, கபிலருக்கு மட்டும் எப்படித் தெரிந்திருக்கக் கூடும்? வள்ளுவர் திருவருட்டிறனை விடவா கபிலர் திருவருட்டிறன் சிறந்தது?

மேலும், சங்க கால வள்ளல்களிலொருவனான தகடூர் அதிகமானே இவ்வதிகமானவான். 'அரும்பார் சோலைச் சுரும்பார் தகடூர்' என்பதே 'வஞ்சி' என மாறியிருக்கலாம் போலும். அல்லது கொங்கு நாட்டுக் கருவூருக்கு 'வஞ்சி' என்றபெயரும் உண்டு. அதிகமானை எடுத்து வளர்த்த அதிகமான் அவ்வஞ்சிவரையிலும் ஆண்டிருக்கலாம். ஔவையார் அதிகமானுக்காகத் தொண்டைமானிடம் தூது சென்றுள்ளார். அதிகமான் ஔவைக்கு அருநெல்லிக்கனி கொடுத்துப் புகழ்ந்துள்ளான். ஆனால், ஔவையார்க்கு அதிகமானுந் தானும் உடன் பிறந்தவரென்பது தெரியாது.

எனவே, 'கபிலர் அகவல்' திருவருள் பெற்ற ஏழாண்டுச் சிறுவனான கபிலன் பாடியதன்று. கபிலரகவலில் வரும் ஆதிபகவன் மக்களான உம்மை, உறுவை முதலியோர் வரலாறு வள்ளுவரின் போலிக் கதைக்காகப் பிற்காலத்தே எழுதிச் சேர்க்கப்பட்டது. அல்லது, கபிலரகவலே, இப்போது உள்ளபடி—வள்ளுவர் பிறப்பு வளர்ப்பெல்லாம் கூறும் பகுதியுடன்—பிற்காலத்தில் ஒருவர் பாடி. இளங்கவிஞனாகிய கபிலன் பாடினானென எழுதி வைத்ததேயாகும்.

இத்தகைய கற்பனைக் கதைகள், 'நெல்லிடை முளைக்கும் புல்' போன்ற போலிக் கூற்றுக்கள் தமிழர் வரலாற்றிடை நிரம்பவுள்ளன. அப்போலிப் பொய்க் கூற்றுக்களான புற்களைக் களைந்து தமிழர் வரலாறென்னும் நெற்பயிரை வளமுற வளர்ப்பது தமிழறிஞர் பெருமக்களின் நீங்காக் கடமையாகும். உடனடியாகத் தமிழர் வாழ்க்கை வரலாற்று நெல்லிடைப் புல்லாகிய போலிப் பொய்க் கூற்றுகளைக் களைக!



காளைக் காதல்

கவிஞர் **கம்பதாசன்**

ஏரைத் தழுவிடவே —நம்
இளங்காளை வாராரடி!
பாரடி, பாரடியே —உன்
பங்கயக் கண்ணாலே!

வரகுதாள் பிரிமனைபோல்—தலை
வாகான முண்டாசு;
கருப்பாட்டு கொம்பதுபோல்—முறுக்
கான இளமீசை;

குட்டை பனை காய்போல்—திரண்டு
கொழுத்த இருதோள்கள்;
பொட்டு துலங்கும் நுதல்; —காட்டு
பூவாடும் பாறைமார்பு;

நெய்யுருக்கும் தீச்சுவலை —செழும்
நிறங்காட்டும் சாயவேட்டி;
கையிலே நூல்கட்டு; —இரும்பு
காலில் கழல்மணியே....!

காட்டுப் பன்றியொன்று—மெள்ள
கனத்து நீர் யானையாய்
நாட்டுக் களரியிலே —அதோ
நமன்போல் நிற்குதடி!



குத்தீட்டிக் கொம்புடனே— ஏறும்
குமுறு திடிபோலே
எத்திப் பிடிப்பாரோ? —அதிலே
இட்டபொன் எடுப்பாரோ?

சின்ன வயதினிலே —என்றன்
செவிலியே சொன்ன கதை
கண்முன் தெரியுதடி! —அச்சம்
கரகமாய் ஆடுதடி!

வெறுந்தூ ணெனநினைத்து
—முன்னில்
வீராப் புடன்சென்றேன்
குருதிக் குடல்பிடுங்கி—அன்றோர்
கோளரி நின்றதன்றோ?

ஏர்முன் நின்றபடி —கன்னி
எண்ணம் பிடிக்கும்அவர்
பார்வீழா தம்மாலே —என்றன்
பரிசாக வீழாதோ?

புன்னைக் குழலிசைக்க,
—வெண்ணெய்
போன்ற நிலவினிலே
இன்பக் குரவையிட்டு — காதல்
இணைவிழி பேசாதோ?

கொல்லை கொடிமுல்லை;—கூரை
குடிவாழ் குறும்கௌளி
சொல்லும் பலியாதோ—அதோ
சோர்ந்துவிழும் ஏரினைப்பார்!

கொம்பும், முரசொலியும்—ஜெய
கோஷக் குரலொலியும்
அம்மாவின் செவியெட்டி—மகிழ்ந்
தாலம் எடுப்பதைப்பார்!


துவாரபாலகர்
சப்த கன்னியர்
'மே'னகை
மே
63
கி(பு)ராண' பாத்திரங்கள்
அறுபத்து மூவர்

இப்படை தோற்கின்...?

நாட்டு விடுதலைக்காக திராவிட மக்கள் தங்களது இறுதிப் போராட்டத்தைத் துவங்கிவிட்டனர்.

விடுதலைத் தணலை மூடிவிடும் நோக்கத்தில் திலகரை பர்மாவுக்கு அனுப்பியதுபோல், டில்லி அரசு அறிஞர் அண்ணாவைக் கைது செய்து காஷ்மீரத்துச் சிறைச்சாலையொன்றில் காவல் வைத்திருக்கிறது.

இரவு நேரம்........

நடுக்கும் குளிரில் போர்வையால் உடலை மூடிக்கொண்டு, அறிஞர் அண்ணா சிறையிலே படுத்திருக்கிறார். திரை உயர்கிறது.

காட்சி-1

சிறைக் கம்பிகளுக்கு வெளியே முக்காடு போர்த்திய வாலிபன் ஒருவன் மெதுவாக சிறைக் கம்பிகளைத் தட்டுகிறான். அண்ணா தலை நிமிர்ந்து பார்க்கிறார்.

அண்ணா: யாரது?

வாலிபன்: திராவிடத்திலிருந்து வந்திருக்கிறேன்.

அண்ணா: என்ன ? திராவிடத்திலிருந்தா?
[எழுந்து வருகிறார்]

வாலிபன்: உங்களால் நம்பமுடியாது. நீங்கள் காண்பது கனவுமல்ல; வரப்போகும் திராவிட நாட்டைப்போல் நான் வந்திருப்பதும் உண்மை அண்ணா, உண்மை!

அண்ணா: உன்னைத் தெரியவில்லையே எனக்கு!

வாலிபன்: உங்கள் தம்பிகள் ஒருவரா, இருவரா நினைவில் வைத்திருக்க? நான் கடலில் ஒரு துளி; மலையில் ஒரு அணு!

அண்ணா: எல்லாம் விசித்திரமாக இருக்கிறது; நீ வந்திருக்கும் காரணம்?

வாலி: விந்தியத்திற்கு அப்பால் எரிமலை குமுறிக்கொண்டிருக்கிறது. நெருப்புக் குழம்பைக் கக்குவதற்கு உங்கள் அனுமதி தேவை!

அண்ணா: அப்படியென்றால்......?

வாலி: திராவிட முன்னேற்றக் கழகம் என ஒன்று இருந்ததாகவோ; அது தனி நாடு கேட்டுப் போரிட்டதாகவோ சான்றுகள் இல்லாதபடி எல்லாவற்றையும் அழித்துவிடுவதென்று முடிவுசெய்துவிட்டனர், ஏகஇந்தியப் பித்தர்கள்! அடுத்த வாரம் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தடை செய்யும் மசோதா டில்லிப் பாராளுமன்றத்தில்வரஇருக்கிறது. அண்ணா! இனியும் ஓட்டு முறையை நம்பிக்கொண்டு இருப்போமேயானால் நமது இலட்சியமெல்லாம் கனவாய்—கதையாய்ப் போய்விடும். எந்த முறையில் இதுவரை நீங்கள் நம்பிக்கை வைக்கவில்லையோ; எந்த முறையைப் பின்பற்றுவது கூடாது என்று எங்கள் கரங்களைக் கட்டிப்போட்டீர்களோ; அந்த வேட்டு முறைக்கு எங்களை யெல்லாம் வழியனுப்பிவைத்து எங்கள் வீரத்தைச்சோதிக்க இதுதான் அண்ணா கடைசி சந்தர்ப்பம்.

அண்ணா: வாலிபனே ! உன் அண்ணன் அறிய மாட்டானா தம்பிகளின் வீரத்தை? வேட்டு முறையைப் பின்பற்றியிருந்தால் இந்தக் காட்டுராஜாக்களின் தர்பார் இந்நேரம் ஓட்டைப்படகாகியிருக்குமென்பது எனக்குத் தெரியாதா? நான் அறிவேன்—அறிந்தும் அமைதியாக இருக்கச் சொல்கிறேன். ஏன்? ஆமையைப் பார்த்து அடங்கியிரு என்று சொல்வதிலே அர்த்தமில்லை. பூனையைப் பார்த்துப் பொறுமை பேசுவதிலே பொருளில்லை. அது கோழைத்தனத்திற்குப் போடப்படும் வீரவேஷம். நான் புலியைப் பார்த்துப் பாயாதே என்கிறேன். சிங்கத்தைப் பார்த்துச் சினத்தை அடக்கு என்கிறேன். —அதுதான் அறவழி. வள்ளுவன் காட்டிய புதுவழி. எத்தனை பேர்களை இவர்களால் சிறைபிடிக்க முடியும்? சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைவிட வலிமை பெற்றவர்களா இவர்கள்? அவர்களே காந்தியாரின் அறவழிக்குப் பணிந்துவிட்டபோது இவர்கள் எம்மாத்திரம்? தம்பி! சுபாஷ் சந்திரபோஸ் வரலாறு உனக்கு நினைவிருக்கிறதா? உலக வரலாற்றில் எந்த மாற்றமும் விவாதத்தால் ஏற்பட்டதில்லை என்றார். அமைதி என்று கூறும் காந்தியார் உபயோகமில்லாத மரச் சாமான்; அதைத் தூக்கி எறிந்து

மாறன் எம்.ஏ.

விடுங்கள் — என்று முழக்கமிட்டார். இந்திய விடுதலைக்கு வேட்டு முறைதான் உகந்த வழி என்று. ஜப்பானியர்கள் உதவியால், அவர்கள் சிறைபிடித்த இந்தியச் சிப்பாய்களைச் சேர்த்துக்கொண்டு, இந்திய தேசிய சேனையொன்றைத் துவக்கினர். அவர்கள் பிடித்த அந்தமான் தீவுகளில் போட்டியரசாங்கமொன்றை நிறுவி இந்தியாவிலிருந்து வெள்ளையர்களை வெளியேற்றத் தயாராக இருங்கள் என்று அறிவித்தார்—ஆனால் விளைவு என்ன? காந்தியாரின் ஒட்டுமுறையால்தான் இந்த உபகண்டத்திற்கு விடுதலை கிடைத்தது. அனிதாபோஸ் இங்கு வரும் போதுதான் பலருக்கு சுபாஷ்போஸின் நினைவே வந்தது.

வாலி: ஆனால் ரஷ்யா, சீனா—இன்னும் உலகத்தின் எத்தனையோ நாட்டு மக்கள் தலைகளை விலையாகக்கொடுத்துத்தான் விடுதலை பெற்றிருக்கிறார்கள்!

அண்ணா: பெற்றார்கள். இரத்த வெள்ளத்தில் தான் ரஷ்யாவும் சீனாவும் விடுதலைப் படகை மிதக்கவிட்டன. ஆனால் அதே கம்யூனிஸ்டு கட்சியின் இந்திய உறுப்பினர்கள் என்ன சொல்கிறார்கள்? வேட்டு முறைக்கு மூட்டை கட்டிவிட்டு, ஓட்டுமுறைக்கு ஆதரவு சேர்த்துக்கொண்டிருக்கிறார்களே, தம்பி!

வாலி: நீங்கள் சொல்வதெல்லாம் சரிதான், அண்ணா! காந்தியாரின் அறவழிக்கு வெள்ளைக்காரன் பணிந்தான். ஏனெனில் அவன் நடத்தியது நாகரிகமான ஆட்சி! அவர் உண்ணாவிரதம் இருந்தபோது தற்கொலைக் குற்றம்சாட்டி அவன் அவரைச் சிறைபிடித்து அவமானப்படுத்தவில்லை; மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று அவர் வாயிலே உணவு திணிக்கவில்லை.

புகைவண்டி நிலையங்களுக்குச் சென்று அரசாங்கத்தின் முகத்தில் கரி பூசுவதுபோல, பெயர் பலகைகளிலே உள்ள இந்தி எழுத்துக்களைத் தார்பூசி நாம் அழித்தபோது மானமுள்ள அரசாங்கமாக இருந்தால் உடனே தன்னுணர்வு பெற்று நம்மைக் கைதல்லவா செய்திருக்க வேண்டும்? எருமைத்தோல் போர்த்தவர்கள் கண்களை மூடிக்கொண்டல்லவா பாசாங்கு செய்துகொண்டிருந்தார்கள்! அதனால்தான் அண்ணா; குடியரசுத் தலைவர் ராஜேந்திரரே குறிப்பிட்டிருக்கிறார், 'கௌரவமும் சுயமரியாதையும் உள்ள அரசாங்கத்தில்தான் சத்யாக்கிரக முறை பலிக்கும்'—என்று! இன்றைய அரசாங்கத்திற்குக் கௌரவமும் இல்லை; சுயமரியாதையும் கிடையாது, அண்ணா!

அண்ணா: அப்படியானால் தம்பி, இந்த அரசாங்கத்திற்குக் கௌரவத்தையும் சுயமரியாதையையும் கற்பிக்கவேண்டிய அருமையான வாய்ப்பு நமக்குக் கிடைத்திருக்கிறது உலக வரலாற்றினைப் புரட்டிப் பார்! விடுதலை கேட்ட இனம் முடிவில் தோற்றுப் போனதாகச் சான்றே கிடையாது, தம்பி!

வாலி: நிலைமை இவ்வளவு கவலைக்கிடமாகியும் நீங்கள் எப்படி அண்ணா அஞ்சாமல் இருக்கிறீர்கள்?

அண்ணா: நான் அடிக்கடி சொல்லியிருக்கிறேனே! தம்பியுடையான் படைக்கஞ்சான்! இப்படை தோற்கின் எப்படை வெல்லும்?

வாலி: அய்யோ, அண்ணா! இன்றைய நிலை அது வல்ல. விடுதலை இயக்கத்தை எப்படி முயன்றால் அடக்கலாம் என்பதற்குப் பாரதமாதா புத்திரர்கள் இலக்கணம் வகுத்துக்கொண்டிருக்கிறார்கள். நமது தலைவர்கள் எல்லாம் எங்கே சிறை வைக்கப் பட்டிருக்கிறார்கள் என்கிற செய்தி வெற்றிகரமாக இருட்டடிப்பு செய்யப்பட்டிருக்கிறது. விடுதலை என்று வாய் திறக்கும் சிறு குழந்தைகள் தூக்கிச் செல்லப்படுகிறார்கள். மொழிப் பற்றுதானே இனப்பற்றைத் தூண்டுகிறது என்பதைப் புரிந்துகொண்டு இந்தியை வைத்து திராவிட மொழிகளை அடையாளம் தெரியாதபடி மாற்றிவிட்டார்கள். சீட்டுக் கட்டைக் கலைத்துப் போடுவதைப்போல வேண்டுமென்றே வடநாட்டவர்களைத் தென்னாட்டிற்கும், தென்னாட்டவர்களை வடநாட்டிற்கும் குடியேற்றி; மக்கட்தொகையிலே பெருத்ததொரு மாற்றம் செய்கிறார்கள். —இவையனைத்தும் நீங்கள் கைதான பிறகு நடந்த திடுக்கிடும் நிகழ்ச்சிகள், அண்ணா! அடுத்த வாரம் திராவிட முன்னேற்றக்கழகத்தைத் தடைசெய்யும் சட்டம் பாராளுமன்றத்திலே நிறைவேறிவிட்டால்... அண்ணா! என்னால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை; அடுத்த தலைமுறையில் அப்படியொரு பெயரில் ஒரு இயக்கம் இருந்ததையே மறந்துவிடுவார்கள், அண்ணா! பிறகு......

அய்யோ, அண்ணா—இப்படை தோற்கின்... வெல்வதற்கு வேறு எப்படையும் உருவாக முடியாது... உருவாக்கவிடமாட்டார்கள்.... அதனால்தான் அண்ணா, உங்களைக் கெஞ்சிக் கேட்கிறேன்—இப்படையைத் தோற்கவிடாதீர்கள்! 'வேட்டு முறையைப் பின்பற்ற அனுமதியளித்தேன்'—என்று ஒரு சமிக்ஞை காட்டுங்கள்...

உங்கள் சுட்டு விரல் அசையட்டும்; தாயின் கைகளுக்கு விலங்கிட்ட வீணர்களைச் சுட்டுப் பொசுக்குகிறோம்!

கண் ஜாடை தெரியட்டும்; செங்குருதி ஓடைதனில் செந்தாமரை மலர்களென அந்தச் சிவப்புத் தோலர்களின் தலைகளை மிதக்க விடுகிறோம்!

'உம்' என்று ஒரு சொல்; திராவிடத்தார் சிறைப் பட்டார்கள் என்றல்ல; சிறைபிடித்தார்கள் என்று நமது குழந்தைகள் நாளை வரலாறு படிக்கும்!

அண்ணா! உங்கள் அன்புத் தம்பிகளின் வீரத்திற்கு வேலை கொடுக்க அருமையான சந்தர்ப்பம் இல்லை—கடைசியான சந்தர்ப்பம்! புயல் தேங்கி நிற்கிறது; பூகம்பம் காத்திருக்கிறது; பிரளயம் விழுந்துகிடக்கிறது. அவற்றையெல்லாம் கட்டிப்போட்டிருக்கும் உங்கள் மந்திர சக்தியைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள்! புதிய புறநானூறு எழுத எழுத்தாணியை எடுத்துக் கொடுங்கள்! கலிங்கத்துப்பரணி பாட உங்கள் கண்மணி

களுக்கு அனுமதி கொடுங்கள்! இப்படையைத் தோற்க விடாதீர்கள் அண்ணா; தோற்கவிடாதீர்கள்!

அண்ணா: தம்பி! நீ உணர்ச்சிவயப்பட்டுப் பேசுகிறாய். அதோடு இந்தத் தலைமுறையிலேயே விடுதலை பெற்றிடவேண்டும் என்கிற சுயநலமும் கலந்திருக்கிறது உன் பேச்சில்! யாரும் பார்த்துவிடுவதற்குள் நீ திரும்பிப் போ!

வாலி: நான் திரும்பிப் போகவேண்டிய இடம் சிறைச்சாலைதான்!

அண்ணா: என்ன?

வாலி: நான் அங்கிருந்துதான் தப்பி வந்தேன்!

அண்ணா: தம்பி?

வாலி: அண்ணா! எனக்குப் பயம் வந்துவிட்டது; இனியும் நாம் சும்மாயிருந்தால் இப்படை தோற்றுவிடும்...... இனிமேல் சும்மாயிருக்க முடியாது; சும்மாயிருக்கவும் கூடாது...... இதையெல்லாம் மாற்ற ஒரே வழி வேட்டுமுறை! வேட்டுமுறை!! உங்கள் அறிவுரையைக் கேட்காமைக்கும், அண்ணாவின் சொல்லை மீறிய முதல் தம்பி என்ற மாப் பழிக்கு ஆளானமைக்கும் என்னை மன்னித்து விடுங்கள்!... வருகிறேன்......

அண்ணா: தம்பி... தம்பி...

[வாலிபன் புகைபோல மறைந்துவிடுகிறான். அண்ணா முகத்திலே ஒரே குழப்பம்! என்ன நடக்குமோ என்ற கவலை! அந்தக் குளிரிலும் அவர் அங்கும் இங்கும் நடந்து கொண்டிருக்க, திரை விழுகிறது]

காட்சி-2 நிழற்காட்சி

இந்தியப் பாராளுமன்றக் கட்டிடத்தின் உட்புறம்.

தெற்கு மாநிலங்களில் உள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தையும், இதர கலை அமைப்புகளையும் தடை செய்யும் சட்டத்தை சட்ட அமைச்சர் விளக்குகிறார்.

அதேநேரம் பார்வையாளர் பகுதியிலிருந்து கை வெடி குண்டுகள் வீசப்படுகின்றன.

வெடிகுண்டு ஒலியைத் தொடர்ந்து மன்றத்தைப் புகை மண்டலம் சூழ்ந்துகொள்கிறது

சென்ற காட்சியில் காஷ்மீரத்துச் சிறையில் அண்ணாவை சந்தித்த வாலிபன் வாழ்க்கையின் குறிக்கோள்நிறைவேறியதுபோல, 'திராவிடநாடு திராவிடருக்கே' என்று முழக்கமிடுகிறான். தப்பித்துப் போக அவன் எந்த வழியையும் மேற்கொள்ளவில்லை. அடுத்த வினாடியே அவனைக் காவலர்கள் சூழ்ந்துகொள்கின்றனர்.

காட்சி-3 நீதிமன்றம்

வெடிகுண்டு வீசிய வாலிபன் குற்றவாளிக் கூண்டிலே நிற்கிறான். அரசாங்கத் தரப்பு வக்கீல் அவனை விசாரணை செய்கிறார்.

பிராசிகியூடர்: பாராளு மன்றத்திலே வெடிகுண்டுவீசி, சட்ட அமைச்சரைக் கொன்றது உண்மையா?

வாலிபன்: உண்மைதான்.

பிராசி: அது மாபெரும் குற்றம் என்பதை நீ உணர்கிறாயா?

வாலி: 1929-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8-ம் தேதி இதே டில்லி சட்டமன்றத்தில் பகத்சிங்கும், அவன் நண்பனும் வெடிகுண்டு வீசியது குற்றம் என்றால் நான் செய்ததும் குற்றம்தான்!

பிராசி: பகத்சிங்கைப் பற்றி எங்கள் கருத்தை நீ அறிந்து கொள்ளத் தேவையில்லை. நீ செய்தது குற்றமா? இல்லையா?

வாலி: அதை முடிவு செய்வதற்குத்தானே என்னை நீங்கள் இங்கு கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறீர்கள்? பிறகு ஏன் என்னைக்கேட்கிறீர்கள்? தென்னகத்தின் விடுதலை இயக்கமாம் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தடை செய்யும் மசோதா படிக்கப்பட்டபோது; அதைப் படித்தவரின் உயிர் பறிக்கப்பட்டது என்பதை உலகம் தெரிந்து கொள்ளவேண்டும் — என் தாய் நாட்டு விடுதலை வரலாற்றுக்கு அது மிக மிகத் தேவையான காரியம்!

பிராசி: மனித உயிரைக் கொல்வதால் உன் தாய் நாட்டிற்கு விடுதலை கிடைத்துவிடுமா?

வாலி: இதே வழக்கு மன்றத்தில்; இப்போது நான் நிற்கும் இதே இடத்தில் நின்று கொண்டு பகத்சிங் வினியோகித்த வெளியீட்டில் கண்டிருந்ததையே நானும் திருப்பிச் சொல்ல ஆசைப்படுகிறேன்:

"செவிடர்கள் கேட்பதற்கு உரத்த குரலில் பேச வேண்டியிருக்கிறது. இந்த வார்த்தைகளை பிரெஞ்சு நாட்டு புரட்சி வீரன் வெய்லண்ட் என்பவன் சொன்னான். இந்த வாசகங்களுடன் நான் செய்ததும் நியாயம்என்று வாதிக்கிறேன்... மனித உயிரைப் புனிதமாகக் கருதும் நாங்கள்-முழு உரிமையும் நிறைவான அமைதியும் பெற்று மனித வாழ்வு இன்பமயமாக அமையவேண்டும் என்ற அழகான எதிர்காலத்தைக் கனவுகாணும் நாங்கள்—இரத்தக் காணிக்கை கேட்கும் இந்த வெறிச் செயலில் ஈடுபடவேண்டிய கட்டாயம் ஏற்பட்டதற்காக உண்மையிலேயே வருந்துகிறோம். சுதந்திரத்தைப் பெற்றுத் தர வேண்டியிருக்கும் ஒரு புரட்சியின் பீடத்தில் தனி மனிதர்கள் பலியாவது தவிர்க்கமுடியாதது"

பிராசி: சுற்றி வளைத்துப் பேசாதே! நீ செய்தது குற்றமா; இல்லையா?

வாலி: ஒருவன் செய்தது குற்றமா அல்லவா என்பதைத் தீர்மானிப்பதற்கு முன்பு அவன் நோக்கம் குற்றமுடையதா இல்லையா என்பதைத் தெரிந்துகொள்வதுதான் நீதியின் அடிப்படை! முன்னொரு சமயம் அமெரிக்காவிலே மேரிமாதாவுக்கு நர பலி கொடுத்தால் தான் கேட்ட வரம் கிட்டும் என்ற நோக்கத்தில் ஒருவன், தான் பெற்ற மழலைச் செல்வத்தையே கொன்றான். வழக்கை விசாரணை செய்த நியூயார்க் நீதிமன்றம்அவனை விடுதலை செய்தது. ஏன்? அவன் சுயநினைவோடு

சிரித்தாலும் அழுதாலும்
அழகுதான் மிஞ்சுது !

அந்தக் காரியத்தைச் செய்யவில்லை; மேரி மாதா பலி கேட்கிறுள் என்ற வெறி—மூட நம்பிக்கை--ஒருமாதிரியான பைத்தியக்காரத் தனம்—அதுதான் அவனை அந்தக் காரியம் செய்யத்தூண்டியது என்ற காரணத்தால்!

பிராசி: அப்படியானுல் நீ செய்த காரியமும் வெறி-மூடநம்பிக்கை-ஒரு மாதிரியான பைத்தியக்காரத்தனம்- அப்படித்தானே?

வாலி: அப்படி முடிவு செய்வதற்கு உங்களுக்கு என்ன யோக்யதை இருக்கிறது? 1948 ஆகஸ்ட் போராட்டத்தில் காந்தி சீடர்கள் தபாலாபீசுக்கு நெருப்புவைத்து, கொழுந்து விட்டெறியும் அந்த நெருப்பிலே சுதந்தர ஜோதியைக் கண்டபோது வெள்ளைக்காரன் அதை வெறி என்ரு வர்ணித்தான்? தண்டவாளத்தைத் தோண்டியெடுத்து அதற்கு அடியிலே சுயராஜ்யம் கிடைக்கிறதா என்று தேடியபோது அவர்களுக்குக் கிடைத்தது தங்கத் தோடா அல்லவே; இரும்பு விலங்குதானே! அத்தகைய குற்றவாளிகளெல்லாம் பின்னர் தியாகிகள் என்று கௌரவிக்கப்பட்டு; ஐந்து ஏக்கர் நிலத்தையும் பரிசாகப் பெற்றபோது, நான் செய்த காரியம் மட்டும் ஏன் இகழப்படவேண்டும்? அதனுல்தான் சொல்கிறேன்! என் படித்த நண்பரே! என் நோக்கத்தைப் பற்றி விமர்சனம் செய்ய உங்களுக்குத் தகுதியில்லை; அதற்கான காலம் 'இன்று' என்கிற நிகழ்காலம் அல்ல;'நாளை' என்கிற வருங்காலம்!

பிராசி: அப்படியானுல் நீ செய்தது தேசத் துரோகம் அல்லவா?

வாலி: அதற்குத்தான் விளக்கம் தருகிறேன், வழக்கறிஞரே; இதை என் தேசம் என்று ஒப்புக்கொண்டால் அல்லவோ நான் செய்தது துரோகமாக இருக்கமுடியும்? என் தேசம் திராவிடம்! அதற்குத் துரோகம் செய்தேனு என்பதை அவர்கள்தான் முடிவு கட்டவேண்டும். இன்றைய தியாகி நாளைய துரோகி; இன்றைய துரோகி நாளைய தியாகி! அரசியலில் இந்த வார்த்தைகளுக்கு அர்த்தம் மாறிக் கொண்டுவரும்! நீங்கள் எதை வைத்து துரோகி என்று கூறமுடியும்?

பிராசி: கனம் கோர்ட்டார் அவர்களே! இனி இவனை விசாரணை செய்ய விரும்பவில்லை. அவன் செய்த குற்றத்தின் கோரத்தையுணர்ந்து அவனுக்குத் தக்க தண்டனை அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்!

நீதிபதி: (தீர்ப்பைப் படிக்கிருர்) விடுதலை வீரன் என்ற வாலிபன் செய்த குற்றத்திற்குத் தூக்குத் தண்டனையைவிட வேறு எந்தத் தண்டனையும் குறைவாகத் தோன்றவில்லை.

[என்று எழுந்து போகிருர். தீர்ப்பைக் கேட்டு விடுதலை வீரன் ஓங்காரச் சிரிப்பு சிரிக்கிருன். திடீரென்று சிரிப்பு நிற்கிறது.]

மேல்படம் : பி. பாண்டுரங்கன், திருச்சி.
கீழே : மதருஸ் போட்டோ ஹவுஸ், வேலூர்

உலகப் பிரமுகர்கள்
சர்ச் சில்
தரு'ஷேவ்' செய்யப் படும்.
உனக்"கென்னடி?"
எனக்"கென்னடி"
யாநக்"கென்னடி"
சூ!
அடி நார்கொண்டா!
ஒளிந்து கிடக்கிறார்கள்!

வி. வீரன் (வானைப் பார்த்து) அண்ணாவே! அறிஞர் பெருந்தகையே! என்னை மன்னித்து விடுங்கள்!......உங்கள் வீரத்திருவுருவைப் பார்ப்பதற்கு எனக்கு இரு கண்கள் இருக்கின்றன! உங்கள் எழுச்சி முரசு கொட்டும் பேச்சைக் கேட்பதற்கு எனக்கு இரு காதுகள் இருக்கின்றன! உங்கள் இலட்சியப் பாதையில் நடப்பதற்கு எனக்கு இரு கால்கள் இருக்கின்றன! ஆனால் நாட்டுக்காகத் தருவதற்கு எனக்கு ஒரே ஒரு உயிர்தானே இருக்கிறது என்ற நினைப்பில்; அந்த உயிரை வீணாகச் சிறைச்சாலையிலே கழிக்காமல் இப்படி உபயோகப்படுத்திக் கொண்டேன்! எப்படியாவது இந்தச் செய்தி பரவி என்னைப்போல் மற்றவர்களும் தங்கள் உயிரை உபயோகப்படுத்த வேண்டும் என்பதற்குத்தான் தப்பிக்கவும் முயற்சி செய்யாது வட இந்தியச் சிப்பாய்களிடம் சிக்கினேன்... அண்ணா! என்னையும் என் வழியில் ஏறுநடைபோட்டு வரப்போகும் மற்றவர்களையும் மன்னித்துவிடுங்கள்.........இனி இப்படை தோற்காது. அண்ணா; தோற்காது...

[அதற்குமேல் அவனைப் பேச விடவில்லை. காவலர்கள் இழுத்துப் போகின்றனர்]

காட்சி-4 நிழற்காட்சி

விடுதலை வீரன் தூக்கு மேடைக்கு சிங்கம் போல் நடந்துவருகிறான். சோபன அறைக்குள்ளே நுழையும் மணமகனைப்போல அவன் முகத்திலே உல்லாசம்! தூக்குக்கயிற்றை முத்தமிடுகிறான். 'திராவிடநாடு திராவிடருக்கே!'— என்று முழங்குகிறான்

திடீரென்று அவன் நின்றுகொண்டிருக்கும் அடிப்பலகை இழுக்கப்படுகிறது அவன் உடல் உள்ளே செல்ல; 'திராவிடநாடு திராவிடருக்கே!' என்ற முழக்கம் முடிவுறாமல் பாதியில் நிற்கிறது.

காட்சி-5 ஒரு மலைக் குகை

ஏராளமானவாலிபர்கள்கூடியிருக்கின்றனர். ஒரு வாலிபன் கல்லின்மீது நின்றுகொண்டு பேசுவதிலிருந்து காட்சி ஆரம்பமாகிறது.

வாலிபன்: அருமைத் தோழர்களே! ஏசுநாதரை பலி வாங்கிய சிலுவை காலத்தால் மறையாத நினைவுச் சின்னமானதைப்போல, விடுதலை வீரனை விழுங்கிய தூக்குக் கயிறும் நம் சிந்தையைவிட்டு அகலாத நினைவுச் சின்னமாகிவிட்டது. அவனது உயிரைக்குடித்த பிறகாவது ஏக இந்தியப் பித்தர்களின் அடக்குமுறைத் தாண்டவம் குறையுமென்று எதிர்பார்த்த நமக்கு ஏமாற்றமே பதிலாகக் கிடைத்திருக்கிறது. 'இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்' என்றார் அறிஞர் அண்ணா. 'இப்படை தோற்கும்; இனி எப்படையும் ஜெயிக்காது' என்பதுதான் இன்றுள்ள நிலைமை. விடுதலை வீரனின் கடைசி விருப்பப்படி நாம் இப்படையைத் தோற்க விடக் கூடாது. அதற்கு வேட்டு முறையைத் தவிர வேறு வழியும் இல்லை

[அப்போது இருவர் துப்பாக்கிகளும் பல ஆயுதங்களும் நிறைந்த பெட்டியை அவனெதிரே கொண்டுவந்து வைக்கின்றனர்.]

"இதோ, நாம் நினைத்த அளவுக்கு ஆயுதங்கள் தயாராகிவிட்டன. உயிர் எவ்வளவு முக்கியம் என்பது உங்களுக்குத் தெரியும். அதைப் போலவேதான் மற்றவர்களுக்கும். தவிர்க்க முடியாது என்ற நிலை பிறந்தாலொழிய, காங்கிரஸ் அரசாங்கத்துப் போலீசாரைப்போல் மனம் போன போக்கில் துப்பாக்கியைக் கையாளாதீர்கள். விடுதலைக் கிளர்ச்சியை அவமானப்படுத்துவதுபோல் இருக்கும் சிறைச்சாலைகளை உடைப்பதும், வட நாட்டு அரசாங்கம் செயல்படாமல் தடுப்பதுமேதான் நமது நோக்கம். அந்த முறையிலே நமது பணி தொடர்ந்து நடைபெறட்டும். இந்த ஆயுதங்களை விநியோகிக்குமுன் இன்னொன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன் சரியாகக் குறி கிடைத்தது என்று நம்பிக்கை பிறக்கிறவரை துப்பாக்கிச் சனியனை இழுக்காதீர்கள்; வெடி மருந்து வீணாகிவிடும். ஏனெனில் எதிரிகள் என்மீது வைத்த குறியெல்லாம் சரியாக இருந்திருந்தாலே இந்நேரம் என் உடல் வெறும் சல்லடைக் கண்களாகத்தான் காட்சியளிக்கும்...அதனால்தான் சொல்கிறேன், புறப்படுங்கள்...

[எல்லோரும் வரிசையாக நின்று அவனிடமிருந்து ஆயுதங்களைப் பெற்றுக்கொள்ள, காட்சி முடிகிறது]

காட்சி_6 நிழற்காட்சி

பல சிறைச்சாலைகள் தகர்க்கப்படுகின்றன. மேடை முழுவதும் வெற்றி முழக்கம்; 'வாழ்க வாழ்கவே வளமார் எமது திராவிடநாடு' என்ற நாட்டுப் பண்!

காட்சி-7

அன்று இந்தியக் குடியரசு நாள். சென்னை மைதானமொன்றில் குடியரசுத் தலைவர் பேசுவதாயிருக்கும் கூட்டத்திற்கு அமைதியான நாட்களில் இருந்ததைவிட அதிகமான மக்கள் கூடியிருக்கின்றனர் நாடெங்கும் கலவரமும் குழப்பமும் மிகுந்திருக்கும் இந்த நாளில் எப்படி இவ்வளவு கூட்டம் கூடியது என்று ஆயுதம் தாங்கிய சிப்பாய்கள் ஆச்சரியப்படுவது போன்று தோன்றுகிறது, அவர்கள் முகத்தைப் பார்க்கும் போது. 'தி. மு. கழகம் மக்கள் மனதிலிருந்து அழிந்துவிட்டது என்று தலைப்பு கொடுக்கலாமா என்று தேசியப் பத்திரிகை நிருபர்கள் யோசித்துக்கொண்டிருக்கின்றனர் மேடையில் குடியரசுத்தலைவர், காமராசர், கக்கன் போன்றோர் அமர்ந்திருக்கின்றனர்

ஒருபெண் தேசிய கீதம் பாடுகிறாள்.

அந்த நேரம் மேடையிலிருக்கும் தலைவர்கள் பேசிக் கொள்கின்றனர்.

கு. தலைவர்: காமராசரே! எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது! நான் முதலில் பயந்தேன். இந்த விழாவிற்கு எந்த மக்களும் கலந்துகொள்ள மாட்டார்கள் என்று.

காமராசர்: அதெல்லாம் வெறும் கதைங்க தி. மு. க—ன்னு ஒரு கட்சி இருந்ததையே ஜனங்க மறந்துட்டாங்க. அந்த அண்ணாத்துரை நம்ப கக்கனுக்குப் போட்டியா மந்திரி

[தொடர்ச்சி 95-ம் பக்கம்]



நிறை குடம் தளும்பாது

சிந்தனைச் சிற்பி சி.பி.சிற்றரசு

படித்தவர் அண்ணா; படித் தவறியவர் காமராசர்

பதவியிலிருந்தும் பண்பு வரவில்லை; அதிகாரமிருந்தும் அதற்கேற்ற நாகரீகம் வளரவில்லை. "காலி குடம் அதிக சப்தம் செய்யும்" என்று ஆங்கிலப் பழமொழி உண்டு. அதேபோல் தலை, காலி குடம் போலிருக்கும் காமராசர் அதிக சத்தம் போடுகிறார். அதற்கு ஒத்து ஊதுகிறார் அளகேசன். 'ஆமாம், ஆமாம்' என்கிறார் சுப்ரமணியம்.

இங்கே, சென்னை மாநகராட்சி மன்றம் நாற்றமெடுக்கிறதென்று நாத்தடிக்கப் பேசியவர்கள், வேலூரில் நாலாந்தர மொழியில் முழங்கியிருக்கிறார்கள்.

அவர்களையே முழுக்க முழுக்க ஆதரிக்கும் ஆங்கில நாளிதழான 'மெயில்' பத்திரிகை கண்டித்துத் தலையங்கம் தீட்டுமளவுக்குப் பேசியிருக்கின்றார்கள்.

திட்டுவதற்கு சென்னையிலிருந்து எண்பத்தியாறு மைல்கள் சிரமப்பட்டுப் போக வேண்டியதில்லை. சென்னையிலேயே அதைச் செய்திருக்கலாம். குளிக்கப்போய் சேற்றைப் பூசிக் கொண்டு வந்தவன் கதையாக நாட்டின எதிர்காலத்தை உருவாக்கத் திட்டம் தீட்டப் போகிறோம் - என்று சொல்லி எதிர்க்கட்சிகளை மட்டந்தட்ட மார்க்கமென்ன– எனபதைப் பற்றியே பேசித் தீர்த்திருக்கிறார்கள்.

இழவு வீழ்ந்தது யார் வீட்டில்?

அந்த மேடையிலே பேசிய ஒரு அவ சரக்காரப் பெண் உறுப்பினர் "தி. மு. கழகம் சவக்குழிக்குப் போகிறது. எல்லாரும் அழலாம், வாருங்கள்!" என்றார்.

அந்தம்மையார் அழுதார் என்றால், சொந்தக்காரர்கள், அல்லது பெற்றோர்கள், நெருங்கிய நண்பர்கள் யாராவது ஒருவர் இறந்திருக்கத்தான் வேண்டும். இல்லையானால், அந்தம்மையார் அழவேண்டிய அளவுக்கு கழகத்தோடு அவர்கள் நெருங்கிப் பழகியிருக்க வேண்டும். அதுதான சரியாக இருக்கக்கூடும். என்ன பேசுகிறோம்; இவற்றிற்கெல்லாம் ஜனவரி 22-ல் கோட்டை வெளியில் எத்தகைய சூடான பதில் கிடைக்கும் — என்பதையறியாமலே திட்டித் தீர்த்திருக்கிறார்கள்.

ஓட்டல் கதை

ஒரு ஓட்டலில் [சிற்றுண்டிக் கடை] இருவர் எதிரெதிராக உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அதில் ஒருவர் கை பட்டு தண்ணீர்க் குவளை சாய்ந்து தண்ணீர்

கொட்டிவிட்டது. இதனல் ஏதோ பிரமாதமான விளைவுகள் ஏற்பட்டுவிட்டதாகக் கருதி, எதிரிலிருந்தவர் எழுந்து, ''ஏனைய்யா, உமக்கு புத்தி இருக்கிறதா? என்ன தின்கிறீர்? மாட்டுச் சாணம் தின்பவரே! மண்ணைத்தின்பவரே! அதைத் தின்பவரே! இதைத் தின்பவரே!' என்றெல்லாம் வசைமாரி பொழிந்தாராம்!

அதற்குப் பதில் சொல்லும் முறையிலே மற்றவர் நிதானமாக எழுந்து, ''ஏனைய்யா, இதற்காகக் கோபித்துக் கொள்கிறீர்? அல்வா சாப்பிடுபவரே! பகோடா சாப்பிடுபவரே! ஜிலேபி சாப்பிடுபவரே! பாதாங்கீர் சாப்பிடுபவரே!'' என்று பதில் சொன்னாராம்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த மூன்றாவது நபர், ''என்னையா சுத்தபைத்யமாயிருக்கிறீரே! அவர்எதை எதையோ கேவலமானவற்றை எல்லாம் சாப்பிடச் சொல்கிறார்! நீர் நல்ல பலகாரங்களைச் சாப்பிடுகிறவரே என்று திட்டுகிறீரே! உங்களுக்குத் திட்டவே தெரியவில்லையே!'' என்றாராம்!

அதற்கு அவர், ''ஐயா! மன்னிக்க வேண்டும். அவர் சாப்பிடுவதை அவர் சொன்னார்; நான் சாப்பிடுவதை நான் சொன்னேன். அவ்வளவுதானே தவிர, இதில் வருத்தப்படுவதற்கு ஒன்றுமில்லை. சட்டியிலிருப்பதுதானே ஐயா அகப்பையில் வரும்?'' என்று கேட்டவருக்கு சமாதானம் சொன்னாராம்.

அந்த மாதிரி, பெரிய மந்திரி காமராசரே, இவ்வளவு கீழ்த் தரமாகப் பேசும்போது நமக்கென்ன என்று நினைக்கிறார் அளகேசன்! அளகேசனே இப்படிப் பேசும்போது நமக்கென்ன என்று நினைத்து வாயை வடை சுடும் வாளி அளவுக்குத் திறக்கிறார் கக்கன்! இவர்களே இப்படி,ப் பேசும்போது நமக்கென்ன என்று நினைக்கின்றன சங்கிலி அவிழ்த்துவிடப்பட்ட 'ராச பாளை'யங்களும், 'கோம்பை களும்! இவற்றுக்கெல்லாம் வட்டியும் அசலும் சேர்த்து வாங்கப்போகும் நாள் 62-ல் இருக்கிறது.

திட்டுவதால் பலன்?

நாம் மேலே குறிப்பிட்ட படி அண்ணா அவர்கள் படித்த மேதை! அவர் கலந்துகொள்கின்ற கூட்டத்தில் வேறு யாராவது திட்டத் தொடங்கினாலும், உடனே நிறுத்தும்படிக் கேட்டுக் கொள்வார். திட்டுவதாலே ஏற்படுகின்ற விளைவுகள் என்ன என்பதை மற்ற எந்த இயக்கத்தையும்விட நம் இயக்கம் நன்றாகவே உணர்ந்திருக்கிறது.

சென்ற பொதுத்தேர்தலில் யார் யாரோ 'பண்டாரங்' களை விட்டுத் திட்டினார்கள். அதன் விளைவு இப்படியும் அப்படியும் இல்லாத பொதுமக்கள் — 'நமக்கேன் அரசியல்' என்றிருந்தவர்கள்—எல்லையருகே நின்று கொண்டிருந்தவர்கள் — சே இதுவா காங்கிரஸ்? திட்டுவதைத்தான் மேடைப்

பேச்செனக் கருதும் இந்தக் கயவர்கள் கூட்டுறவே கூடாது' என வெறுத்தார்கள்.

அதன் விளைவு தி. மு. கழகம் மட்டிலும் பெற்ற வாக்குகள் 17 லட்சம்! இது அவ்வளவும் நம் கொள்கையிலே நாட்டங் கொண்டோர்—நமதியக்கத்தின் வருங்கால வளர்ச்சியிலே ஆசை கொண்டோர் எண்ணிக்கையாகும்.

ஆகவே காலிக் குடங்கள் ஓசை எழுப்பட்டும்! காமராஜருக்கும் ஒரு வாக்குதான்; அவர் வசவுகளைக் கேட்போருக்கும் ஒரு வாக்குதான்; நம்மைத் தாக்குவோருக்கும் ஒரு வாக்குதான்!

என்றாலும் படித்தவர் அண்ணா! பதவி வெறியாலே படித்தவறியவர் காமராசர்!

வருக வருகவே 1962. அது நமக்கு பச்சை விளக்காகத் தெரிகிறது! அவர்களுக்கு சிங்கக் கனவாகத் தெரிகிறது.

சனநாயகம் ஒரு வழுக்கு நிலம்! காலடியைப் பார்த்து வைக்க வேண்டும் - அதன் உண்மை தெரியாமல் காமராசர் தில்லையம்பல நடனமாடுகிறார். 'தொப்' என்ற சத்தம் கேட்கத்தான் போகிறது!

(பெரு) பாரி வள்ளல்



அறத்தாறு

மக்களின் நல்வாழ்வுக்கே வழி காட்டிய வண்டமிழ்ப் பெருந்தகையாம் திருவள்ளுவர் தந்த திருக்குறள்—இன்றும் தமிழின் தனிச் சிறப்புக்குக்குச் சான்றாகவும், உலகோர் கண்டு வியக்கும் கலங்கரை விளக்காகவும் காட்சி தருகின்றது. உலகின் எப்பகுதியிலும், எக்காலத்திலும், திருக்குறளுக்கு மேலான, அல்லது ஈடான ஒரு நூல் இதுவரை தோன்றவில்லை.

வேத, சாத்திர, இதிகாச, புராண ஆகமப் பெருமைகளில் அலைமோதும் மனத்தினரும்—திருக்குறளின் தனிப் பெருமையை மறுக்கவோ — மாற்றவோ -- மறைக்கவோ முடியவில்லை. அதன் தனிப் பெருமைதான் யாது?

உலகியல் வாழ்க்கையை உள்ளது உள்ளவாறுகண்டு, உண்மையைத் தெளிந்து, உலகோருக்கு உறுதி பயக்கும் வழியினை ஆராய்ந்து, உலகோர் ஒப்பும் வண்ணம் வகுத்தும், தொகுத்தும், முறைப்படுத்திக் காட்டியதே குறளின் மாட்சியாகும்.

வாழ்க்கை — இன்பத்தை விழையும் இயல்புடையது. இன்பம் சிறக்க பொருள் தேவை. பொருள் பயன்மிக அறம் வேண்டும். அறம்--பொருள்--இன்பம் —மூன்றும் வாழ்க்கை என்னும் முக்கோணத்தின் மூன்று பக்கங்கள். அவை இணைந்தே வாழ்க்கையை ஒழுங்குபடுத்தி உயர்த்துவன. வாழ்க்கையின உறுதிப் பொருளான அறம் -- பொருள் -- இன்பம் மூன்றையும் வகைப்படுத்தி—முறைப்படுத்தி — வாழ்க்கையையே ஒழுங்குபடுத்துவது—திருக்குறள்.

இன்பம் விழையார் யார்? அந்த இன்பம் அறவழியில் வராதபோது — நல்லின்பம் ஆவதுண்டோ? 'பொருள்' வேண்டாதார் யார்? அந்தப் பொருள் நெறியோடு வராதபோது -- அறத்துடன் பொருந்தாதபோது பொருளாவதில்லை! எனவேதான் இன்பத்திற்கும் பொருளுக்கும் 'அறமே' அடிப்படையாகிறது.

''அறத்தான் வருவதே இன்பமற்றெல்லாம்
புறத்த புகழு மில''—

என்னும் குறள், நன்னெறியால் வரும் இன்பமே தீதற்றது; பிறவழியில் வருபவை நல்லின்பமாகா; புகழையும் தருவதன்று (பின்னர் இகழ்ச்சியாம்) என்பதைத் தெளிவாக்குகிறது. எனவே நல்லின்பம் நாடுவோர் 'அறநிலை'யில் நிற்கவேண்டும் என்பதால் இன்பத்திற்கும் 'அறமே' மூலம் என்பது பெறப்படும்.

''அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்'' -- என்னும் குறளால் ஈட்டும் முறையறிந்து பிறருக்குத் தீமை விளைவிக்காமல் தேடிய செல்வம் அறத்திற்கும் துணையாகும்—இன்பமும் நல்கும் என்பது தெளிவாகும். அருளோடும் அன்போடும் வாராப் பொருள் பொருளல்ல என்பதால்-- அறத்திலே நின்று பொருள் ஈட்டவேண்டும் என்பது வற்புறுத்தப்பட்டது.

எனவே--இன்பம், பொருள் இரண்டும் 'அற'வழியில் நிற்பவர்க்கே சிறக்கும் என்பது விளங்கும். அதையே அறத்தின் பயன் என்பர் நூலோர். இன்பமும் பொருளும் சிறத்தலால் — அறமே ஒருவருக்கு உற்ற துணையாகிறது. அதனை,

'சிறப்பீனுஞ்செல்வமும்ஈனும்அறத்தினூங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு'

என்னும் குறள் விளக்கும்.

சிறப்பாவது—புகழ்; செல்வம்-பொருள். பொருளும், புகழும் கொடுத்தலால்—அந்த

அறத்தினும் வாழ்க்கையில் உயர்வு அளிக்க வல்லது வேறு இல்லை என்பது வள்ளுவரால் வலியுறுத்தப்பட்டது.

"அறத்தினூஉங் காக்கமு மில்லை அதனை
மறத்தலி னூங்கில்லை கேடு"

என்றதால்—அறநெறியாம் நல்வழியை விட ஒருவருக்கு உயர்வு தருவதுமில்லை; அதனை மறந்து நடப்பதைவிடக் கேடுபயப்பதும் வேறு இல்லை—என்பது தெளிவாகும். எனவே திருக்குறளின் அடிப்படை அறநெறியேயாகும். அறத்தின் வழியை வற்புறுத்தவே அறன்வலியுறுத்தல் ஓர் அதிகாரமாயிற்று.

'அறம் யாது' என்பார்க்கு,

"மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற"— என்றார் வள்ளுவர்.

உள்ளத்தில் (நினைவில்) குற்றமில்லாதவனாவதே உண்மை அறமாம். அந்த மாசற்ற மனம் இல்லாதவிடத்து—அறம் என்ற பெயரால் நிகழும் எவையும் வெற்று ஆரவாரத் தன்மையுடையனவேயாகும். தூய நன்னெஞ்சு இல்லாதார்க்கு அறவழி நிற்றல் இயலாததாகும் என்பது இதனால் தெளிவாம்.

உள்ளம் தூயதாக அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல்—இவை கூடாது. பொறாமை, பேராசை, நீங்காத சினம், கடுஞ்சொல் நான்கும்--நல்வழியில் நடப்பதற்கு விடாத பகையாம் என்பதும் குறள் தரும் விளக்கம்.

உள்ளத் தூய்மையுடன் நல்வழியில் நின்று அவரவர் ஆற்ற வேண்டிய கடமைகளை -- அவரவர் ஆற்றலுக்கேற்ப இயலும் முறைகளில் — செய்யக்கூடிய வாயில்களிலெல்லாம் எல்லாரும் செய்ய வேண்டும் என்பது குறள். இதன் பயன் இன்பம் என்பதால், ஒருவன் தன் பொருட்டு (நல் வாழ்க்கையின் பொருட்டு) செய்யத்தக்கது நற்செய்கையே; தவிர்தற்குரியது பழிச் செய்கையே என்பதனை,

"செயற்பால தோறும்அறனே ஒருவற்
குயற்பால தோறும் பழி"

என்னும் குறள் வற்புறுத்தும்.

இவ்வாறு நற் செய்கைகளை வற்புறுத்தி இதுவே அறவழி என விளக்கி, இதன் பயன் நல்வாழ்வு—தீதற்ற இன்பம் என எடுத்துக் காட்டும் வள்ளுவர், நற்செயலாகிய ஈகை, ஒப்புரவு, கண்ணோட்டம் முதலான அறங்களை--உலகம் தழைத்தற்குக் காரணமானவற்றை எக்காரணத்தாலும்—ஒருவர் தள்ளி வைக்கக்கூடாது என்றும் விளக்கம் தருகின்றார்.

"அன்றறிவா மென்னா தறஞ்செய்க
மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை"--

என்றதால், ஒருவன் நல்லனவற்றைப் பின்னர் அவசியமேற்படுங்காலை செய்து கொள்ளலாம் என்று தள்ளிவைக்காது எண்ணியபோதே செய்ய முற்படவேண்டும். அவ்வாறு செய்வது, ஒருவருக்கு அழிவு வந்தபோது (உயிர் நீங்கும் காலத்து) அழியாது உலகில் நிலைப்பதாகும். அது அவரது புகழாக உலகில் நிலைக்கும். ஆகவே, அழிவு வந்த காலைச் செய்துகொள்ளும் ஒன்றல்ல என்பதால் நாளடைவில் செய்யப்படுவது



என்பதும்—அந்த நற்செயலே அறம் என்பதும்—அறச்செயலே நிலைத்த புகழாம் என்பதும்—அதுவே ஒருவர் உயிர்நீங்கும் காலத்தும் நீங்காது நிலைப்பது என்பதும்—இதனால் தெளிவாகும்.

இதனையே,

“வீழ்நாள் படா அமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்”

என்னும் குறள் வற்புறுத்தும்

ஒருவன் நற்செயல்களில் ஈடுபடாமல் வீணேகழியும் நாள் இல்லாதுநல்லனவற்றை நாள்தோறும் செய்து வந்தால், அது அவன் வாழ்ந்த நாட்கள் (உலகின் நினைவில் மறையாமல் நிலைக்கச் செய்யும்) மறையும் வழியை அடைக்கும் கல்லாகும். ஒருவனது வாழ்நாட்கள் அவனது நற்செயலால் உலகம் உள்ளளவும் (மறையாமல் நிலைக்கும்) மறக்கப்படாமல் நினைக்கப்படும் என்பதாம்.

இவ்வாறு பொருள்காணாது ‘பொன்றுங்கால் பொன்றாத்துணை, என்பதற்கு ‘உயிர் போகும் காலத்தில் அதற்கு, அழியாத் துணையாய் உடன் செல்வது’ என்றும், ‘வாழ்நாள் வழியடைக்குங் கல்’ என்பதற்கு, அது மீண்டும் உடலெடுத்து வாழுநாள் வரும் வழியை வாராமல் அடைக்குங் கல்’ (மறு பிறவி வாராது தடுக்கும்) என்றும் பொருள் கொண்டு. பாவ புண்ணியம், மறு பிறவி—ஆகிய கொள்கைகளை இதில் ஏற்றி உரை கண்டார் பலர். ஆனால், அறன் வலியுறுத்தப்படுவது உலகியல் வாழ்க்கையை மேம்படச் செய்யவே என்பது, மேற்காட்டிய குறள் விளக்கத்தால் தெளிவாகும்.

அடுத்து, அறத்தாறு—எது என்று அறிய வொண்ணாதவாறு குறள் கருத்தை குழம்பச் செய்துள்ளனர், மறு பிறவிக் கொள்கைப் பற்றுடையவர்கள்.

அறத்தாறு எது என்பதை விளக்குவது,

“அறத்தாறு இது என வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை”

—என்னும் குறள்.

அறத்தினது பயன்—நற்செய்கையின் பயன் இது என்று நூலினால் (ஆராய்ச்சியால்) விளக்க வேண்டாம்; பல்லக்கைத் தாங்கி நடப்பவனுக்கும், அதில் ஏறிச் செல்வோனுக்குமுள்ள வேற்றுமையே அதைக் கண்கூடாகக் காட்டும் என்பதே இதன் பொருள்.

அறப் பயன் நூலால் விளக்கப்பட வேண்டுவதில்லை என்பதால், அதன் பயன் அதனின்று தனித்து வேறாக நிற்கும் ஒன்றல்ல; அறஞ் செய்வார்க்கு அதுவே இன்பமாதலால்—பயன் அதன் செயலினுள்ளேயே அமைவதாம். அறப் பயன்—அறத்தில் நற்செயலில் உள்ளதன்றி தனித்து நிற்பதல்ல என்பதால்—அறச் செயலின் சிறப்பை உணர்ந்தார்க்கு பயன் நூலால் விளக்கப்படும் பொருளல்ல என்பதை—‘அறத்தாறு இது என வேண்டா’ என்றார் வள்ளுவர். பிறர் எண்ணுவது போன்று ‘வீடுபேற்றையோ’ ‘மறு பிறவியையோ’ வள்ளுவர் கருதின், இது—அது—எதுவெனச் சுட்டியிருப்பார் அன்றோ?

அவ்வாறுபின் ‘சிவிகைப் பொறுத்தானோடு ஊர்ந்தானிடை’ என்பது எதனைச் சுட்டும் என்ற வினா எழும். இந்த உவமையையே—பாவம் செய்தோர்-சிவிகையைத் தாங்கிச் செல்வதாகவும், புண்ணியம் புரிந்தோர் சிவிகையில் ஏறிச் செல்வதாகவும்-நம்பிய கருத்தினர், அறஞ்செய்தோர் சிவிகையில் ஊர்வதாகவும் அல்லது செய்தோர் தாங்குவதாகவும்-வள்ளுவர் அறத்தினது பயனைப் புலப்படுத்தியதாக உரை கண்டனர். பாவ புண்ணியத்தின் பலா பலன்-பல்

மணம் வீசிய
வாழ்க்கைச் சோலை......

லக்கின் பளுவாகவும் பவனியாகவும் மறு பிறவியில் கிடைக்கின்றது என்பதைக் காட்டியே அறத்தின் பயனை வள்ளுவர் வற்புறுத்துகிறார் என்பது அவர்கள் காணும் விளக்கம்.

வையத்து வாழ்வாங்கு வாழ்வதற்கு நன்னெறியை வற்புறுத்தி, நற்செயலின் பயன் அதை ஆற்றினோம் என்ற உணர்வும் அதனால் பெறும் இன்பமுமே என்று கண்ட வள்ளுவர், கண்ணுக்குப் புலனாகும் பல்லக்குப் பவனியையும் காட்டி, அது கண்ணுக்குத் தெரியாத முன் பிறவிப்பயன் என்ற கருத்தைப் புகட்டுவாரா என்று சிந்திக்க வேண்டும்.

அறத்தின் பயனைச் சுட்ட—நூலினால் உணர்த்த வேண்டியதில்லை என்று கூறிய வள்ளுவர், நூலினாலன்றி வேறு வழியால் சுட்டப்பட முடியாத பிறவித் தொடர்ச்சியினை—அதன் விளைவான பிறவிப் பயனை சிவிகைக் காட்சியின் மூலம் சுட்டி—அறப்பயன் கூறுவாரா என்பதையும் எண்ண வேண்டும்.

மாறாக, இந்தக் குறளின் கருத்து, அறச்செயலின் பயன் இது என்று சான்று நூல் கொண்டு காட்டத் தேவையில்லை. நல்லற வழியில் செயல்படுவோர் சிவிகை ஊர்ந்தாரைப் போன்று எளிதாகவும், தீநெறி நடப்போர் சிவிகையைத் தாங்குவோரைப் போன்று கடினமாகவும், வாழ்க்கையைச் செலுத்துவோர் ஆவர் என்பதே. நன்னெறி நிற்போர், துன்பம் வந்துற்ற போதும் அதை எளிதாகவே ஏற்பர். தீநெறி மூழ்கியோர் இன்பம் வந்தபோதும் அதனால் மன நிறைவு கொள்வதில்லை. துன்பத்திலோ உள்ளம் வெதும்புவர். இந்த இயற்கையாலேயே சிவிகை ஊர்ந்தானுக்கும், சிவிகை பொறுத்தானுக்கும் உள்ள வேற்றுமை அறவழியில் செல்பவனுக்கும் மறு வழியில் அழுந்துபவனுக்கும் வேற்றுமையைக் காட்டுகிறது என்றார் வள்ளுவப் பெருந்தகை.

நன்னெறியில் நடப்பது எளியது, இனியது, நல்லது. பெருமையும் புகழும் தருவது, சிவிகை ஊர்வதைப் போன்று. அறத்தினின்றும் விலகி நடப்பது கடுமை, துன்பம், தொல்லை, சிறுமை, இகழ்ச்சி தருவது சிவிகை தூக்கிச் செல்வதைப் போன்று.

இந்தக் கருத்தைத்தான் வலியுறுத்த வள்ளுவர் முயன்றிருப்பாரே தவிர, அந்த உண்மையை மறைக்கத் துணிந்தவர்கள் சொல்வதைப்போல அதிலே மூட நம்பிக்கையைப் புகுத்தும் நோக்கம் நிச்சயம் இருக்காது.

பல்லக்கைச் சுமப்பதிலே உள்ள கடினத்தையும், பல்லக்கில் அமர்வதிலே உள்ள பூரிப்பையும்தான் வள்ளுவர் குறிப்பிடுகிறார்; அறிவுக்குப் பொருந்தாத—நம்பமுடியாத கருத்துக்களின் எதிரி அவர். திருக்குறள் வேத நூல் அல்ல; அது ஒரு அறிவுப் பெட்டகம்.

‘‘அறத்துஆறு இதுஎன வேண்டாம் சிவிகைப்
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை’’

—என்பதால் வள்ளுவர் விளக்கினார் என்பதற்கு ‘அறன் வலியுறுத்தல்’ அதிகாரமே துணை நிற்பது. இனியும் ‘அறத்தாறு இது என வேண்டாமன்றோ?

(வள்ளுவரின் பொய்யாமொழிக்கு பழமைப் பிடியில் சிக்கியவர்கள் புராண முலாமையும்; மூட நம்பிக்கையையும் கலந்து உரை எழுதினார்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. இது போன்று செந்நாப் புலவரின் கருத்துக்கு மாறாக இன்றும் பல விளக்கங்களைத் தந்திருக்கின்றனர்.)

பாலையானதே, அந்தோ!
[புகைப்படங்கள்: சி. எஸ். பதி]

பேரிடி விழுந்ததடா!

1

நல்லதோர் யாழினைப் பெற்றுவந்தேன்
—அதை
நானெடுத் தேஇசை மீட்டிநின்றேன்
மெல்லிசை என்செவி பாய்கையிலே
—அதில்
மேவிய ஓர்நரம் பற்றதடா!

2

செந்தமிழ்க் காவியம் செய்துவைத்தேன்
—அதில்
சிந்தனை யாவையும் பெய்துவைத்தேன்
வந்தது வாழ்வென நம்பிநின்றேன்—அது
மண்ணிற் புதைந்து சிதைந்ததடா!

3

பச்சைப் பசுங்கிளி பாய்ந்துவந்தே
—என்பால்
பாசமுடன் மொழி பேசியதே
இச்சைஎலாம் அதில் வைத்திருந்தேன்
—மனம்
ஏங்கிடப் பூனையும் கவ்வியதே!

4

கண்கவர் சிற்பமொன்றாக் கிவைத்தேன்
—அதில்
கற்பனை யாவையும் தேக்கிவைத்தேன்
புண்பட என்மனம் ஆனதடா—அந்தப்
பொற்சிலை பாழ்பட்டுப் போனதடா!

5

புத்துலகம் ஒன்று நான்படைத்தேன்
—அதில்
பொன்னிற மாளிகை கட்டிவைத்தேன்
பித்தனைப் போல்மனம் பேதுறவே
—அதில்
பேரிடி ஒன்று விழுந்ததடா!

கவிஞர் முடியரசன்

புதியதோர் கல்வித் திட்டம் வேண்டும்!

பன்மொழிப்புலவர்
கா. அப்பாதுரையார்

தேசியத் திட்டங்களில் மிக அடிப்படையான திட்டம் கல்வித் திட்டமே. ஏனெனில், மற்ற எல்லாத் திட்டங்களையும் உருவாக்கி, பேணி, வளர்த்து, பயன்படுத்தும் கூறும், அவற்றைத் தேசிய வாழ்வாக்கும் கூறும் அதுவே. இன்றைய ஒருலகக் கனவாளர்களுக்கும் அது நாடுகடந்த மனித இன வளம் பெருக்கும் ஒப்புயர்வற்ற கருவி ஆகும்.

ஏடக இயக்கம், கலை இயக்கங்கள், ஆட்சிமுறை, ஆட்சித் திட்டங்கள் அனைத்தும் தேசிய ஆர்வமும் தேசிய, சமுதாய, சமய ஒழுக்கப் பண்புகளும் நல்ல கல்வித் திட்ட அடிப்படையையே எதிர் நோக்கியுள்ளன. உலகம் எங்கிலும் இன்னல்களைக் குறைத்து இடர் களைந்து வாய்ப்பு நலம் பெருக்கவும் ஒத்திசைவுடைய உலக கல்வித் திட்டத்தைப் போன்ற உகந்த சாதனம் வேறு கிடையாது.

காலத்துக்குக் காலம் அடிப்படைக் குறிக்கோளின் மாறுபாடுகளாலும், காலத்துக்குரிய, ஆட்சி சமய, சமுதாயச் சூழல் மாறுதல்களாலும், தேவை மாற்றங்களாலும் கல்வித் திட்டத்திலும் புதிய புதிய முறைகள் தேவைப்படுகின்றன. அதே சமயம் உயிர் வளர்ச்சியில் புதுமையற்ற பழமைத் தேக்கம் எவ்வளவு இன்னாததோ அதே அளவு முன்பின் தொடர்பற்ற கட்டற்றபுதுமையும் இடர்ப்பாடுடையது. இதற்கேற்ப கல்வித் திட்டங்களிலும் பழைய அனுபவத்தின் பயனையும் செயல் நடையிலுள்ள அமைப்பின் நிலத்தளத்தையும் கூடியமட்டும் விடாமல் புதிய கட்டமைப்பு எழுப்புதல் இன்றியமையாதது.

இன்றைய நம் தேசக் கல்வித் திட்டத்தைப் பல கோணங்களிலிருந்தும் பல வகையாகக்குறை கூறாதவர் இடையாது. அதே சமயம் நம் தேசக் கல்வித் திட்டம் என்பது மிகப் பேரளவில் உலகக் கல்வித் திட்டத்தின் ஒரு பின்னோடி நிழலேயாதலால், அதனின்று தனித்தியங்குவதன்று. அத்துடன் உலகக் கல்வித் திட்டங்களின் குறைகள்மீதே அது புதுக் குறைகளையும் ஏற்றுவதால், இருவகையிலும் அது சீர்திருத்தம் பெறுவது இன்றியமையாதது. மேலை உலகின் தற்சார்புமுறையிலேயே அதுவும் அமைந்தாலல்லாமல், அது ஒருலக நாகரிகத்தில் முரண்பாடற்ற ஒத்திசைவு நிலைமை உடையதாக மாட்டாது.

நடைமுறைத் திட்டத்தை முழுவதும் மாற்றியமைக்கும் புரட்சிகரமான திட்டம் செயல்முறையில் இடர்ப்பாடுடையது. மாணவர் வாழ்வில் திட்டத்தில் ஏற்படும் திடீர் மாறுதல்கள் கோளாறுகளையே பெருக்கும். படிப்படியான மாறுதல்கள்கூடப் புதிய புதிய சூழல்கள், கருத்து மாறுபாடுகளால் இதேவகையான கோளாறுகளை சிறப்பாக நம் நாட்டில் உண்டுபண்ணியுள்ளன.

ஆகவே, நடைமுறைத் திட்டங்களை ஒரு புறம் சிறிது சிறிதாக மாற்றுவ

தும், புதிய தனி அமைப்புகளைச் சிறிய தேர்வுப் பண்ணைகளாக வளர்த்து அப் புதிய அனுபவத்தின் மீது மாறிவரும் நடைமுறைத் திட்டங்களுடன் அவற்றை இணைப்பதுமே தேசிய உலகக் கல்வித் தளங்களுக்குப் பயன்தரும் முறைமையாகும்.

நம் தேசக் கல்வித் திட்டம் ஆங்கிலம் போன்ற ஓர் உலக மொழித் தேர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு தோன்றிற்று. அதில் திட்டவாணர் எவரும் எதிர்பார்த்திராத சில பெருநலங்களும், அதே சமயம் சில சிக்கல்களும் ஏற்பட்டுள்ளன. மேலை நாகரிகமும் அறிவியல் கல்வியும் பகுத்தறிவும் வளர இவ்வாங்கிலக் கல்வி பெருங் காரணமாயிருந்து வந்துள்ளது.

சாதிகளையும், மூட நம்பிக்கைகளையும் இது ஒழிக்கவில்லையாயினும், நாகரிகத்திலும் சமுதாயத்திலும் அவையே அடிப்படையாயிருந்த நிலையைமாற்றி, அவற்றை நீக்கும் இயக்கங்களையும் கருத்துக்களையும், துணைச் சாதனங்களையும் வளர்த்துள்ளது. சாதிக்கொரு கல்வி. சாதி சமயத்துக்கு ஒரு வகுப்பிடம், இனத்திற்கொரு பணித்துறை, என்ற அவல நிலை பிரிட்டிஷ் ஆட்சிக் கால ஆங்கிலக் கல்வியாலேயே ஒழிந்தது.

சமஸ்கிருதத்தின் வளரா இரும்புப் பிடியிலிருந்து தாய்மொழி வாழ்வுகளை விடுவித்து, பல தாய்மொழிகளுக்கு உயிர் வாழ்வும் வளமும் கொடுத்தது ஆங்கிலம்தான்.

ஆனால், அதே சமயம் வளர்ந்து வரும் தேசிய மொழிகளின் தேவை பொன்னான ஆங்கிலக் கல்வியையும் ஒரு பொன் விலங்காக்கியுள்ளது. வரண்ட விடுதலையாசையால் பொன்னை விட்டு விடுவதா; அல்லது பொன்னாசையால் இந்த இனிய அடிமை நிலையை அரவணைத்து மகிழ்வதா என்ற இரண்டக இக்கட்டுக்கு அது நம்மை ஆளாக்கியுள்ளது.

நாட்டுமொழிகள் முதல் மொழிகளாக, நாட்டின் ஆட்சிமொழிகளாக வேண்டுமென்ற குரல் வெற்றியடைந்து வருகிறது. ஆனால் ஆங்கில மொழியின் உயிர்த் தேவை இதனால் குறையவில்லை. ஏனெனில் ஆங்கிலம் தாய்மொழிகளைப் பெற்றெடுத்த தாயாக மட்டுமல்ல; பேணி வளர்க்கும் செவிலியாகவும், கல்வியூட்டும் ஆசானாகவும், உற்றுழி உதவும் துணையுதவித் தோழியாகவும் இன்று விளங்குகிறது.

ஆங்கிலம் இவ்வாறு தாய்மொழி வளர உதவிகள் பல செய்து, இன்னும் உதவி வந்தாலும், தாய் மொழிகள் கல்வியில் இடம் பெற்று வளரும் முன்பே, அதனுடன் தொடர்பற்ற வேறு காரணங்களால், ஆங்கிலக் கல்வியின் தரம் சீர்கேடடைந்துவிட்டது.

நம் தேசக் கல்வித் திட்டத்தில் இன்று இரண்டு பெருந் தேவைகள் உண்டு. ஒன்று அது நாட்டுமொழி அடிப்படையிலமைந்த தேசியக் கல்வி முறையாக அமைய வேண்டும். அப்போதுதான் அத்திட்டம் உலகக் கல்வி அமைப்புகளுடன் ஒத்திசைந்து ஒன்றுபட முடியும். அதே சமயம் ஆங்கிலக் கல்வியின் தரம் குறைவதற்கு மாறாக, மேம்பட்டு வளர்ந்தோங்க வேண்டும்.

மேலே நாம் குறிப்பிட்ட இரு திற அமைப்பு மட்டும் தான் இந்த இரண்டு நோக்கங்களையும் ஒருங்கே நிறைவேற்ற முடியும். நடைமுறைக் கல்வித் திட்டத்தில் சிறிது சிறிதாக ஆங்கிலத்தின் இடத்தை நாட்டுமொழிகளே பெறும் காரணத்தால், தேசியக் கல்வித்திட்டம் முழுநிறைவு பெற்று வரும் அதே சமயம் புதிய தேர்வியக்கமாக தனிக்கல்விநிலையங்களில் தேசியத் திட்டத்துக்கும் நடைமுறைக் கல்விக்கும் பாதகமில்லாமல் முழுநிறை ஆங்கிலக் கல்வி வளர முடியும். இந்த இரண்டாம் துறையில் ஆங்கிலக் கல்வியில் இன்று இருந்துவரும் குறைகள் அகற்றப்பட வழி உண்டு.

உச்சதளங்களிலும் உயிர்த் தளங்களிலும் ஆங்கிலத்தையே தாய் மொழியாகக் கொண்டவர்களும், மற்றத் தளங்களில் இருமொழிப் புலவர்களும் தக்க தனி ஆங்கிலப் போதனை முறைத் தேர்ச்சியுடன் அமர்த்தப்படலாம். தேசியத் திட்டத்தின் கல்விப் படிகளுடன் அவற்றின் விரிவகற்சியாக இத்திட்டத்தின்படிகள் அமைக்கப்பட்டு, தேசத்தின் தேசங் கடந்த சேவைகளில் இத்துறையில் தேர்ந்தவர்கள் பயன்படுத்தப்படலாம். சமுதாய, இலக்கிய, கலை இயக்கங்களுக்கும் இது நலங்கள் தரும்.

இரண்டாம் துறைக்குரிய இன்னொரு நற்பயன் கல்வித் துறையில் அடிப்படை மாறுதல்கள் செய்யாமல், இதனைக் கட்டுப்பாடற்ற கல்வி மாதிரிப் பள்ளிகளாக்கி, செயல் தேர்வு முறை பண்ணைகளாக அனுபவ வெற்றி கண்டபின் விரிவுபடுத்தித் தேசியத் திட்டத்துடன் இணைக்க வழி காணலாம்.

இத்துறைக்கு உலக அடிப்படையில் மூன்றாவது ஒரு பெரும் பயனும் உண்டு. இன்று ஆங்கிலத்துக்கு பயன்படும் அதே கல்வி முறையை, இந்திய மாநிலத்தின் பிற மொழிகளுக்கும் உலகின் பிற மொழிகளுக்கும் உரிய பயிற்சி நிலையங்களாக்கி, தேச தேசத் தொடர்பு, மொழிக்கு மொழித் தொடர்புகளை உலகெங்கும் நேரடியாக வளர்க்க வழி காணலாம்.

அயல் மொழி எதுவும் தலையிடாமல் தேசியத்திட்டத்தை

வளை'காப்பு'
சொற்சிலம்பம்
'கர்ண'பூஷணம்
வித்யா'ரம்பம்
'மண'மடல்

திருநாள்

கா. வேழவேந்தன்

போகி

குன்றுதோள் தோழா! நெஞ்சக்
கொதிப்பழல் எடுத்து வாவா!
நின்றுள்ள ஆதிக் கத்தை
நிலைபெற்ற அடிமை தன்னை
கொன்றிடும் சாதிப் பேயை
கொடுமூட வழக்கை யெல்லாம்
ஒன்றாக்கி நெடுந்தீ வைவை!
உனக்கின்று இதுதான் போகி!

பொங்கல்

காஞ்சிப்பொற் பானை ஏற்றி
கடமைப்புத் தரிசி யிட்டு
தீஞ்சுடர் தியாகத் தீயால்
செய்ததோர் உரிமைப் பொங்கல்
வாஞ்சையாய் பத்துக் கோடி
வளமார்ந்த திராவி டத்தார்
பூஞ்சிரிப் புடன்சு வைத்தல்
பொன்னான பொங்கல் என்பேன்!

மாட்டுப் பொங்கல்

சிங்கம்போல் ஆர்க்கும் உன்றன்
திறலினை அறிந்தி டாமல்
அங்கொரு மாடு துள்ளும்
ஆணவம் பார் பார்! நெஞ்சில்
பொங்கிடும் மானத் தோடு
போய்அதை விரட்டு; வெற்றிச்
சங்கினை முழக்கு! ஈதே
சரியான மாட்டுப் பொங்கல்!

காணும் பொங்கல்

தனித்திரா விடத்தை மீட்டோம்;
தரணியில் உயர்ந்தோம்; சூழ்ந்த
பனிப்பகை தொலைத்தோம்; எங்கும்
பசியற்ற காட்சி கண்டோம்;
இனியநம் தலைவர் சென்று
எழிலுடன் ஐ. நா. மன்றில்
நனிபுகழ் சேர்த்தார் என்று
நாம்காணல் காணும் பொங்கல்!

அமைக்க இந்த இரண்டாம் துறை பயன்படுவதால், தேசியத் திட்டம் முழுநிறை தேசியத் திட்டமாக, நடைமுறைக் கல்வியில் எத்தகைய பெரு மாறுபாடும் இல்லாத முறையிலேயே, புரட்சியற்ற புரட்சியாக அமைந்துவிடும். அத்துடன் நம் தேசத்தில் இன்றிருக்கும் மொழிச் சிக்கல்களும், இவ்வுலகில் பல இடங்களிலும் நாடுகளிலும் ஏற்பட்டுள்ள மொழிச் சிக்கல்களும் அவற்றின் பயனான இன, அரசியல் சமுதாயச் சீரழிவுகளும் நீங்கிவிடும்.

நாட்டு மொழியா, ஆங்கிலமா, இந்தியா என்ற இந்தியாவின் சிக்கல்மட்டுமன்றி; சிங்களமா, ஆங்கிலமா, தமிழா என்ற இலங்கைச் சிக்கலும்; மலாய் மொழியா, சீனமா, தமிழா, ஆங்கிலமா என்ற மலாய் நாட்டுச் சிக்கலும்; சோவியத்து ஒன்றியம், அமெரிக்க ஒன்றியம், பிரிட்டிஷ் பொது அரசு ஆகியவற்றின் நிலைகளும்கூட இத்தேசிய—உலக இணையமைப்புத் திட்டத்தால் சீர் அமைவு பெறமுடியும்.

இந்தியாவும் உலகும் இது பற்றிச் சிந்திக்கத் தமிழகத் தமிழ், ஆங்கிலப் பத்திரிகைகள் ஆவன செய்யுமா?

குழப்பமில்லா கல்வித் திட்டம் ஒன்றை வகுக்க ஆன்றோர் துணிவார்களா?

உலகை நாம் என்றும் வேருக நின்று பின்பற்றித் தானாக வேண்டுமா? உலக வாழ்வில் நாம்பங்கு கொண்டு ஒருகால், ஒருதடவையேனும் வழி காட்டக்கூடாதா?

விடுதலைப் பயணம்

தில்லை வில்லாளன் எம்.ஏ., பி.எல்.

அன்புச் சகோதரரே! அனைவரும் செவிமடுப்பீர்!

திராவிடரின் அகமும் முகமும் மலர்ந்து உவகையோடு விழாவெடுத்து மகிழும் இந்நாளில் இந்த இனிய செய்தி கேட்பீர்- இதயத்தில் சிலை யெழுத்தாய் பதிப்பீர்!

ஏறுநடை போட்டுச் செல்லும் வீறுகொள் திராவிடர் கூட்டம் எங்கு செல்கிறது? ஏன் செல்கிறது? எப்படிச் செல்கிறது? இந்த மூன்று கேள்விகளின் பதிலே, நீங்கள் பெறப்போகும் இனிய செய்தி!

எய்பவனுக்கு இலக்கு வேண்டும்;
நடப்பவனுக்கு முடிவிடம் தேவை;
தொடுப்புக்கு முடிப்பு!

அதுதான் இலட்சியம்—குறிக்கோள்!

நம் இலட்சியம்விடுதலே-வடவர் பிடியிலிருந்து திராவிடருக்கு விடுதலே-திராவிடத்திற்கு விடுதலே.

விடுதலே முடிவு நோக்கி நாம் நடைபோடுகிருேம்.

உரிமைக் கோயிலுக்கு நம் யாத்திரை.

அந்த 'இலட்சியபுரி' அடைகிறவரை நம் பயணம் தொடரும்.

'சுயராஜ்யம்' நாம் கோருகிருேம், வடவர் 'சுய ராஜ்யம்' தருகிருர்கள் என்றே வாதத்திற்கு ஒப்புக்கொண்டால்கூட.

ஒளி தெரிகிறது. இருள் இற்று விழுகிறது.

முடிவு தெரிகிறது. இனி இடையில் துவளல் கிடையாது.

பாசம் தடுக்காது.

சபலம் கெடுக்காது.

வெறுப்போ, விருப்போ குறுக்கிடாது.

தொல்லேகள் தொடரா.

தடைகள் உடைபடும்.

விடுதலேப் பயணம் இடைவிடாது நடைபெறுகிறது!

உயிர்க் கொள்கை 'விடுதலே' —உறுப்புக் கொள்கைகளே பிற.

காலின்றி, கரமின்றி மனிதன் வாழ்கிருன்—உயிரின்றி வாழ இயலுமோ?

இலட்சியம் உயிர்; பிற கொள்கைகள் உறுப்புகள்.

சட்டமன்றத்தில் 'பதினேந்து'பத்து ஐந்தாகிவிட்டது.

பாராளுமன்றத்தில் 'இரண்டு' ஆறிரண்டாகிவிட்டது.

ஐந்தாண்டுத் திட்டத்தில் அநீதி துடைக்க வடவர் முந்துகின்றனர்.

இவை உறுப்புக் கொள்கைகளின் வெற்றி பொறி-இதனுல் முடிந்துவிடுவதில்லே.

விடுதலே 'ஜோதி'க்கு இவை துணே. 'பொறி'யோடு பூரிப்பு வந்துவிடாது.

'பொறிகள்' கிளப்புவதே, அநீதி அணேயாத 'பெரும் ஜோதி' எழுப்பவே!

புறையோடிப்போன புண்-அறுத்து ஆற்றிடுதலே முறை. புனுகு பூசுவது தவறு. 'அடிமை'ப் புண் அப்படியே. அதற்கு 'விடுதலே' சிகிச்சை தேவை.

முடிவு தெளிவாக்கப்பட்டுவிட்டால், அடையும் முறைகள் தாமே அமையும்.

முறைகளேயே, முடிவாகக் கருதிவிடுவது தவறு; 'அற்ப சந்தோஷம்'தான் தரும். நிரந்தர பேரின்பம் கிடைக்காது.

முறைகளே முடிவானுல் அது 'அரைகுறை' பிரசவம்.

திராவிடருக்கு வந்துள்ள 'அடிமை'நோய்க்கு 'சஞ்சீவி மூலிகை' எங்கிருக்கிறது? அந்தத் திக்கு நோக்கி நம் பயணம்!

ஆறு, பத்து இடங்கள், ஆளும் அவைகளில் கூடுவதால்—

இரண்டு, மூன்று பெரும் அணேக்கட்டுத்திட்டங்கள் ஏற்படுவதால்—

'சேலம்' 'நெய்வேலி' கிடைப்பதால்—

'தூத்துக்குடி' விரிவதால்—

'சேது சமுத்திரம்' அமைவதால்—

'பரம்பிக்குளம்' கிடைப்பதால்—

'காவிரி வட்ட எண்ணெய்' வெளியேறுவதால்—

நெல்லேக்கும் குமரிக்கும் புதிய புகைவண்டி ஓடுவதால்—

அந்நோய் தீர்ந்திடுமா? தீராது. அக்கொடுமையின் அடிப்படையே வேருனது—தீவிரமானது-இந்த 'சில்லறை' களால் தீராதது.

தாகத்திற்கு நெல்லி - தண்ணீரல்ல.
பசிக்கு சோளப்பொறி-சோறல்ல.
கேட்டது பிறைச் சந்திரன்-
தருவது தேங்காய்க் கீற்று.

எந்தப் போருக்கு இந்த வீரர் படை கிளம்பிடுகிறது? எதற்கு ஆளும் வடவரும் தடைபோடுகின்றனர்?

எந்தக் கோட்டையைப் பிடித்துக் கொடிபோட இரு படையும் மோதுகின்றன?

ஏற்பட்ட சட்டங்களில் இரண்டொரு திருத்தங்கள் செய்யவா?

குறைபட்ட உள்ளங்களில் இரண்டொன்றின் குமுறலே அடக்கவா?

கறை பட்ட நெஞ்சினர் சிலர் பதவிகள் பெறவா?

காமராஜர் கவிழவா? அவ்விடத்தில் அறிஞர் அண்ணு அமரவா?

சுப்பிரமணியம்,வழக்குக் கட்டுகளே மீண்டும் புரட்டிடச் செய்யவா?

பக்தவத்சலத்தின் அடுத்த இலட்சத்தைத் தடுக்கவா?

மாணிக்கவேலரை 'பித்தனே' வேலராக்கவா?

வெங்கட்ராமனே விரட்டவா?

கக்கனே மிரட்டவா?

ராமையாவை, 'இரும் ஐயா' என ஊருக்கு அனுப்பவா?

லூர்தம்மையார் வேலேயைப் பிடுங்கவா?

நெடுஞ்செழியன் மந்திரிபீடம் ஏறவா?

சம்பத் பாராளும் முதல்வராகவா?

கருணுநிதி 'கன'மாகவா?

'மதி' நிதி-நீதி இலாக்கா பார்க்கவா?

……………

இப்படி ஆட்சிபீடத்தில் ஆள் மாற்றவா?

கண நேரப் பித்தம்-நிமிட நேர திருப்தி-இவைகளுக்காகவா?

இல்லே; முக்காலும் இல்லே!

இலட்சியம்-இறுதி குறிக்கோள்- திராவிட நாட்டு விடுதலே.

இது திராவிடர் தம் இதயக் குரல்-மனம் நிறைந்த இனிய சித்திரம்.

அந்நிய வடவர் ஆட்சி வேண்டாம்-நமதாட்சி வேண்டும். இந்த குறிக்கோள் கோட்டையைச் சுற்றித்தான் விடுதலைப்போர்.

இடையிடையே சில பல உறுப்பு நடவடிக்கைகள்—உயிர் நிலை வேலை தொடர்கிறது, தடையின்றி.

ஆட்சியிலிருக்கும் அந்நியரோ, மக்கள் மனதை மயக்கிட மார்க்கம் தேடுகின்றனர்.

அவர்களின் 'எடுபிடி' களோ, 'கும்மாளம்' போடுகின்றனர்.

உங்கள் மனதில் 'இந்த' த் தெளிவு பிறந்துவிடுமோ என்று 'இந்தி' மயக்கம் போடுகின்றனர்.

வேண்டியது நல்ல சர்க்காரா? நம்ம சர்க்காரா? பதில் சொல்லுங்கள்.

இதா—அதா—எது? திடமாக— தீர்மானமாகச் சொல்லுங்கள்.

Good government is not only no substitute for self government. it is an exceedingly evil thing when the authority of the state rests in the hands of an irresponsible power.

நம்ம சர்க்கார்தானே! நம்ம சாக்கார் என்ருல் விடுதலை பெற்ற திராவிடத்தில் நாம் அமைக்கப் போகும் சுதந்திர சோஷலிசக் கூட்டாட்சிதான் அது.

நமக்கு எதிரி வேறு எங்கும் இல்லை.
இங்கே, நமக்குள்ளே!

ஆளுவது காங்கிரஸ்—ஆனாலும் ஆட்டி வைப்பது 'பச்சை' த் தமிழர்-மனம் மயங்குகிறது. 'பச்சை' யரின் 'இச்சை' ப்படி இலச்சை ஏதுமின்றி துரோகம் செய்கிறது? இந்தக் குடையும் கேள்வி — மயக்கம் தீர மாமருந்து.

இந்த 'மாயை' தீர, வடவரின் எடுபிடி எம் இனத்தவராயினும், அவர் நிலை இழி நிலை, அவர் தரம் ஈனம். ஆகவே, விடுதலை பெற்றே [illegible] தீருவோம் என்ற 'வைராக்கியம்' தேவை.

'சுய' ராஜ்யத்தின் இனிமை 'பர' ராஜ்யத்தின்கொடுமையாலே வளர்கிறது.

வடவரின் ராஜ்பம், நம்மை எல்லா வகையாலும் அவர் அடிதொழுபவராக்கிட முனைகிறது.

பதின்மூன்ருண்டுகளின் அனுபவம்-படிப்பினை—இது.

உணவில், கோதுமை—வடவரின்முடி சூடா

உன்வழியே என்வழி

(புகைப்படம்: பி. குருமூர்த்தி, சென்னை)

மன்னர் பண்டித நேரு அரிசிச் சோற்றை ஏள னம் பேசுகிருர்.

மொழியிலே, இந்தி—பண்டிதரே, நம்மிடை வேகமாகப் பரவுகிறது என்கிருர்.

மந்தி, மயிலுக்கு நட்டுவனுர்.

கோட்டான், குயிலுக்கு 'பாட்டு வாத்தியார்'

அடிமை நாட்டு அற்புதங்கள்—இவ்வகை எண்ணிக்கையில் அனந்தம்.

நம்மை நிரந்தர அடிமையாக்க நித்தம் நித்தம் புத்தம் புதிய திட்டங்கள் திட்டப்படுகின்றன—நுழைக்கப்படுகின்றன.

வடவர் வலை வீசுகின்றனர், ஆள் பிடிக்க. தூண்டில் புழுக்கள் பலவகை — 'பாரத ரத்ன' 'பத்மஸ்ரீ' கொடுத்து—

சிலபல பதவிகள் தந்து—

ஒரு சிலரை வடக்கிலே அழைத்து வாழ்த்தி-வெளி நாடு அனுப்பி—

ஆள் பிடிக்கின்றனர்! அடிமைகளில் கருங் காலிகளைத் தேடிப் பிடிக்கின்றனர்!

வலை பல வகைகளில்—ஆனுலும் நம் படையின் பயணம் தொடர்கிறது.

'விடுதலை'—இந்த விருதுகளும், பரிவுகளும் அதன் கால் தூசுக்கு சமானம்.

ஆகவேதான், அன்புச் சகோதரர்களே, நம் இனிய இலட்சியத்தை கவனப்படுத்துகிறேன் விழா நாளிலும்.

அந்தக் கவனம் இருந்தால், அன்ருட நடவடிக்கைகளில், நம் 'கணிப்பும்' சரியாக இருக்கும்.

தேர்தலில் நாம்- 'பெட்டி' எண்ணிடுவதோடு நம் 'வெற்றி' முளைத்துவிடுவதில்லை. 'உதயசூரியன்' வெகு தொலைவில்-அதுதான் நம் இலட்சியம். மற்றவை இடைக்கால ஏற்பாடுகள் நம் நெடுந்தூரப் பயணத்திற்கு இவை வழிகள்-முடிவு அல்ல.

தேர்தல் நிதி சக்திக்கேற்றவகையில் திரட்டுகிருேம்— ஆனுல் இந்நிதியோடு நம் 'விதி' முடியவில்லை!

வடவர் இடைவிடாது கொடுமைகள் புரிகின்றனர்;நம் விடுதலைப் படையின் நற்காலம்!

நன்மைகள் செய்வதாகச் சிலர் புலம்புகின்றனர். நன்மைகள் புரிவதாகவே இருக்கட்டும். அந்த நன்மைகள் புரியும் அந்நிய ஆட்சியே உலகில் இருக்கும் அரசியல் அமைப்புகளில் பயங்கரமானது-படுமோசமானது.

If all kinds of despotism a benevolent despotism is the worst, because the benevolence makes, People acquiesce in despotism.

வண்ணப் புரு வல்லூறை எதிர்த்துப் போராடுகிறது—அதுவே நம் போரின் தத்துவம்.

மான் கூட்டம், புலியை விரட்டுகிறது-நம் போரின் உட்பொருள்.

வண்டியோட்டி மாறினுல் போதாது-மாடு வண்டி ஓடும்திசை- அனைத்தும் மாற வேண்டும்.

எடை பார்க்கும் ஆள் மாறினுல் போதாது-தராசு-படிக்கல் எல்லாம் புதுப்பிக்கப்பட வேண்டும்.

நம் இலட்சியப் பயணம் இப்படி ஓடுகிறது.

விடுதலை பெற நமக்குத் 'தகுதி' இருக்கிறதா என்கின்றனர்

வெள்ளையன் கேட்டதை- இப்போது, மங்கிய மஞ்சள் நிறத்தான் கேட்கிருன்.

'விடுதலைக்'காக நாம் யாருக்கும் 'விண்ணப்பம்' போடவில்லை. 'தாக்கீது' பிறப்பிக்கத் தயாராகி வருகிருேம்.

'விடுதலை' நமது பிறப்புரிமை-அதனைப் பெற தகுதி என்ன வேண்டிக் கிடக்கிறது? அப்படிக் கேட்க இவ்வுலகில் யாருக்கும் 'தகுதி' இல்லை.

Swaraj is our birth right; we will have it.

'விடுதலை' வேண்டுமென்று எந்த ராஜரையும் கேட்கவில்லை-டில்லி ராஜரையும், சென்னை ராஜரையும் சேர்த்துத்தான் சொல்கிருேம்.

'விடுதலை' பிறர் இடும் 'பிச்சை'யல்ல!

'விடுதலை' பிரார்த்தனையால் கிடைக்கும் 'பிரசாதமும்' அல்ல!

'விடுதலை' பரிசுப் பொருளல்ல, பிறர் எடுத்துக் கொடுக்க-அது நாமே போராடிப் பெறும் விலை மதிப்பில்லா பெருந்தனம்!

'விடுதலை' பிறர்மூலம் கிடைப்பதில்லை-நமக்கு நாமே பெறுவது!

'விடுதலை' கொடுப்பதல்ல- எடுத்துக் கொள்வது!

பிறர் தரும் 'விடுதலை' நிலைக்காது; நிலைத் தாலும் நீடிக்காது!

திராவிடர் 'விடுதலை' பெற 'தகுதி' பெற்றனரா-'மடத்தனமான கேள்வி — கடுமைக்கு மன்னிக்க!

ஒரு இனம், விடுதலைக்கு தகுதி பெற்றதா இல்லையா என்பதை எவரும் கூறமுடியாது.

இவன் இதை உண்பாஞ, மாட்டாஞ என்பது பண்டத்தைக் கொடுத்த பிறகே காணக் கூடிய ஒன்று!

அந்தத் 'தகுதி' நம் கூட்டுறவில், உணர்ச்சியில், உழைப்பில், உறுதியில், வலிமையில், தியாகத்தில் புதைந்து கிடக்கிறது.

The proof of the fitness of the people for attaining freedom is in their capacity to achieve it by their own extertion, by their own strength, by their own determination, by their own combination and by their readiness to sacrifice themselves.

'பாரத ஒற்றுமை' என்பர் சிலர்-ஆனுல் 'ஐம்பத்தாறு தேசத்து மன்னரிலிருந்து ஆங்கிலேயக் 'கும்பினிவரை' முறையாக சரித்திரம் பயிலாதவர் அவர்.

'சிறிய நாடு' என்பர் ஏதோ தங்கள் தலையில் 'பெரிய மூளை' இருப்பதாக எண்ணிக் கிடப்பவர்.

'கூடாது, கூடாது'-சில, 'துருத்திவாயர் இடும் சத்தம்.

'முடியுமா? பார்க்கிருேம்' என்கும் 'மண்டைக்கனத்ததுகள்' சில.

இப்படி அரசியல் கிளிப்பிள்ளைகள் பேசும் பல விதம்.

எது எப்படி இருந்தாலும், நம் படையின் நடையில் தளர்ச்சி இல்லை-வளர்ச்சிக்குக் குறைவில்லை.

ஆர்வமிக்க சோதரரே-படை பெருகட்டும்

நகராட்சியில் நாம்

மாநகராட்சிப் பள்ளியின் துணைக் கட்டிடம் ஒன்றை அறிஞர் அண்ணா திறந்து வைத்தார். (25—6—60)

அங்கப்ப நாயக்கன் தெருவில், மாநகராட்சிப் பள்ளி ஒன்றுக்கு நாவலர் இரா. நெடுஞ்செழியன் அடிக்கல் நாட்டினர்- (12—10—59)

எழுகிணறுப் பகுதியில் சமுதாய நிலையம் ஒன்றுக்கு மாநில முதல்வர் காமராசர் அடிக்கல் நாட்டினர். (8—4—60)

சென்னையில் நம் சாதனைகளில் சில

ஷெனய் நகர், நடுவாக் கரையில் புதிய மின் விளக்கை அறிஞர் அண்ணா ஏற்றிவைத்தார். (22-4-60

சைதை மாநகராட்சிப் பள்ளி மாணவர்கள் அணி வகுப்பைதோழர் மு. கருணா நிதி பார்வையிட்டார். (7-10-59)

அகில இந்திய காங்கிரஸ் தலைவர் சஞ்சீவி ரெட்டிக்கு மாநகராட்சியில் வரவேற்பளித்தபோது மாநில முதல்வர் காமராசரும், நாவலர் இரா. நெடுஞ்செழியனும் கலந்துகொண்டனர்

மாநில அமைச்சர் திருமதி லூர்தம்மாள் சைமன் புதிய துவக்க உயர்நிலைப் பள்ளி கட்டிடம் ஒன்றை திறந்து வைத்தார். (12-9-59)

சைதையில் 'மாநகராட்சியின் உயர்நிலைப் பள்ளி கட்டிடத்தை மு. கருணாநிதி திறந்து வைத்தார்.

(7-10-59)

ஓட்டேரியில் புதிய பள்ளிக் கட்டிடத்தை சொல்லின் செல்வர் ஈ. வி. கே. சம்பத் திறந்துவைத்தார்.

(23-9-60)

மாநகராட்சிப் பள்ளிக் கட்டிடம் ஒன்றின் புதிய மேல்மாடியை பேராசிரியர் க. அன்பழகன் திறந்து வைத்தார்.

தாண்டவராயன் சத்திரம், புதிய குடியிருப்பு வீடுகளை மாநில அமைச்சர் திரு. வெங்கட்ராமன் அவர்கள் தலைமையில் திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி திறந்துவைத்தார்.

(10-10-60)



கல்யாண மேஸ்திரி தோட்டத்தில், துவக்கப்பள்ளி புதிய கட்டிடத்தை நாவலர் இரா. நெடுஞ்செழியன் திறந்து வைத்தார். [21-9-60]



'மலேரியா லாபரேட்டரி ஒன்றை மாநில முதல்வர் காமராஜ் திறந்து வைத்தார் (13-2-60)



தாமோதர ரெட்டியார் உயர்நிலை துவக்கப் பள்ளி துணைக் கட்டிடத்தை திரு. வி. முனுசாமி திறந்துவைத்தார். (8-4-60)

அயன்புரத்தில் புதிய மருத்துவமனை ஒன்றை திரு. ம. பொ. சி. திறந்து வைத்தார். (3-9-60)

விடுதலைப் பயணம் தொடர்ந்து நடைபெறட்டும்.

ஒதுங்கி நிற்பீரேல் உங்களால் தூரம் விரியும்-நேரமும் வளரும்.

ஆகவே அன்புச் சகோதரர்களே, சோர்வு நீங்கிட, படைநடை வரிகளைக் கூறி விரைவீர், இலட்சியபுரி நோக்கி.

விடுதலை இன்றேல் எமக்கு வாழ்விலை,
விடுதலைக்கு எம் உயிர் சிறுவிலை,
விடுதலை இன்றேல் வாழ்வில் இசையிலை,
விடுதலைக்காக தூக்கில் தொங்கிடத்தடையிலை.

கொடுங்கோலர் கொடுமைக்கும் அஞ்சிடோம்,
காசு பணம் பெற்றுத் தடுமாறிடோம்,
கரவு திட்டத்தால் மதி கெட்டிடோம்,
கடும் ஆயுதங் காட்டினும் கலங்கிடோம்.

தோல்வி கண்டு துவண்டிடோம்,
தொல்ஞானி உபதேசங்கட்கு மயங்கிடோம்,
தீய பொருமையால் பிரிந்து அழிந்திடோம்,
தேவையற்ற பாசத்தால் விழி கெடோம்.

சிறை கண்டு மிரண்டிடோம்,
சீரழிவு கண்டு விரண்டிடோம்,
செருக்குடை வடவரை எதிர்த்திடுவோம்,
சீரழித்த பனியாவை விரட்டிடுவோம்.

பசிக் கொடுமையைக் கொன்றிடுவோம்,
பல் துயரை வென்றிடுவோம்,
பாதகத் தலைவரை ஒதுக்கிடுவோம்,
பழியிடா இதயத்தோடு நாம்.

ஏறுநீ, முன்னேறு, சோதரா, முன்னேறு
பாருநீ அடிமைக் கோட்டை பொடிப்பொடியாகுது !

ஏறுநீ, முன்னேறு, சோதரா, முன்னேறு
பாருநீ, விடுதலைக்கோட்டை தெரியுது.

ஏறுநீ, விடுதலை வீரனே, முன்னேறு
ஏற்றிடு, விடுதலைக்கு விலை எது கேட்பினும்.

ஏறுநீ, உதய ஞாயிறே, முன்னேறு
எதையும் இழந்திடாய்—இது உறுதி.

யாருக்கும் அடிமை யல்லோம் நாம்
பாருக்குள் விடுதலை பெற்றிடுவோம்
நேருக்குநேர் அடிமை விலங்கொடிப்போம்
யாருக்கும் இளைத்திடா வீரங் காட்டிடுவோம்.

விடுதலைபுரி பயணம் நெடுந்தூரம்
விரும்பி அடைந்திட ஆகும் வெகுநேரம்
வேண்டாத முள்ளும்கல்லும் கண்டஞ்--சுமோ படை
வேக நடைபோட வேறென்ன தடை ?

விடுதலைத் தென்றல் வீசுது பதமாய்
வீரர் வாழ்வில் சுகம்சேருது இதமாய்
விடுதலை இன்பகீதம் கேட்குது சீராய்
அடிமை விலகுது, திராவிடம் தெரியுது, பாராய் !

காதலர் பொங்கல் வாழ்த்து

[ஊருக்குப் போய்வந்த காதலன், பொங்கலன்று தன் காதலியைச் சந்திக்கிறான். முன் இரண்டடி காதலி கூறுவது; பின் இரண்டடி காதலன் கூறுவது.]

ஊருக்குப்போய் வந்தசேதி என்னையா ?—எனக்
குற்றதிருந்தால் அதனைநீயும் சொல்லையா
பேரெழிலே ! உனக்குச்சேதி சொல்லுவேன்;—நமைப்
பெருமைவாழ்வு நாடுவதை விள்ளுவேன் !

வார்த்தைதன்னை வழங்குதற்கும் பஞ்சமா ?—இங்கு
வந்தசேதி கூறமனம் அஞ்சுமா ?
பார்வையாலே என்னைக்கொல்லும் பெண்மணி!—உனக்குப்
பட்டுச்சேலை வாங்கிவந்தேன் கண்மணி !

சேலைமட்டும் வாங்கிவந்தால் போதுமா ?—எனைச்
சீறிடாதோ கைகள் இதுவும் ஆகுமா ?
வேலையொத்த விழியுடையாய் ! யானுமே—மிக
விரும்பிச்செய்த வளையல்இதோ பாருமே !

கைவளையல் இருந்துவிட்டால் ஆச்சுதா ?—என்றன்
காலுக்கொன்றும் இல்லையென்றால் பேச்சுத்தான் !
மைவிழியே! காலுககொரு தண்டையே—நான்
வாங்கிவந்தேன் ஏனோஇன்னும் சண்டையே !

சண்டைசாடி போடவில்லை யானுமே—மிகச்
சண்டித்தனம் செய்யும் இடை பாருமே !
கெண்டைவிழி மாதே ஒட்டியாணமே—நீயும்
கேளாமுன்பே வாங்கிவந்தேன் காணுமே !

ஒட்டியாணந் தன்னைக்கண்டால் மூக்குத்தான் பொல்லா
ஓட்டாரமே செய்துபகை ஆக்குமே !
நெட்டுக்காரி ! உனக்குவைர மூக்குத்தி—நான்
நேற்றே வாங்கிவிட்டேன் கோபம் போக்குவாய் !

மூக்குக்கொண்ட மூக்குத்தியைக் கண்டாலே—மிக
முணுமுணுக்கும் கழுத்தும் ! அதற் கென்னவோ ?
வாக்கு நயங் கொண்டவளே, அன்னமே !—நான்
வாங்கிவிட்டேன் பொன்சங்கிலி முன்னமே !

சங்கிலியும் வாங்கிவிட்டாய் உண்மைதான்—இன்று
தைபிறந்தும் வழிபிறக்கக் காணோமே ?
தங்கச்சிலையே ! வழியும் பிறக்கவே—நான்
தாலி ஒன்றும் செய்து வந்தேன் சிறக்கவே !

இதயங்களிக்கும் சேதிசொன்ன அத்தானே !—எனக்
கென்ன உருத் தாலிசெய்தாய் அத்தானே ?
உதயசூரியன் உருவில் தாலியே—நான்
உனககணியச் செய்துவந்தேன் சீனியே !

பொங்கலன்று மகிழ்ச்சிபொங்கும் சேதியே—தந்தாய்
பொங்கற் பரிசாய் இனிக்கும் கரும்பு தருவேனே !
செங்கரும்பும் நீயல்லவோ கண்மணி !—உன்றன்
செவ்விதழுக் கிணையதுவோ பெண்மணி !

புதியவாழ்வு தொடங்கவைத்தாய் பொங்கலே—உனைப்
போற்றிப் புகழ்ந்து வாழ்த்திடுவேன் பொங்கலே !
இதயங்கொண்ட எழிலரசி ! உன்னையே—யானும்
இனிதுபெற்றேன் ! வாழ்கபொங்கல் வாழ்கவே !

புதுவை.சிவம்

ஒளியுலகம் நோக்கி!

புகைப்படம்: பி. குருமூர்த்தி, சென்னை

எங்கள் ஊரில் கோபாலன் என்றால் யாருக்கும் தனி அன்பு. சின்ன வயது தான் அவனுக்கு. இருபத்தி ஐந்து முடிந்ததோ இல்லையோ தெரியாது. இந்த வயதில் இருக்கும் மற்ற பிள்ளை

கிண்டியும் வண்டியும்

கிணைப் பார்த்துவிட்டு பிறகு கோபாலனைப் பார்த்தால் தான் வேறுபாடு தெரியும். மற்றவர் உண்ணுவதும் உறங்குவதுமாகப் பொழுதைக் கழிப்பர். அப்படியும் கழியாத பொழுதைக் கழிக்க வேண்டுமானால் அவர்களுக்கு எத்தனையோ வழிகள் இருக்கின்றன. அந்த வழிகளிலே தலை சிறந்தது ‘சீட்டுக் கச்சேரி’. உழுகின்ற காலத்திலே கூட அவர்கள் இப்படித்தான். ஆனால் கோபாலனே இதற்கு ஒரு விதிவிலக்கு. தான் உண்டு தன் வேலை உண்டு என்று இருப்பான். கண்ணும் கருத்துமாக இருப்பான். இவ்வளவு வேலை செய்ய வேண்டியிருக்கிறதே என்று அலுத்துக்கொள்வதோ, சலித்துக்கொள்வதோ அவனுக்குத் தெரியாது.

அதனால் எல்லாரும் அவனைப் பாராட்டியது போலவே அவன் தந்தையும் அவனிடம் உயிராக இருந்தார். இத்தனை நல்ல பிள்ளையாகத் தனக்கு வாய்த்ததில் அவருக்கு மகிழ்ச்சியைவிடப் பெருமை மிகுதியாக இருந்தது. ‘எதற்கு இந்தப் பிள்ளையைப் பெற்றேனே’ என்று வருந்திய சிலரை அவர் கண்டிருக்கிறார். அவர்களைப்போல் இல்லாமல் தன் பிள்ளை பொறுப்பாக எதையும் செய்து முடிப்பதைக் கண்டு மெல்ல மெல்ல அவனிடம் பெரிய வேலைகளையும் ஒப்படைக்கலானார்.

இருந்த இரண்டு காணி நஞ்சையைச் சேருக்கி, நாற்று நட்டு, களை எடுத்து—பலன் காணுவது அவர்களது தொழில். காலங் காலமாக இந்தத் தொழில் ஒன்றுதான் அவர்களுக்குத் தெரியும். இதிலேதான் அவர்கள் தங்கள் திறமையை, அறிவையெல்லாம் காட்டி வந்தனர்.

கோபாலனின் தந்தைக்கு ஒரு நாள் கொஞ்சம் துணிச்சலான எண்ணம் வந்தது. அறுத்த நெல்லை, இந்த வண்டி இவ்வளவு

ரூபாய் ஆயிற்று என்று வாரிக் கொண்டுபோகும் பேட்டை வியாபாரிக்கு அளந்து மூட்டை கட்டுவதைவிட, தானே தன் நெல்லைப் பட்டணம் கொண்டு போய் விற்றால் என்ன என்பதுதான் அந்தத் துணிச்சலான எண்ணம்.

துணிந்து அப்படியே செய்தார். பேட்டை வியாபாரி வழக்கமாக வாங்கும் விலையைவிட ஐந்துரூபாய் அதிகமாய் கிடைத்தது, பட்டணத்தில். ஊருக்குத் திரும்பிய உடனே அவர் மற்றவர்கள் நெல்லையும் தானே விலைக்கு வாங்கிக் கொண்டு போய் விற்கத் தொடங்கினார்.

உழைத்தான். ஒரே நாளில் இருபது இடத்தில் அளவு செய்ய வேண்டியிருந்தாலும் அலுத்துக் கொள்ளாமல் பாடுபட்டான்.

மகனுடைய உழைப்பையும் ஈடுபாட்டையும் கண்ட தந்தை பணம் வாங்கிவரும் பொறுப்பையும் அவனிடம் ஒப்படைத்தார். அவனும் ஒழுங்காகத் தன் கடமைகளைச் செய்து வந்தான்.

சென்னையிலிருந்து திரும்பும்போது ஒருநாள் கோபாலன் கிண்டி இரயில் நிலையத்தில் சொல்ல முடியாத நெரிசல் இருக்கக் கண்டான். ஏதேனும் திருவிழாவாக இருக்கும் என்று

தைக் கண்ட அந்தப் பட்டணத்து ஆள் 'கட கட' எனச் சிரித்தான். பிறகு 'கிண்டியின் மகத்துவம்' பற்றி அவனுக்கு எடுத்துச் சொன்னான்.

வேலைக்காரன் சொன்னதிலிருந்து கோபாலன் மனம் சில 'அரிய' செய்திகளைத் தெரிந்து கொண்டது. 'பணம் பண்ணுவதற்கு இப்படியும் ஒரு வழி இருக்கும்போது தான் ஏன் வீணே கிடந்துஉழலவேண்டும்' என்று அவன் மனம் கேட்டது. ஏரைப் பிடித்துக்கொண்டு எருதின் பின்னால் போவதும், களம் களமாகச் சென்று நெல்லை அளந்து கொண்டு வந்து,



மா.கி.தசரதன் எம்.ஏ.

நல்ல முறையில் வியாபாரம் நடக்கத் தொடங்கியது. அவ்வப்போது தனக்குத் துணையாகத் தன் மகன் கோபாலனையும் அந்தப் புதுவேலையில் புகுத்தினார்; பழக்கினார். கோபாலன் உழவைவிட அந்த வேலைக்கு உடல் உழைப்பு குறைவாகத் தேவைப்படுவதை உணர்ந்தான். தன்னால் ஆனவரை

எண்ணிக்கொண்டான். யாரையும் எதுவும் கேட்கவில்லை. ஆனால் அடுத்த வாரமும் அதே நாளில் அதேபோல் திரள் திரளாக மக்கள் இருக்கவே, மெல்ல மண்டிக்கடை வேலையாளிடம் தான் கண்டதைச் சொல்லி ''என்ன திருவிழா நடக்கிறது அங்கே?'' என்று கேட்டான். அவனுடைய அப்பாவித்தனத்

அளந்து விற்று, ஏதாவது கிடைக்கிறதா என்று ஏங்குவதும் அறியாமைஎன்று முடிவு கட்டினான். மண்டியையும் மரக்காலையும் மறந்தான்; கிண்டியை நம்பினான்.

எல்லாம் சரி; முதல் வைத்தல்லவா எதுவும் செய்ய வேண்டும்? அதற்கு அவனிடம் பணம் ஏது? இவ்வளவு

எண்ணிய அந்த மனம் இன்னும் கொஞ்சம் எண்ணியது. காரிருளில் ஒளி மின்னல்போல் அவன் மனத்தில் ஒரு எண்ணம் பளிச்சிட்டது!

நேரே மண்டி முதலாளியிடம் போய் நின்றான். "வா, கோபால்" என்று வரவேற்றார். "என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

"இருநூறு ரூபா வேண்டும்" என்றான். ஏன், எதற்கு என்று அவர் கேட்கவில்லை. மண்டி வியாபாரத்தில் முன்பணம் கொடுத்து வாங்குவது அன்றாட நிகழ்ச்சிகளில் ஒன்று. கோபால் அவன் தந்தையைப் போலவே நாணயமாகவும், நம்பிக்கையாகவும் இருக்கிறான். அவனை நம்பி இருநூறு என்ன; ஐநூறுகூட கொடுக்கலாம் என்பது அந்த முதலாளியின் தீர்மானம்.

பணத்தைப் பெற்றுக் கொண்ட கோபாலன் "நாலு நாள் பொறுத்து லாரியை அனுப்பி வையுங்கள். நெல் பிடித்து வைக்கிறேன். புதன் கிழமை அனுப்புங்கள்" என்று சொல்லிவிட்டு நேரே வந்தான், கிண்டிக்கு.

அவன் எண்ணியபடி எதுவும் நடக்கவில்லை. இருநூறு இரண்டாயிரம் ஆகிவிடும்; மறு நாளே மண்டிக்காரரிடம் "நெல் கிடைக்கவில்லை; இதோ இருநூறு" என்று திருப்பிக் கொடுத்துவிட்டு மீதியை எடுத்துச் செல்லலாம்—என்று ஏதோ எண்ணியிருந்தான்.

அங்கு நடந்ததோ நேர்மாறு; வரும், வரும் என்று நம்பி இவன் பத்து, இருபது என்று தொகையை உயர்த்தி உயர்த்திக் கட்டினான். இருந்ததெல்லாம் போன பிறகுதான் அவனுக்குத் தெளிவு ஏற்பட்டது. கிண்டி இரயில் நிலையத்தில் தன்னைப் போல் தொங்கிய முகத்தோடு பலரைக் கண்ட போது, தான் ஒருவன் மட்டும் தவறு செய்யவில்லை என்று கொஞ்சம் ஆறுதலாகக் கூட இருந்தது.

ஆனால், மண்டிக் கடையில் வாங்கிய இருநூற்றை எண்ணியதும் அவன் மூளை குழம்பியது. மனம்மருண்டது. எப்படி அவருக்குத்திருப்பித்தருவது? 'ஏன் வாங்கினாய்?' என்று தந்தை கேட்டால்என்ன சொல்லுவது? 'என்ன செய்தாய்?' என்றால் என்ன கூறுவது? எதுவும் புரியவில்லை அவனுக்கு.

இரண்டு மூன்று நாள் வீட்டிற்குப் போகாமல் இருந்தால்......என்று எண்ணினான். அது தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்கு வந்தான்.

நாலு நாளாக மகனைக் காணாமல் தந்தை தவித்தார். அவனைப் பற்றித் தவறாக நினைக்கவும் அவர் மனம் இடந்தரவில்லை. எங்குதான் போனானோ தெரியவில்லையே என்று அவர் குழம்பிக் கொண்டிருந்தபோது 'பாம் பாம்' என்று அலறிக் கொண்டு ஒரு லாரி வந்து அவர் வீட்டு முன் நின்றது.

அதிலிருந்து மண்டிக்கடைக் கணக்குப்பிள்ளை இறங்கினார். 'நெல்லெல்லாம் தயாரா?'-என்றார். கோபாலனுடைய அப்பாவுக்கு ஒன்றும் விளங்கவில்லை. கணக்குப்பிள்ளை சொன்னதிலிருந்து சிலவற்றை மெல்லப் புரிந்து கொண்டார்.

இப்போது அவர் என்னசெய்வார்? ஒரு பக்கம் மகன்; அவனைக் காட்டிக் கொடுத்துவிட்டால், நாளைக்கு அவன் வாழ்வு என்ன ஆவது? யார் அவனை நம்புவார்கள்? எப்படி அவன் தலை தூக்குவது? இன்னொரு பக்கம் நாணயமான தொழில்; நம்பிக்கையான மக்கள்—நாணயத்தையும், மகனுடைய வாழ்வையும் சேர்த்துக் காப்பாற்ற என்ன வழி என்று ஆராய்ந்தார். ஒரே வழிதான் அவருக்குப் புலப்பட்டது. தன் வண்டியைப் பூட்டினார்.

"எங்கே போகிறீர்கள்?" என்றார் கணக்குப் பிள்ளை.

"இதோ பக்கத்துத்தெருவில். அங்கே பத்து மூட்டை இருக்கிறது; அதையும் எடுத்து வந்து விடுகிறேன்; பிறகு லாரியில் ஏற்றலாம்" என்று சொல்லிக் கொண்டே வண்டியை ஓட்டினார்.

அரைமணி நேரத்திற் கெல்லாம் திரும்பி வந்த அவர் கணக்குப் பிள்ளையிடம் இருநூறு ரூபாயை நீட்டினார்.

"என்ன?" என்று கேட்டார் கணக்குப்பிள்ளை.

"என் மகன் உங்கள் மண்டியில் வாங்கிய முன்பணம் இருநூறு இதோ இருக்கிறது. நெல் கிடைக்கவில்லை. பொறுத்துக் கொள்ளுங்கள். கிடைக்கும் போதுசொல்லியனுப்புகிறேன்" என்றார். வேறு வழியில்லாததினால் கணக்குப்பிள்ளை அதை வாங்கிக்கொண்டு. "வீண் எண்ணெய்ச் செலவுதான் லாரிக்கு" என்று முணுமுணுத்துக் கொண்டே திரும்பினார்,

இரண்டு நாளில் கோபாலனுடைய தந்தை பெரிய இளைப்பு இளைத்துவிட்டார்.

ஒரு நாள் சோர்வோடு வீடு திரும்பியவர், கொட்டிலில் தன் மகன் மாடுகளுக்குத் தவிடு கலக்கிக் கொண்டிருக்கக் கண்டார். என்ன பேசுவது என்று அவருக்குத் தெரியவில்லை. கோபாலனும்ஏதும் பேசவில்லை.

இரவு சாப்பிடும்போது இருவரும் சேர்ந்தே சாப்பிட்டனர். எதுவும் நடக்காதது போலவே இருவரும் நடந்து கொண்டனர்.

கோபாலனுடைய மனம் அவனைச் சுட்டெரித்தது. மெல்ல பேச்சைத் தொடங்க எண்ணினான். எதைப்பற்றிப் பேசுவது என்று புரியாமல் திகைத்தான். வீடு, கழனி, மாடு, என்று எதை எதையோ எண்ணினான். ஆனால் என்ன கேட்பது என்று தெரியவில்லை அவனுக்கு. வீடு, மாடு, வண்டி... ஆ! அவன் மூளையில் ஒரு செய்தி கிடைத்துவிட்டது. மற்றதெல்லாம் இருந்தது; ஆனால் வண்டியைக் காணோம்! இதையே 'சாக்காக' வைத்துக் கொண்டு பேச்சைத் தொடங்கி

உழைப்பாளிகள்....
ஆனால், உருவச் சிலைகள் தான்!

வாய்த்த முத்தமிழோ—தேன்
தோய்ந்த சத்திதழாள்
சாய்த்தென் இதழிசைப்
பாய்ச்சிய முத்தம்....
வாய்த்த முத்தமிழோ........

கவியொன் றெழுதிடக்
கருத்தொன் றெடுத்தேன்—ஊறும்
புவிச்சுவை இதழால்
பொன்கவி தொடுத்தாள்
....வாய்த்த முத்தமிழோ....

'அன்பே' என்றுள் இயலே பொருத்தி
'அமிழ்தே' என்றுள் இசையே திருந்த
பொன்னுடல் தழுவி மென்னிதழ் குவித்தே
பைந்தமிழ் நாடகச் சுவையினைக் கவிழ்த்தாள்....
....வாய்த்த முத்தமிழோ....

இயலில் உருவ எழிலைக் கூட்டி
இசையில் உள்ள உணர்வினை மீட்டி
கயல்விழி பிறழும் நடன அசைவில்
கனிதமிழ் நாடகச் சுவையைப் படைத்தாள்....
....வாய்த்த முத்தமிழோ....

விடலாமே என்று தீர்மானித்தான்.

''அப்பா...''

''ஊம்...''

''வண்டி எங்கே காணோம்?''

''வண்டியா? கீழத் தெருவில் இருக்கிறது''

''ஏன்'பா? யார் வீட்டில் ?''

''இருக்கிறது''

''ஏன்'பா''

''அந்த மண்டிக் கடைக்கு நாம் இருநூறு ரூபா தரவேண்டும் அல்லவா, அதற்காக வண்டியை விற்று அந்தக் கடனைக் கொடுத்தேன்!''

மௌனமாகி விட்டான் கோபாலன். கேள்வி மேல் கேள்வி கேட்டு தந்தையிடம் நல்லதோர் சூழ்நிலையை உருவாக்கிக் கொள்ள முயன்றவன், தானே தோற்றுவிட்டான். நகை எடுக்க பெட்டியில் கை விட்ட திருடன் தேள் கொட்டினால் எப்படித் துடிப்பான்? அந்த நிலைக்கு ஆளானான் கோபாலன்! ஆனால் அவன் கதறவில்லை; பதிலுக்கு அவன் உள்ளம் ஓங்காரக் கூச்சலிட்டுப் புலம்பிக் கொண்டிருந்தது.

அவன் வாய் மூடிக்கொண்டிருப்பதைக்கண்ட தந்தை ''ஏன் பேசாமல் இருக்கிறாய்?'' என்றார்.

''ம்''—அதற்குமேல் அவன் பேசவில்லை.

''ஒன்றும் தப்பில்லேடா கண்ணே இது! எவ்வளவோ பேர் எவ்வளவோ தப்பு செய்கிறார்கள். நீ பாவம். சின்னப் பையன் தானே! வளர்ந்தால் தானே தெரிந்து நடக்கமாட்டாயா? ஒருதரம் தவறுவது இயற்கை. ஆனால், இன்னொரு முறை தவறுவது தான் படுகுழி. அதைத் தெரிந்து கொண்டால் போதும்; பிழைத்துக்கொள்ளலாம்''

''சரி அப்பா'' என்று தலையை ஆட்டிவிட்டு எழுந்து கையைக் கழுவிக்கொண்டான்.

'வீடு இரண்டு படுமோ' என நெஞ்சிலே நெருப்பைக் கட்டிக் கொண்டு அல்லல்பட்ட அவன் தாய் கண்களில் முட்டியநீரைத் துடைத்தெறிந்தாள்!

மதுளை மண்டபம்

முல்லை சத்தி

பண்டைக் கால சரித்திரச் சின்னங்கள், ஆண்ட மன்னர்களின் நினைவு மண்டபங்கள் மட்டுமல்ல; மடிந்து போன நாட்களின் இடிந்து போன சாம்ராஜ்யங்களின் சரித்திரச் சித்திரங்கள் மட்டுமல்ல; ஒரு காலத்தில் ஊர் உலகெல்லாம் மெச்ச பாராண்டதார் வேந்தர்களுடைய வாழ்க்கைக் காவியங்களும் கூட!

காலத்தால் கோல மிழந்த அக் கற்கோயில்கள், இன்றும் மௌனமாகத் தங்களது கதைகளைக் கூறிக்கொண்டுதான் இருக்கின்றன!

அத்தகைய காவியங்களிலே ஒன்றுதான், இன்று தென்னகத்துன் திலகமாய் விந்தியத்தின் எல்லையில் கம்பீரமாய் காட்சி அளிக்கும் 'ஹைதராபாத்'தின் கதை! தட்சசீலத்தை சிறப்புற ஆண்டு வந்த பாமினி சாம்ராஜ்யம் 'சடசட'வென சரிந்தபின்,

தட்சிணம் பல துண்டுகளாயின. பாரசீக நாட்டிலே பிறந்து—நாடு பல கடந்து—இறுதியில் பாமினி சாம்ராஜ்யத்தின் படையில் போர் வீரனாகச் சேர்ந்து—படிப்படியாக உயர்ந்து — தெலிங்கானாவின் 'கவர்னராக'ப் பணியாற்றி வந்த சுல்தான் குலி குதும்ஷா, 1512-ல் பாமினி சாம்ராஜ்யம் சாம்பல் மேடானதும், கோல்கொண்டா சாம்ராஜ்யத்தை நிறுவினான்.

அந்த மாமன்னரின் வழி வந்த ஐந்தாவது மன்னன்தான் முகமத் குலிகுதும்ஷா. 1580-ம் ஆண்டு கோல்கொண்டாவின் சக்ராதிபதியாக முடி சூட்டிக் கொண்டான். அவன் மண்டலாதிபதி மட்டு மல்ல; நல்ல பண் அமைக்கும் பாவலன் கூட.

அவனுடைய மீர்ஜும்லா (முதன் மந்திரி) ஷா நிஜாம் ஸ்பாஹானியின் புதல்வியை மணந்து கொண்டு, புகழ் மணக்க ஆண்டு வந்த காலம்.

அந்த நாட்களில்...ஓரிரவு......

இலட்சக் கணக்கான முத்துக்களை அடக்கி வைத்துள்ள சிப்பியைப் பிளந்ததுபோல் இரவுக்கன்னி வாய்விட்டு சிரித்துக் கொண்டிருந்தாள். வானப்பந்தலில் வைரமணி விளக்குகள் சுடர்விட்டுப் பிரகாசித்தன!

அந் நகரத்தின் ஒரு பகுதியாகிய மெஹந்தி, விழாக்கோலம் பூண்டிருந்தது.

மெஹந்தி—இரவுக் காலத்து இன்பலோகம் — காமவேள் நடனசாலை — புழுபோல், புள்ளி மயில்போல் ஆடும் நாட்டியவல்லிகளும், வண்டின் ரீங்காரம்போல், தென்றலின் தெம்மாங்குபோல் பாட்டிசைக்கும் இசை வல்லிகளும், இளமையையும், அழகையும் முதலாக்கி உடலை விற்கும் விபச்சாரச் சந்தை — கட்டிளங் காளையரின் பருவ வேட்டைக் காடு -மதன மண்டபம்.

அந்த அரங்கில் இரவு தோறும் நாட்டியமோ அல்லது 'கானா பஜானா'வோ நடைபெறுவது வழக்கம். வெளிநாட்டு வியாபாரிகள், சுல்தான்களுர்கூட மோஹராக்களை வீசி மோகன முகத்தழகிகளின் புன்னகையைப் பரிசாகப் பெறுவார்கள்!

இந்த இன்பலோகத்தின் முடிசூடா மன்னன் - சுதாகர் குவாஜா கம்பீரமாக அமர்ந்திருந்தான், நாட்டிய அரங்கின் பிரதான இடத்தில்! அவனது கரம் மீசையை முறுக்கிக் கொண்டிருந்தது.

அவ் வேளையில், ஒருவன் வந்து அவனுடைய காதில் ஏதோ கூறினான். குவாஜாவின் கண்கள் நெருப்புக் கோளங்களாயின. மீசை துடித்தது. 'விறு, விறு' என்று நடந்தான்!

* * *

மெஹந்தியின் ஒரு ஓரத்திலிருந்த வீட்டில், பாக்கியமதி அழுது கொண்டிருந்தாள்! பளப்பளப்பான பட்டாடைகள், தாரகைகள்போல் மின்னும் பொன் நகைகள் அவள் தங்க உடலை அலங்கரித்திருந்தன. காலிலே சதங்கை—கரங்களிலே மலர்க் கொத்துக்கள்—ஆனால் கண்களிலோ, கண்ணீர்!

"அம்மா! அனாதையாகிய என்னைத் தங்களது புதல்வியைப்போல், இத்தனை நாள் பேணி வளர்த்தீர்கள்! இன்று என்னை நரகத்தில் தள்ள முனைகிறீர்களே, இது நியாயமா?"

"மகளே! இந்த மண்ணில் நீ கண் திறந்ததும், உன்னைப் பெற்றவள் விண்ணுலகம் சென்று விட்டாள்; வெளிநாட்டிற்குச் சென்ற உன் தந்தையோ திரும்பவே இல்லை. இந்நிலையில் தவழ்ந்த உன்னை—இந்துக் குடும்பத்தில் பிறந்த உன்னை — மதவேறுபாட்டைக் கூட கவனியாது எடுத்து வளர்த்தேன். இந்த மெஹந்தியின் வழக்கப்படி; அல்ல அல்ல; சட்டப்படி நீ இன்று நாட்டியம் ஆடவேண்டும். இதை மறுப்பது நியாயமா? பாக்கியமதி! வாழ்க்கையின் ஓரத்தில், மரணவாசலின் கதவுகளைத் தட்டிக் கொண்டிருக்கும் இந்தத் தள்ளாத கிழவியின் ஆசைகளைப் பூர்த்தி செய்யமாட்டாயா, மகளே?"

"அம்மா! என்னை விலைப் பொருளாக்குகின்றீர்களே!...... நியாயம்தானா? நீதிதானா? நேர்மைதானா? நான் என்ன மலரா, ரீங்காரமிடும் வண்டுகளுக்கெல்லாம் இதழ் விரிக்க? என்னை விபச்சாரச் சந்தையில் விற்று விடாதீர்கள் தாயே! தங்களின் தாள்பணிந்து கேட்டுக் கொள்ளுகிறேன், என்னை மதன மண்டபத்தின் காட்சிப் பொருளாக்கி விடாதீர்கள்!"

"பாக்கியமதி! என் நேத்திரம்போல் உன்னை வளர்க்க, நீ செய்யும் கைமாறு இதுதானா? மெஹந்தியின் நாட்டிய அரங்கில் நீ ஆடக் கொடுத்துவைத்திருக்க வேண்டுமடி, பெண்ணே! நீ மேடையில் தோன்றினால் போதும்; தங்க மோஹராக்கள் குன்றுபோல் குவியும். பொங்கும் நிலவு போன்ற உன் முகத்தில் நெளிந்தோடும் புன்னகைக்கு பொன்னையும், மணியையும் வாரி வாரி வீச வாலிபப் பட்டாளம் காத்திருக்கிறது!"

"அம்மா! என்னைக் கணிகையாகச் சொல்லுகிறீர்களா?"

"நிலவின் குளர்ச்சியும் மலரின் மணமும் ஒருவரின் ஏகபோக உரிமையல்ல; அவைகள் எல்லாருக்கும் பொதுச் சொத்து! அதுபோல்தான் மெஹந்தியின் பெண்களும்! புறப்படு மகளே!"

"முடியாதம்மா முடியாது! என்னால் அந்த நரகத்திற்கு வர முடியாது!"

"பிடிவாதம் செய்யாதே! குவாஜா கோபித்துக் கொள்வார்!"

"யார் அவன்? என்னைப் பெற்றவனா, பேணி வளர்த்தவனா, என் இஷ்டத்திற்கு விரோதமாக நடக்கக் கட்டாயப்படுத்த?"

"அவன் இந்த மெஹந்தியின் முடிசூடா மன்னன்! நீ அவன் அடிமை!"-என்று கர்ஜித்த குரலைக் கேட்டு பாக்கியவதி திடுக்கிட்டாள்.

வாசலில் குவாஜா, மீசையை முறுக்கிவிட்டு நின்றுகொண்டிருந்தான். அவன் முகம் கோபத்தால் சிவந்திருந்தது!

"குல்சார்பீ! என்ன இது?"

"மகராஜ்..."

"விளக்கம் தேவையில்லை; விரைவில் அழைத்துவா அவளை! பாக்கியவதி மெஹந்தியில் வாழும் அத்தனை பிரஜைகளும்

எனது அடிமைகள்! என் ஆசைகளுக்கு ஏற்றாற்போல் ஆடவேண்டிய பதுமைகள்! பெண்ணே! கண்ணீர் விடுவதால் உன்னை விட்டுவிடுவேன் என்று எண்ணாதே! கண்ணீர்—புலம்பல்—அழுகுரல்—இவை ஆரம்பத்தில் நடைபெறும் சாதாரண நிகழ்ச்சிகள்! நாட்கள் தேயத் தேய கண்ணீர் உகுத்தகண்கள் காமத்தையும், புலம்பிய வாய்கள் போதை வார்த்தைகளை ஊட்டுவதையும் கண்டவன் நான்! ஆகவே உனது ஒப்பாரி எனக்குப் புதியதல்ல, பெண்ணே! புறப்படு!''

''முடியாது! காமவெறி பிடித்தலையும் கயவர்களுக்கு நான் போகப் பொருளாக மாட்டேன்! மோகத் திரையால் மறைத்திருக்கும் படுகுழியில் என்னைத் தயை செய்து தள்ளி விடாதீர்கள்!''

''இனி உன்னிடம் பேசுவதில் பயனில்லை!'' என்று கூறிக்கொண்டே அவளைப் பற்றி இழுத்தான்.

வேங்கையின் கையில் சிக்கிய மானானாள், அவள். நாட்டிய அரங்கில் அவளைக் கொண்டு போய் நிறுத்தினான்.

''உம், இசை முழங்கட்டும்!'' -அவன் பேசவில்லை; புயலைப் போல் சீறினான்!

இசை ஒலித்தது!

''பாக்கியவதி! ஆடு! இல்லையேல், இந்தச் சவுக்கின் நுனி உனது சந்தன உடலைத் தொட்டு மகிழும்! உம் ஆடு!''

அவள் ஆடினாள். தோள் துள்ள—துடை வளைந்து கூத்தாட—தாள் குழைந்து கெஞ்ச—தளிர்க் கரங்கள் கொஞ்ச—சிலம்பு குலுங்க—சதங்கை சிலம்ப—அலம்ப மணிமேகலைகள் அலம்ப—அவள் ஆடினாள்! 'காற்றிலாடும் பசுங்கொடியோ, கற்பனை ஊற்றிலாடும் பொற்கொடியோ, பூவார் சோலைப் புது மயிலோ!' என்று வியந்தது அங்கு திரண்டிருந்த மக்கள் வெள்ளம்! காலிலே சதங்கை கொஞ்சின; காண வந்த சபையோரின் கண்கள் கெஞ்சின! விரல்கள் நெளிந்தன; வீரர்கள்தம் தோள்கள் வளைந்தன!

குவாஜா அட்டகாசமாக அமர்ந்திருந்தான். அவனது கழுகுக் கண்கள் ஜனக் கூட்டத்தை நோட்டம் விட்டன. பட்டாடைகளும் முத்துமாலைகளும் அணிந்துகொண்டு, பாக்கியமதியின்மீது நயனங்களைப் பதியவிட்டிருந்த ஒரு வாலிபனின்மீது அவன் பார்வைபட்டது. இன்றைய இரவிற்கு நல்ல இரை கிடைத்ததென்று குவாஜா மகிழ்ந்தான். மெல்ல எழுந்து, அந்த வாலிபன் அருகில் சென்றான்.

''மகராஜ்! ஆட்டத்தில் லயித்து விட்டீர்களே!''

''ஆமாம்; இவ்வளவு அற்புதமாக ஆடும் அழகியை இதுநாள்வரை நான் கண்டதே இல்லை!''

''உங்களைக் கவர்ந்தது எது? நாட்டியமா? அல்லது ஆட்டக்காரியின் அழகா?''

''இரண்டுமேதான்!''

''நீங்கள் எந்த ஊர்?''

''பாரசிகம்! வைரங்கள் வாங்க வந்திருக்கிறேன்!'' — வாலிபன் பதில் உரைத்தான் என்பதைவிட, தனது அந்தஸ்தை வெளியிட்டான் என்பதே பொருந்தும்!

''வியாபாரியா?''— குவாஜா பல்லெல்லாம் தெரியக் குழைந்தான்!

''மகராஜ்! அவளைப் பற்றிய விபரங்கள் தேவையா?''

''சொல்லுங்கள்; சொல்லுங்கள்''-அவ் வாலிபனின் தொனியில் ஆவல் ஒலித்தது!

''எனக்கு என்ன கொடுப்பீர்கள்?''

''எது வேண்டுமானாலும் கொடுக்கிறேன். அவளை நான் ஒரு முறை சந்திக்க முடியுமா?''

''ஏன் முடியாது? அந்தி நேரத்து அழகிகளும், சந்து முனைச் சிங்காரிகளும் வாழும் பெஹந்தியின் அழகு தேவதை அவள்! இந்துப் பெண்; ஆனால் முகமதிய இல்லத்திலே வளர்ந்த கண்! கைபடாத ரோஜா! மீட்டாத வீணை! சூடாத முல்லை!''

''அப்படியா?''

''ஆமாம்!''

''அவளை...நான்...'' என்று கூறிக்கொண்டே, மோஹரா நிரம்பிய பை ஒன்றை அவனிடம் நீட்டினான் அவ்வாலிபன்!

அதைப்பெற்றுக் கொண்ட குவாஜா, ''வாருங்கள் என்னுடன்'' என்று நடந்தான். வாலிபனும் அவனைத் தொடர்ந்தான்!

* * *

பாக்கியமதி நாட்டிய உடைகளைக் களைந்து கொண்டிருந்தாள். அவளது நயனங்கள் நீரைக் கொட்டின.

''பாக்கியமதி'' என்ற குரலைக் கேட்டுத் திடுக்கிட்டாள். அவள் எதிரே அழகான வாலிபன் ஒருவன் நின்று கொண்டிருந்தான்.

''யார் நீங்கள்?''—பதறினாள் அவள்.

''பாரசீக வியாபாரி நான். வைரம் வாங்க வந்தேன்; இந்த வைர நிலவைக் கண்டேன்! உள்ளத்தைப் பறி கொடுத்தேன்!''

''என்ன உளறுகிறீர்கள் ?''

''உளறலா? உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து பீறிட்டு வரும் அன்புரைகள்!''

''யாருடைய அன்பும் எனக்குத் தேவையில்லை; போய்விடுங்கள் இங்கிருந்து!''

''போகிறேன். போவதற்கு முன்னால் ஒன்று கூற விரும்புகிறேன், பெண்ணே!''

''என் பெயர் பாக்கியமதி!''

''தெரியும் எனக்கு!''

அவ்வாலிபனின் முகத்தில் நெளிந்தோடிய 'குறும்புத்தனம்' மிகவும் கவர்ந்தது பாக்கியமதியின் உள்ளத்தை!

''என்ன கூற வேண்டும்? விரைவில் கூறுங்கள். இரவு நேரத்தில் ஒரு பெண்ணின் அறையில் ஆண் ஒருவர் இருப்பது தகாதது; நான் விரும்பாதது!''

''மெஹந்தியில் அது தவறல்லவே?''

''நான் அந்த வகையைச் சேர்ந்தவளல்ல!''

''அதையும் அறிவேன், நான்!''

''என்னைப்பற்றி இவ்வளவு தெரிந்து வைத்திருக்கின்றீர்களே; எப்படி? ஏன்?''

''ஏனு? என் இதயத்திலே காதை வைத்துக் கேள்; அது சொல்லும். என் கண்கள் எழுதிக் காட்டுவது உனக்குப் புரியவில்லையா, பாக்கியமதி?''

''நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?''

''உன்னை இந்த நரகத்திலிருந்து மீட்க விரும்புகிறேன், நான்!''

''முடியுமா, உங்களால்?''

''தங்க மொஹராக்களை உன் செவிலித் தாயின் காலடியில் கொட்டத் தயாராக இருக்கிறேன். நீ மட்டும் சம்மதமென்றால், இன்றிரவே நாம் புதிய உலகிற்குப் பயணமாகலாம்! உன் அழகிற்கு நான் அடிமையாகிவிட்டேன். என் மஞ்சத்தின் ராணியாக மட்டுமல்ல; என் மன மாளிகையின் ஜோதி விளக்காக என்றென்றும் நீ ஒளிவீசிக் கொண்டிருப்பாய்!''

''அய்யா! நீங்கள் யாரோ; நான் யாரோ? என்றாலும் உங்களின் அன்புரைகள் என் உள்ளத்திற்கு சாந்தியை அளிக்கிறது. என்னை விலைப் பொருளாக்கத் துடித்துக் கொண்டிருக்கும் என் தாயிடமிருந்து என்னைக் காப்பாற்றுங்கள்; காலமெல்லாம் உங்களை மகிழ வைத்துக் கொண்டிருப்பேன், நான்!''

''அன்பே!''

''கண்ணாளா!''

அவள் அவனது தோளிலே தொத்தும் கிளியானாள்.

* * *

பொழுது விடிகிறது; உலகத்திரே எழுவீர் — என்று சேவல் எங்கேயோ கூவிக் கொண்டிருந்தது. பாக்கியமதியின் அரவணைப்பிலிருந்து விடுபட்டான் அவ்வாலிபன்.

''அன்பே! தங்கள் பொன்னுடலிலிருந்து என்னுடலைப் பிரித்து விடாதீர்கள். பின் என் உயிர் பிரிந்துவிடும்!''

''கண்ணே! கலங்காதே! உன்னை என்னுடன் அழைத்துச் செல்ல ஏற்பாடுகள் செய்ய வேண்டாமா?''

''அன்பே! எவ்வளவு உயர்ந்தவராகக் காட்சி அளிக்கின்றீர்கள்! அன்பின் உறைவிடம் உங்கள் உள்ளம்!''

''அவ்வுள்ளத்தின் ஊற்று நீ!''

''உயர் எண்ணங்கள் மலரும் சோலை உங்கள் இதயம்!''

''அச்சோலையின் கலையே நீதான்! போய் வரட்டுமா?''

''எப்பொழுது வருவீர்கள்..?''

''இன்று மாலை சந்திப்பேன் உன்னை—அழைத்துச் செல்வேன் இன்பபுரிக்கு!''

''மறந்துவிடமாட்டீர்களே?''

''பைத்தியமே! நேத்திரத்தை இமைகள் மறக்குமோ? இதயத்தோடு இதயமாக உறைந்துவிட்ட உதய நிலவாம் உன்னை நான் மறக்க முடியுமா? அமிர்தத்தையும் தோற்கடிக்கும் உன் அதரபானம் -- கற்பனைகள் ஊறும் கன்னம் — காவிய மாளிகை எழுப்புகின்ற காந்தள் விரல்கள்—கவிதை மழை கொட்டும் போதை மொழி-- காதல் கவிதை பாடும் கண்கள் — மண்டலாதிபதிகளையும் தாள் பணியச் செய்யும் முக மண்டலம்—மறக்கக் கூடியவைகளா? போகட்டுமா?''

''விரைவில் வருகிறேன் என்று சொல்லுங்கள்!''

''அப்படியே!'' — அவன் குனிந்து வணங்கினன். அவள் சிரித்தாள்; அவனும் சிரித்தான்!

* * *

அந்தி வானத்து ஆதவன் மேற்கு வாயிலில் குப்புற விழுந்துகொண்டிருந்தான். பாக்கியமதி தன் இதயத்தைக் கவர்ந்தவனுக்காக வீட்டு வாயிலிலே காத்துக் கொண்டிருந்தாள். துன்பச் சிறையிலிருந்து விடுபட்டு இன்பச் சிறைக்குப் போகப் போகிறோமே என்ற மகிழ்ச்சி அவள் உள்ளத்தில் கூத்தாடிக் கொண்டிருந்தது!

கதவு தட்டப்பட்ட ஓசை அவள் காதிலே விழுந்தது! 'வந்து விட்டார்; என்னை வாழ்விக்கும் தெய்வம் வந்து விட்டது' என்று கூறிக்கொண்டே ஓடினாள். கதவைத் திறந்தாள்.

அங்கே...?

அரண்மனைப் போர்வீரன் நின்று கொண்டிருந்தான். திடுக்கிட்டாள், பாக்கியமதி.

''அம்மையே! நான் கோல்கொண்டாவின் சக்ராதிபதி முகமத் குலி குதுப்ஷாவின் மெய்க் காவலன்! உங்களை அரண்மனைக்கு அழைத்து வரும்படி அரசர் ஆணையிட்டிருக்கிறார்!''

பாக்கியமதி திகைத்தாள். தரையில் விழுந்த மெழுகானாள்.

''காலத்தை வீணாக்காதீர்கள். காவலன் கோபித்துக் கொள்வார். புறப்படுங்கள்!''

அதுகேட்டுப் புலம்பினாள், கதறினாள், பாக்கியமதி!

''நீங்கள் வர மறுத்தால் நான் தூக்கிச் செல்லும் கட்டாய நிலை ஏற்படும்!''

''ஐயா! குற்றம் ஏதும் செய்யவில்லை நான். கொற்றவனின் எதிரில் நிற்கக் கூடிய தகுதி படைத்த பொற்கொடி அல்ல

[தொடர்ச்சி பக்கம்—75]

ஆகஸ்ட் 31

எஸ்.வி.லிங்கம்

தமிழ் நாட்டு காங்கிரஸ் தலைவர் திரு. அழகேசனாரும், அவர்களது தினசரி பத்திரிகையும், நம்மைப் பற்றிச் சொல்லிவரும் மட்டமான வார்த்தைகட்கு, இப் புதுப் பொங்கல் நாளில் சமாதானம் சொல்ல விரும்புகிறேன்.

''டெல்லியில் பிரதமர் நேருவிடம் இவர்கள் கெஞ்சிக் கேட்டு, ஒரு கடிதத்தை வாங்கி வைத்துக்கொண்டு, குடியரசுத் தலைவர் ராஜேந்திர பிரசாத் அவர்களுக்குக் காட்டுவதாக இருந்த கருப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தை நிறுத்திவிட்டார்கள்'' என்று காங்கிரஸ் பிரச்சார ஏடு கூறுகிறது.

ஆனால் காங்கிரஸ் கட்சி வெளியிட்ட அறிக்கையிலோ, தி. மு. க. ராஜேந்திர பிரசாத் அவர்களைப் பகிஷ்கரிக்கக் கேட்டுக் கொண்டதாகவும், அதை எதிர்த்து காங்கிரஸ் கட்சியார் பொது ஜனங்களை ஆதரவு தராதீர்கள் என்று சொன்னதாகவும், உடனே பொதுஜனங்கள் 'அப்படியானால் சரி; தி. மு. க.வுடன் நாங்கள் சேர்ந்து கருப்புக்கொடி பிடிக்கமாட்டோம்' என்று சொல்லி விட்டதாகவும், அதன் பின்னர் தி. மு. க. கருப்புக்கொடி பிடிப்பதை நிறுத்திவிட்டதாகவும் கூறுகிறது.

ஆகஸ்ட் 31-ம் தேதிவரை குடியரசுத் தலைவருக்கு நாம் நாள் தந்திருந்தோம்.

அதற்குள் ராஜேந்திரரின் பொதுமொழி சம்பந்தமான அறிக்கையை, அவர் 'வாபஸ்' பெருவிட்டால் ஆகஸ்ட் 31ம் தேதிக்குப் பின் விடுதலைப் போராட்டம் நடக்கும் என்று சொன்னோம்.

அதற்கு போராட்டத் தலைவராக சொல்லின் செல்வர் ஈ. வெ. கி. சம்பத் எம். பி. அவர்களை நியமித்தோம். நமது இத்தகைய தீர்மானத்துக்குப் பின்பு குடியரசுத் தலைவர் இங்கு வரப்போவதாக பத்திரிகைகளில் பார்த்தோம் உடனே

ந.வை.

போராட்டத் தலைவர் ராஜேந்திரருக்கு நிலைமையை விளக்கி அவர் வரும்போது மக்கள் நிலை மனம் வருந்தக் கூடியதாக இருக்கும் என்பதை ஒரு கடிதத்தில் தெரிவித்தார்.

உடனே சென்னையில் இந்தி எதிர்ப்பு போராட்ட மாநாடு கூட்டி அதில் கருப்புக்கொடி பிடிக்கத் தீர்மானித்தோம்.

இம்மாநில சர்க்கார் தம் நிலைமையை, சகல விதத்திலும் கௌரவமாக இருக்கும்படிச் செய்துகொள்ள விரும்பினால், இவர்கள் அதற்கான முறைபடி சென்றிருப்பார்கள்.

நேரு சர்க்கார், நமது மாநில சர்க்காரிடம் வைத்துள்ள மதிப்பைப் படிப்படியாகக் குறைத்துக் கொண்டு வருவதை மாகாண மந்திரிகள் நன்கு உணர்ந்திருந்தும், அதற்கான ராஜதந்திர ஆலோசனைகளைத் தர அதற்குத் தோன்றவில்லை. ஆயினும் டெல்லி சர்க்கார் விழித்துக் கொண்டது.

தி. மு க. வின் பொதுமொழி எதிர்ப்புப் போராட்டம் பற்றி நமது மாநில சர்க்காரின் 'ரிப்போர்ட்'டுக்கும், டெல்லியின் 'ஸி. ஐ டி. ரிப்போர்ட்'டுக்கும் பெரும் வேறுபாடு இருந்தது.

சென்னையில் கூடிய மாநாட்டில், மறுதினம் சென்னை வந்திறங்கும் ராஜேந்திரர் கையில் கருப்புக்கொடியை சென்னை மாநகர முதல்வர் (மேயர்) கொடுப்பார் என்று மாநாட்டுத் தலைவர் அறிஞர் அண்ணா சொன்னார். இச்செய்தி இம்மாநில காங்கிரஸ் கட்சித் தலைவர்களையோ, மந்திரிமார்களையோ எதுவும் செய்யவில்லை. ஆனால் டெல்லி சர்க்காரின் முக்கியமானவர்களை விழித்துக் கொள்ளச் செய்தது. டெல்லிக்கும் ஹைதராபாத்துக்கும், சென்னைக்கும், தூத்துக்குடிக்கும் தந்திகள் மட்டுமல்ல; 'ஒயர்லஸ்ஸும்' பறந்தன. அத்துடன் அடுத்த செய்தி வரும் வரையில், சென்னை போலீஸ் தி மு க. சம்பந்தமாக எதுவும் செய்யக் கூடாது என்றும் உத்திரவு வந்ததாம்.

இவைகள் எதைக் காட்டுகின்றன? டெல்லி சர்க்காரின் விழிப்பையும், மாநில சர்க்காரின் மந்த புத்தியையும் தானே?

இந்த எதிர்பாராத நிலைமை வந்ததும், இந்த மாகாண மந்திரிமார்கள் ஏதும் விளங்காது விழித்தார்கள், அதாவது ராஜேந்திரர் வரும்போது 'தி மு. க. பசங்கள் யாரும் வெளியே இருக்கமாட்டார்கள்; நிலைமையை சமாளிக்க ஆந்திர, கேரள, போலீஸ் வருகைக்கும் ஏற்பாடு செய்திருக்கிறோம்; போதாததற்கு காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் போட்டு அதில் இதைக் கண்டித்திருக்கிறோம். அதுமட்டுமல்ல; இம் மாநிலத்தில் உள்ள எல்லாபத்திரிகைகளும் கருப்புக் கொடியைக் கண்டித்து எழுதவிட்டன. நிலைமை நன்றாக இருக்கும்போது, இந்த அகால நேரத்தில் இரவு 2 மணிக்கு ஹைதராபாத்திலிருந்தும், டெல்லியிலிருந்தும், நமக்குச் செய்திகள் வருகின்றனவே, ஏன்? என்று திகைத்தார்கனம். பாவம்......

இவர்களுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. சரி, இதை பின்பு பார்த்துக்கொள்ளலாம்; முதலில் பந்த் சொல்கிறபடி செய்வோம்—என்ற முடிவுக்கு வந்தார்கள்.

மறுதினம்சென்னை மந்திரிகள் காஞ்சிபுரத்தைப் பார்த்து புன்னகை பூத்தார்கள். முதல் நாள் இருந்த முறைப்பு முகம் மறுநாள் மலர்ந்த முகமாகி, "இந்தியைப்பற்றி ஏன் கவலைப் படுகிறீர்கள்? டெல்லி இஷ்டத்திற்கு நாங்கள் இணங்கவிடுவோமா?" என்றெல்லாம் பேசினார்கள்

* * *

இந்தி எதிர்ப்புப் போராட்ட மாநாட்டில் "மேயர் கருப்புக் கொடியை குடியரசுத் தலைவரிடம் கொடுப்பார்" என்று அண்ணா அவர்கள் கூற மாநகர் முதல்வர் எழுந்துவந்து அக்கொடியை ஏற்றுக்கொண்டபோது உள்ள நிலை என்ன என்பது திரு. அழகேசனுரும், அன்று தோன்றாத காங்கிரஸ் பிரச்சாரஏடும் உணர முடியாதது என்பது உண்மை.

சென்ற உலகப்போரில் இங்கிலாந்திலுள்ள குழந்தைகள் கப்பல் கப்பலாக, அமெரிக்காவுக்கும் கனடாவுக்கும் அனுப்பப்பட்டன. பின்பு இங்கிலாந்து ஜெர்மனியுடன் கடுமையாகச் சண்டையிட்டது ஜெர்மனியின் யுத்த விமானங்களால் இங்கிலாந்து முழுவதும் அழியவேண்டிய நிலைமை வந்தாலும் வரலாம்; அப்படி நேர்ந்து இங்கிலாந்து அழிந்தாலும் இங்கிலீஷ் குழந்தைகள் அங்கே காப்பாற்றப்படட்டும் என்பதே! அதாவது சர்வநாசத்துக்கும் நாங்கள் தயார்; ஆனால் ஜெர்மனிக்குப் பணிய மாட்டோம் என்பதே அதன் முடிவு.

மாநகர முதல்வர் கருப்புக் கொடி கொடுப்பார் என்று சொல்லும் போது, எதும் யோசிக்காது சொல்லவில்லை

வரவிருக்கும் பயங்கர நிலைமைக்கு பலியாவது என்ற முடிவுடனே சொல்லப்பட்டதாகும்.

ஒன்று நேருவின் வாக்குறுதி காப்பாற்றப்பட்டு ராஜேந்திரர் தன் அறிக்கையை வாபஸ் பெறவேண்டும்; அல்லது தி. மு. கழகத்தை நாங்கள் கலைத்துவிட வேண்டும்; அழிந்துவிட வேண்டும்-என்பதேயாம். விடுதலைப் போராட்டம் எத்தகையதாக இருக்கும் என்பதற்கு அது ஒரு எடுத்துக்காட்டு.

மந்திரிகளை இங்கு நயமாகப் பேசும்படிச் செய்ததுடன் கனம் பந்த் அவர்கள் சும்மா இருக்கவில்லை. அந்தோணி அவர்களைப் பிடித்து 'இன்னமாதிரி ஒரு கேள்வியை பாராளுமன்றத்தில் கேளும்' என்று கேட்கவைத்து அதற்குப் பதில் சொல்லும் முறையில் பந்த் பேசினார். ஹைதராபாத்திலிருந்து ராஜேந்திரர் பேசினார். இவ்வளவும் எதற்குத் தெரியுமா? கருப்புக்கொடி சம்பந்தமாக, தனது போர் முழக்கம் அவர்களை என்ன செய்யும் என்பதை நன்குணர்ந்த அறிஞர் அண்ணா அவர்கள், போராட்டத் தலைவர் திரு. சம்பத் அவர்களை டெல்லிக்கு அனுப்பினார். அவர் பாராளுமன்றத்தில் அன்று கலந்து கொண்டு, உடனே சென்னைக்குப் புறப்படுமுன் முதன் மந்திரி நேரு அவர்களுக்கு தன் கட்சியின் முடிவைத் தெரிவித்துப் புறப்பட்டார்

அதற்குத்தான் "தனது வாக்குறுதி காப்பாற்றப்படும்" என முதல் அமைச்சர் கடிதம் மூலம் தெரிவித்தார்.

நமது போராட்டம் என்றால்

[97—ம் பக்கம் பார்க்க]

[72-ம் பக்கத் தொடர்ச்சி]

நான்! நான் சாதாரணமானவள்—சாமானியமானவள்!''

''என்னிடம் வாதாடுவதில் பயன் இல்லை; உடனே புறப்படுங்கள்!''

''யாரடா அவன், என் சோலையின் எழில் மலரைப் பறிக்க வந்த காவலன்?''—சிம்மம்போல் கர்ஜித்து நின்றான் குவாஜா!

''நான் அரசனின் மெய்க்காவலன். ஹமீத்கான் என் பெயர்! பாக்கியமதியை அழைத்து வரச்சொல்லி கட்டளை இட்டிருக்கிறார், மன்னர்!''

''மன்னர்! இந்த சாம்ராஜ்யத்தின் மன்னன் நான்—மகேசுவரன்கூட; என் உத்திரவில்லாமல் எதையும் தொட முடியாது. இங்கு!''

''முட்டாள்! அரசரின் கட்டளையை அலட்சியப்படுத்தாதே!''

''அரண்மனையின் எடுபிடியே! வேட்டை நாயே!... குலைக்காதே!''

ஹமீத்கான் பொங்கினான்—ஓங்கி குவ ஜாவின் முகத்தில் ஒரு அறைவிட்டான் இரத்தம் வழிந்தது அவன் உதடுகளிலிருந்து. அதைத் துடைத்துக் கொண்டே சீறினான் அடிபட்ட வேங்கைபோல்!

அதற்குள் அவனது ஆட்கள் ஹமீத்கானை சுற்றி வளைத்துக் கொண்டனர். குவாஜா தனது இடையிலே இருந்த கட்டாரியை எடுத்தான் அவனது விரல்கள் அதன் கூர்மையைச் சோதத்தன. ஹமீத்கானை ஓங்கிய கட்டாரியுடன் நெருங்கினான்!

''நெருங்காதே!' என்ற இடி முழக்கம் போன்ற குரலைக் கேட்டுத் திரும்பினான், குவாஜா.

அங்கே மன்னர் நின்று கொண்டிருந்தார்! அங்கு கூடியிருந்தோர் திடுக்கிட்டனர். தலைவணங்கித் தொழுதனர்.

''குவாஜா! குவலபத்தின் பூபதியின் கோபத்தைக்கிளறி விட்டாய். இன்றிரவு உனது ஆணவத்தின் சாவுமணி ஒலிக்கும்!... ஹமீத்கான்! வீரர்களே! மூட்டுங்கள் தீ! தீ வைத்துக் கொளுத்துங்கள்! இரவுக் காலத்து இன்பலோகம் இன்றோடு சாம்பல் மேடாகட்டும்! உடலை விற்று வயிறை வளர்க்கும் வனிதாமணிகளின் கூட்டம் இன்றோடு அழியட்டும்! பரவட்டும் தீ! தீ பரவட்டும்! பாவப் பகுதி இன்றோடு தொலையட்டும்! பாக்கியமதி! நீ அரண்மனை வந்து சேர்!''

மன்னர் குதிரையைத் தட்டிவிட்டார்! குதிரை பறந்தது!

கோல்கொண்டா கோட்டையின் உப்பரிகையில் மன்னன் குலி குதுப்ஷா அமர்ந்திருந்தான். அவன் எதிரே பாக்கியமதி கண்ணீர் உகுத்த வண்ணம் நின்று கொண்டிருந்தாள். தூரத்தில், மெஹந்தி எரிந்து கொண்டிருந்தது.

* * *

''பாக்கியமதி! பார்த்தாயா தீயின் கோர நர்த்தனத்தை? என்னால் வந்த வினை அல்லவா அது?... அந்த விபச்சார சந்தையை — பெண்மையின் பெருமையைப் பழிக்கும் பொல்லாத இடத்தை — அழிக்க வேண்டுமென்று நெடு நாட்களாகத் திட்டமிட்டிருந்தேன்—என் கனவு-என் ஆசை இன்றுதான் நிறைவேறிற்று!''

''அந்தப் பொல்லாத இடத்தில் பிறந்த என்னை இங்கு அழைத்து வந்த காரணம்?''

''நீ சேற்றிலே பிறந்த செந்தாமரை—நத்தை வயிற்று முத்து—அரண்மனைக் கல்லவா சொந்தம்?''

''மன்னர் மன்னா! என்னை மன்னித்து விடுங்கள்! உங்களுக்கு ஏற்றவள் அல்ல, நான். உங்கள் அந்தப்புரத்திற்கு உகந்தவளுமல்ல!''

''அதைத் தீர்மானிப்பது நான் தான் பெண்ணே, நீயல்ல!''

''மன்னா! நீங்கள் எதைக் கூறினாலும் என் உள்ளம் ஏற்றுக்கொள்ளாது!''

''பாக்கியமதி! யாரிடத்தில் பேசுகிறாய் என்பதை மறந்துவிடாதே! மன்னரை எதிர்த்தால், என்ன தண்டனை தெரியுமா?''

''தெரியும். தெரிந்துதான் பேசுகிறேன். மரண தண்டனை! மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வேன். அரண்மனை வாசத்தைவிட மரணம் எனக்கு நன்மை அளிக்கும்!,'

''சாவைவிடக் கொடியவனா நான்?''

அப்படிக்கூறவில்லையே, நான். எனக்கு, உங்களைவிட சாவு மேலானது என்றுதான் கூறினேன்!''

''நீ அழகி மட்டுமல்ல; நல்ல அறிவாளியுங்கூட! உன் இதயத்தில் எனக்கு இடம் தரக்கூடாதா?''

''இதயம் இரண்டல்ல மன்னவா! என் இதயத்தை ஏற்கனவே வேறு ஒருவர் ஆக்கிரமித்துக் கொண்டார்!''

''யார் அவன்? அந்தப் பாரசீக வைர வியாபாரியா? நீ இல்லா வாழ்வு நிலவில்லா வானம் என்று கூறினானே, அவனா? இன்றிரவு உன்னை அபகரித்துச் செல்ல இருந்தானே; அந்த வாலிபனா?''

அடுக்கடுக்காகத் தொடுத்தான் கேள்விக் கணைகளை. கண்களில் கனல் தெறித்தது. வார்த்தைகள் வெடித்தன. பாக்கியமதி நடுங்கினாள்.

''எப்படித் தெரியும் என்று எண்ணுகிறாயா பெண்ணே? என் கண்களும் காதுகளும் இச்சாம்ராஜ்யம் முழுவதும் உலவிக் கொண்டிருக்கின்றன. எந்த மூலையில் எது நடந்தாலும் அக்கணமே எனக்கு எட்டிவிடும்! அந்த வியாபாரியைவிட நான் எந்த விதத்தில் தகுதியற்றவன், உன் அன்புக்கு?''

''மன்னியுங்கள் மன்னா! நீங்கள் அரசர், கவிஞர், கலாரசிகர். அறிவேன், நான்! அழகும், அறிவும், அன்பும், நிரம்பி வழியும் உறைவிடம் உங்கள் இதயம். அதையும் அறிவேன். ஆனால் அவர் முந்திக் கொண்டார்!''

''பாக்கியவதி! என்னுடைய கோபத்தைக் கிளறாதே! அந்த வியாபாரி உன்னை வந்து மீட்டுச் செல்லுவான் என்று நினைக்கிறாயா? அவன் சிறைச்சாலையிலே அடைபட்டுக் கிடக்கிறான். நாளை சூரியோதயத்தில் அவன் தலை கொய்யப்படும்!''

''அய்யோ! ஏன் இந்தக் கொடுமை? ஏன் இந்தத் தண்டனை? என்ன குற்றம் செய்தார் அவர்?''

''உன்னை இங்கு அழைத்து வந்தது தவறாம்; என் வீரர்களை எதிர்த்தானாம்!''

''மன்னு! அவரை மன்னித்து விடுங்கள்! அவரை விடுதலை செய்யுங்கள். அவர் என் காதலர்!''

''காதல்! மெஹந்தியிலே வாழ்ந்த நாட்டியக்காரி வாழ்வில் காதலா?''

''ஆம், மன்னவா! வாழ்ந்தால் அவரோடு வாழ்வேன்; இல்லையேல் மரணத்தைத் தழுவுவேன்!''

''அந்த வியாபாரி என்னைவிட அதிர்ஷ்டசாலிதான்! புவியாளும் மன்னனுக்குக் கிடைக்காத வைரம் வியாபாரிக்கல்லவா கிடைத்துவிட்டது?... பாக்கியமதி! உன் காதலைப் போற்றுகிறேன் — வாழ்த்துகிறேன். உன் காதலனை அனுப்புகிறேன். அவனுடன் காலமெல்லாம் மகிழ்ச்சியோடு இரு!''

''மன்னர் மன்னு! உங்களுக்கு நான் எப்படி நன்றி செலுத்துவேன்? உங்கள் இதயம் மிகவும் விசாலமானது. உள்ளம் மேருமலையைவிட உயர்ந்தது. காலமெல்லாம் உங்கள் பெருமையை—பெருந்தன்மையை பாடிக்கொண்டிருப்பேன்!''

''பாக்கியமதி! இன்று நீ என்னை விட்டுப் பிரிந்தாலும், என்றென்றும் என் இதயத்தில் வாழ்ந்து கொண்டிருப்பாய். நான் காதலித்ததும்இழந்ததும் நீ ஒருத்திதான்! பரவாயில்லை! தாங்கிக் கொள்கிறேன், அவ்வேதனையை. நீ சுகமாக இரு... உன் காதலனை அனுப்புகிறேன்'' என்று கூறிக் கொண்டே வெளியேறினர்.

பாக்கியமதியின் கண்கள் மின்னின. அதிலே ஆனந்த கண்ணீர்! அரசனின் நல்ல உள்ளத்தை அவள் உள்ளம் வாழ்த்திக் கொண்டிருந்தது!

'பாக்கியமதி' என்று அழைத்துக் கொண்டே வந்தான் வைர வியாபாரி.

பாக்கியமதி பறந்தாள்; அவன் அரவணைப்பில் சிக்கினுள்!

''மன்னர் மிகவும் நல்லவர்'' —அவள் கூறினுள்.

அவன் ''ஆமாம்''என்ருன்.

அப்போது ஹமீத்கான் அங்கு வந்தான். அவனைக் கண்டதும் 'கிரீச்' என்று சப்தமிட்டாள் பாக்கியமதி.

''கண்ணுளா! மன்னர் விளையாடுகிருர் நம் வேதனையுடன். அதோ, பாருங்கள் பிரபு. நம்மைக் கைது செய்ய வந்திருக்கும் காவலனை'' கதறினுள் பாக்கியமதி.

வியாபாரிதிரும்பினுன். ஹமீத்கான் தலை வணங்கித் தொழுதான்!

இக்காட்சியைக் காண பாக்கியமதி திடுக்கிட்டாள்.

அவளுக்கு ஒன்றும் புரியவில்லை!

''ஹமீத்!''

''மன்னு!'' என்ருன் அவன்.

மன்னர்! கோல்கொண்டாவின் மண்டலாதிபதி...! வைர வியாபாரியாக வந்து நெஞ்சிலே குடியேறியவர் முடிவேந்தர்! அவளால் அந்த மகிழ்ச்சியைத் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. மன்னனின் காலில் விழுந்தாள்!

''மன்னியுங்கள் மன்னு! என்னை மன்னியுங்கள்!... நான் அதிர்ஷ்டசாலி! பாக்கியசாலி!''

மன்னர் பாக்கியமதியை அணைத்துக் கொண்டார்!

* * *

கோல்கொண்டா நகரமே கொதித்தெழுந்தது, நாட்டின் முகலாய மன்னர் காமவேள் நடனசாலையில் வாழ்ந்து வந்த இந்துப் பெண்ணைத் தனது ஆசைநாயகியாக ஏற்றுக் கொண்ட செய்தியை அறிந்து! மன்னரின் மாமனும் நாட்டின் பிரதமருமான ஷா நிஜாம் இஸ்பானி 'கொடுமை, அக்கிரமம், அநீதி' என்று கொக்கரித்தார்!

''பாக்கியமதி! உன்மேல் நான் வைத்திருக்கும் அன்பை அவர்கள் அறியவில்லை. அதை விரைவில் அவர்களை உணரச் செய்கிறேன்'' என்று கூறுவார், பாக்கியமதி கலங்கிய நேரங்களில் எல்லாம்!

சலசலவென்று சிந்து பாடிக் கொண்டிருந்த மூசி ஆற்றங்கரையில் அழகான கட்டிடங்கள் எழும்பின! உலகத்தின் பல்வேறு பகுதியிலிருந்து சிற்பிகளும் கட்டிட நிபுணர்களும் புதிய நகரத்தை நிர்மாணிக்கும் பணியில் ஈடுபட்டனர். கலை அம்சம் பொருந்திய கோயில்கள் எழுந்தன!

புதியநகரம்ஒன்றுபொலிவோடுக் காட்சி தந்தது. கலைத்தேவி அங்கே குடியேறியிருந்தாள் பாக்கியமதி அந்தக் கலைக் கோவில்களை கண்டு பிரமித்துப் போனுள்.

''பாக்கியமதி! இந்நகரத்தின் பெயர் என்ன தெரியுமா?''

''இந்த கலைக் கோயில் தங்களின பெயரால்தான் அழைக்கப்படவேண்டும், பிரபு! முகமத் நகர் என்று பெயர் சூட்டுங்கள்!''

''கண்ணே! இந்நகரம் என் வாழ்வில் இன்பம் சேர்த்த யாழ்! புத்துயிரும், புதிய வாழ்வும் அளித்த புனிதக் கோயில்! பாக்கியமதி, என் வாழ்வே! இன்றிலிருந்து இந்நகரம் பாக்கியநகர் என்ற புனிதப்பெயரை சுமக்கும்; நம் காதல் வாழ்வைப் பாடும்! மத பேதத்தை உண்டாக்கும்! புல்லர்களின் வாயை அடக்கும்!

''இந்த கௌரவம் எனக்கு மிகமிக அதிகம் பிரபு—மிகமிக அதிகம்!''-அவளால்பேச முடியவில்லை!

* * *

காலம் ஓடியது...காலன் பாக்கியமதியை மன்னரிடமிருந்து பிரித்தான்!

பாக்கிய நகர்—மன்னனின் மதன மண்டபம் — காதல் பாடிக்கொண்டிருந்தது.

முகமதுகுலிகுதுப்ஷாவிற்குப் பின் கோல்கொண்டாவில் சிம்மாசனம் ஏறிய சுல்தான் முகமது, இந்துப் பெண் ஒருத்தியின் பெயரால் அழைக்கப்படும் அந்த மாநகரின் பெயரை முகமது குலி குதுப் ஷாவின் மறு பெயரான ஹைதர் என்ற பெயரால்-ஹைதராபாத்— என்று மாற்றி அமைத்தான்.

பெயரை மாற்றினுர்களே தவிர, அதன் பெருமையை மறைக்கவில்லை. இன்றும் மதன மண்டபம் அந்த காதல் ஜோடிகளின் நினைவுச் சின்னமாக விளங்குகிறது. இன்றும் ஹைதராபாத்தில் பாக்கியவதி வாழ்ந்த மாளிகைகளைக் காணலாம். இடிந்துபோன அம்மண்டபங்கள் ஓர் அற்புதக் காதல் ஓவியத்தின் நினைவுச் சின்னங்கள்! மன்னனின் மன மாளிகையின் ஜோதி விளக்கின் ஒளிச் சிதறல்கள்! காதல் காவியத்தின் இன்ப வரிகள்!

நடிகன்

நாஞ்சில் கி. மனோகரன் எம்.ஏ.

பசுமையான புற்றரையின் மேல் மல்லாந்து படுத்துக் கொண்டு வான வீதியை நோக்கிக் கிடந்தான் அவன். பெயர்த்தெடுத்த புல் ஒன்று அவன் வாயின் ஓரத்தில் சிக்கி அரைபட்டு இறந்து கொண்டே வந்தது.

ஒளிமிக்க பெரிய கண்களும் வசீகரமான முகத் தோற்றமும், கட்டான உடற்கட்டும் படைத்த அவன் எதையோ நினைத்து அடிக்கடி தனியாகச் சிரித்துக் கொண்டிருந்தான்.

அவன் பக்கத்தில் படுத்திருந்த நண்பன் சிரிப்புக்குக் காரணம் கேட்பதிலே ஆர்வத்தைக் காட்டிக் கொண்டிருந்தான். அவன் பெயர் ஆரம்.

ஜில்லென்று வீசிய காற்று அவர்களைத் தழுவி மறைந்தது. புத்துணர்ச்சி கொண்டவனைப்போல அந்த வாலிபன் எழுந்து உட்கார்ந்தான்.

"அடக்கமுடியாத ஓர் ஆசை என்னை ஆட்கொண்டிருக்கிறது, ஆரம்!" என்றான்.

"தந்தையைப்போல் தலைசிறந்த நடிகனாக வேண்டுமென்று விரும்புகிறாய்; அது தானா?"

ஏமாற்றம் வாலிபனின் முகத்தில் சதிராடியது.

"இல்லை...அந்த ஆசை எனக்கில்லை! ஆனால்..."

'ஆனால்'—ஆரம் ஓரப் பார்வையால் வாலிபனை நோக்கினான்.

"எனது பெயர் வரலாற்றிலே இடம்பெற வேண்டும் என்று துடிக்கிறேன். உலகத்தின் உதடுகளில் நான் சுழன்று கொண்டிருக்கவிரும்புகிறேன். வருங்காலம் என்னை மறக்க இயலாதபடி என்னைச் சுற்றி வரலாறொன்று உருவாக வேண்டும்."

ஆர்வத்தால் அவன் உடல் ஆடியது. இதழின் ஓரத்தில் மிச்சமாகத் தப்பிக் கிடந்த புல் முழுமையாக வாயின் உள் நுழைந்து பல் சக்கரத்தில் அரைபட்டது.

"எப்படி முடியும்? எந்த முறையில்?"-அவன் நண்பன் ஆரம் ஆச்சரியத்தோடு கேட்டான்.

கொஞ்ச நேரம் அவன் பேசவில்லை.

உள்ளம் ஒருவேளை கேள்விக்குப் பதில் கண்டு கொண்டிருந்திருக்கக்கூடும். அமைதி நிலவியது.

"எப்படி என்று கேட்கிறாயா? சொல்லுகிறேன், கேள்!"—வாலிபனின் முகத்தில் மகிழ்ச்சி களை கட்டியது.

"உலக அதிசயங்கள் ஏழு கேள்விப் பட்டிருக்கிறாயா?... சரி, உதாரணத்திற்குச் சொல்லுகிறேன். 'ரோட்ஸ்' சிலையைப்பற்றி நீ அறிந்திருக்கக்கூடும். இப்போது நின்று கொண்டிருக்கும் உலகத்தின் கவனத்தைக் கவர்ந்த அந்தச் சிலையை எந்த வகையிலாவது தூள் தூளாக்கி விடுவது!" -சொல்லி விட்டு நண்பனைக் கவனித்தான் அந்த வாலிபன்.

"அதன் மூலம் என் பெயர் நிலைக்கும். ஆயிரமாயிரம் ஆண்டுகள் என் பெயரை மக்கள் முணுமுணுப்பார்கள். என்றைக்கும் யாராலும் என்னை மறக்க முடியாது! சிங்காரச் சிலை நினைவை விட்டு அகலாது என்பது உண்மையானால், அதைச் சித்திரவதைக்காளாக்கிய என்னையும் அவர்கள் மறக்க முடியாது. நான் மாண்டு போவேன்; ஆனால் என் செயல்- அதில் பொதிந்து கொண்டிருக்கும் என் பெயர் மாறாது; மறையாது! வரலாறு எனக்காகப் பக்கத்தை ஒதுக்கும். வரிக்கு வரி, வார்த்தைக்கு வார்த்தை என் பெயர் எழுப்பும் ஒலம் உலகத்தின் காதுகளைக்குடைந்து கொண்டிருக்கும். இப்படியாக என் ஆசை நிறைவேறும்!..."—வார்த்தைகளைக் கொட்டி உதிர்த்து விட்டு, ஆரத்தை அந்த வாலிபன் உணர்ச்சியுடன் தழுவிக் கொண்டான்.

"அழிந்து சரியும் அந்தச் சிலை தன்னோடு உன்னையும் தாழத்திவிட்டால்...? இது வரை நீ உருவாக்கிய செல்வாக்கு—நாளை உன்னை சந்திக்கவிருக்கும் கீர்த்தி இவைகளின் கதி?"—ஆரம் வேதனையோடு இதை வெளியிட்டான்.

"மகிழ்ச்சியோடு சாவேன். அப்போது நான் மன நிறைவென்னும் களத்துமேட்டிலே நிற்பேன். குவிந்து கிடக்கும் எண்ணங்கள் என் இதயத்திற்குத் தாலாட்டு பாடிக் கொண்டிருக்கும்! இதுவரை யாரும் செய்யாத காரியம் ஒன்றை நான் செய்தேன். இனிமேல் யாரும் இதுபோல் செய்யப்போவ



தில்லை! இதைவிட கிளர்ச்சியூட்டும் ஒரு நினைப்பு மானிட சாதிக்குத் தேவைதானா ஆரம்?...'', — வாலிபன் உணர்ச்சி வயப்பட்டுப் பேசினான்.

* * *

காலம் உருண்டோடியது.

வாலிபனின் பழைய நண்பர்களைக் காணோம்! உற்றுழி உதவும் 'ஆரம்'கள் எங்கோ மறைந்தனர்! உள்ளத்தில் உறைந்துகிடந்த பழைய எண்ணங்களுக்கு அந்த வாலிபன் உருவான வடிவம் சமைத்துக் கொண்டிருந்தான். வரலாற்றிலே இடம் பெறத் துடித்தான்.

அவன் வாழ்ந்த நாடு அவனை உற்றுக் கவனித்தது. அவன் தோற்றம் இனிமையாக இருந்தது. பேசிடும் அவன் கண்கள் தோகை மயில்களை அவன் தோளுக்குக் கொண்டு சேர்த்தன. அவன் அசைவுகள் ஒவ்வொன்றிலும் தேங்கிக்கிடந்த நடிப்புத் திறன், எண்ணற்ற ரசிகர்களை அவன் தாளுக்குக் கொண்டு குவித்தன!

அரிதாரம்பூசிஆயிரக்கணக்கான ரசிகர்கள் மத்தியில் மேடையில் தோன்றிடும் அந்த ஆணழகன், ஆண்டொன்றிற்கு 20,000 டாலர் சம்பாதித்தான். தெருவீதிகளில் அந்தக் கலைஞன் செல்லமுடியாத நிலை! குறிப்பாகக் காந்தச் சிலைகளின் விழிகளுக்கு அவன் விருந்தானான்! பெரிய குடும்பத்துப் பெண்கள் படிப்பறைகளில் அவனது புகைப் படங்கள் துணிவோடு தொங்கின. செனெட் அங்கத்தினர் ஒருவர் தன் மகள் அந்த நடிகனிடம் கொண்டுள்ள மாளாத மையலைக் கண்டு மனம் நடுங்கி ஊரை விட்டே குடி பெயர்ந்த சுவைமிக்க கதையும் உண்டு!

அவனுக்காக எத்தனை பாராட்டு வைபவங்கள்—கேளிக்கைகள்—விருந்துகள்-ஆர்ப்பாட்டங்கள் -- உற்சாகமான வரவேற்புகள்!

புகழ் மாளிகையின் உச்சிக்கு, திறமை யெனும் படிக்கட்டுகள் வழியாக மேலேறிக் கொண்டிருந்தான்.

புகழ் பெற்ற விடுதிகளில் பல இரவுகளை அவன் இணையாகக் கழித்திருக்கிறான்!

பொழுது போவதே தெரியாமல், விடிந்ததற்காக வருந்தி, வருநாளை எதிர்பார்த்து, ஏக்கத்தைப் பார்வையாக்கி 'இச்'சொலி மூலம் பிரிவு உபசாரம் நடத்திச் சென்ற ஏந்திழைகள் எண்ணிலடங்காதவர்!

அவன் நடிகன் மட்டுமல்லாமல், கவிதை உள்ளம் படைத்தவனாகவும் காட்சியளித்தான். வெட்டியிழுக்கும் பார்வைக்குச் சொந்தக்காரிகளானகட்டழகிகளோடு தழுவும்போது கவிதை பொங்கும்! கவிதை முடியும் —காலைக் கதிரவனின் கதிர்கள் அறையைச் சந்திக்கும்போது!

என்றாலும், அவன் மனம் ஒரு நிலையில் நில்லாது ஆடியது. அவனைச் சுற்றி நடைபெறும் மதிப்பூட்டும் சம்பவங்களில் மனம் ஏனோ தொடர்பு கொள்ளவில்லை.

'மகத்தான' லட்சியம் ஒன்றில் அவன் இதயம் இணைந்து நிலைத்தது. கடமையைச் செய்து முடிக்குமுன் தன்னைப் பெற்று வளர்த்த தாய்க்கு ஒரு முடங்கல் தீட்டினான்:

'' அன்புள்ள அம்மாவுக்கு,

“சரியோ, தப்போ ஆண்டவனே தீர்ப்புவழங்கட்டும்; மனிதனல்ல. எனது உள்நோக்கம், நல்லதாகவோ பொல்லாததாகவோ இருக்கட்டும்! வடநாட்டிற்கு எனது நிரந்தரமான கண்டனம்! வாழ்க்கையைவிட நான் சமாதானத்தை விரும்புகிறேன்; வார்த்தைகளே கிடைக்கவில்லை; அந்த அளவிற்கு நான் யூனியனைக் காதலித்தேன். நான்கு ஆண்டுகளாகக் காத்திருந்தேன், நம்பினேன், பிரார்த்தித்தேன், இருண்ட மேகங்கள் கலைவதற்காக—பழைய கதிரவனின் பேரொளி மேலும்

உருவாகி நிலை கொள்வதற்காக சமாதானத்தை எதிர்நோக்கிய எனது நம்பிக்கை செத்து விட்டது! எனது பிரார்த்தனைபோல் நம்பிக்கையும் நாசமாகி விட்டது! கசப்பான முடிவைச் சந்திக்க அதில் பங்கேற்கப் புறப்படப் போகிறேன்.

''எப்போதும் தென்னாடு சரி என்ற கருத்துப் படைத்தவன் நான். நான்காண்டுகளுக்கு முன்பு இந்த நாட்டின் அரசியல் கடிவாளத்தை ஒரு பெரிய மனிதரின் கையில் ஒப்படைத்தபோது அராஜகத்தின் ஆரம்பம் உருவாகிறது என்பதை உணர்ந்தேன்.

''தென்னாடு எப்போதுமே அறிவுள்ளது. எதிரியின் வீரர்கள் தன் துப்பாக்கியின் குதிரையை அழுத்தும்போது விவாதத்திற்கும் கேளிக்கைக்கும் இடம் எங்கே இருக்க முடியும்?

''வெளிநாட்டுப் படையெடுப்பென்றால் சரியோ தவறோ 'நாடு'—நம்புகிறேன். அது தான் முக்கியம்.

'' தென்னாட்டிற்கு வேறு வழியே இல்லை! அழிவு—அல்லது அடிமைத்தனம்! அடிமைத்தனம் — ஐயோ, சாவைவிடப் பயங்கரமானது! இதில் எதைத்தேர்ந்தெடுப்பது என எனக்குத் தெரியும்!

'' எனது காதல், நிச்சயமாகத் தென்னாட்டிற்கு மட்டும் தான் எனது கடமையை நான்நிறைவேற்றுவேன்....

அன்புள்ள மகன் ''

எழுதி முடித்தான். தாய்க்கு அனுப்பி விட்டான். ஆனால் அவன் உள்ளம் யாருக்காகவோ எதையோ திட்டிக் கொண்டிருந்தது.

'' வரலாற்றில் எனது பெயர் இடம் பெறவேண்டும்!''

சந்தர்ப்பங்கள் அவனுக்குத் துணை செய்வதாக உணர்ந்தான்.

இலட்சியத்தை நிறைவேற்றப் புழுவாய்த் துடித்தான்; முயற்சிகள் முனை முறிந்தன; மேலும் மேலும் தீவிரம் காட்டினான்.

வரலாறே, உனக்குத்தான் எவ்வளவு மதிப்பு! உன் அன்பைப் பெற, அணைப்பைப் பெற எவ்வளவு முயற்சிகள்!

'' இரண்டு முறைகளில் வரலாற்றில் இடம்பெற முடியும் அறிவு சக்தியாக—ஆக்க சக்தியாக!''—காலம் சத்தம்போட்டுக் கூவியது!

'' எப்படியாவது ஒரு வழியில் '' வாலிபனின் உள்ளம் காலத்தைக் கொன்றது! துணிந்து விட்டான்.

* * *

இரவு சுமார் 8 மணி இருக்கும் அப்போது!

போர்டு கொட்டகை விளக்குகளால் மின்னிக் கொண்டிருந்தது. அதனுடன் போட்டி போட்டு பனியும் கொட்டிக் கொண்டிருந்தது. கண்ணைக் கவரும் வனப்புள்ள ஆடைகள் அணிந்த ஆண்களும் பெண்களும் நாடகத்தை கவனித்துக் கொண்டிருந்தனர்.

இடையிடையே அவர்களது ஆசை நிறைந்த விழிகள் அலங்காரம் செய்யப்பட்டிருக்கும்மாடியிலுள்ள பெட்டியைப்பார்க்கின்றன; ஏமாறுகின்றன!

கொட்டகை முழுமையும் பாசம் நிறைந்த பார்வை..... பார்வைக்குரிய ஆசைப் பொருள் இன்னும் கிடைக்கவில்லை!

வீட்டுக்கு வீடு இன்ப விளையாட்டு இப்போது! நான்காண்டு காலமாக நாடு ஈடுகொடுத்த வேதனைக்கு அளவில்லை! சுவைக்க வேண்டிய பருவங்கள் கனிய வேண்டிய காலத்திற்காக பலியாகிக் கொண்டிருந்தன! புனிதமான நோக்கங்களுக்காக நாடு தன்னைத் தயார் படுத்தியது. வேதனைகளை மகிழ்ச்சியோடு ஏற்று சோதனைகளுக்குத் தன்னைத் துணிவோடு ஒப்படைத்தது!

நோக்கங்கள் வென்றன காலம் கனிந்தது.

களப் பலியானவர்கள் கதை வரலாருகியது!

சூறை நின்றது. கலம் கரை சேர்ந்துவிட்டது. பிரசவ வேதனை முடிந்தது; எதிர் பார்த்த ஆசைக் குழந்தை விருப்பப்படியே கிடைத்தது! மகிழ்ச்சிக்கு எப்படி அளவிருக்கமுடியும்?

இதற்குக் காரணமானவர் யார்?

அவரைத்தான் போர்ட் கொட்டகையில் மக்கள் எதிர்பார்க்கிருர்கள்.

இப்போது மணி 8-25. மேடையிலே தோன்றிய ஆடலழகி நடிப்பதை நிறுத்திக் கொண்டாள். கையொலி எழுப்பினுள். கொட்டகை முழுதும் எழுந்து நிற்க, அனைவரும் மாடியிலுள்ள 7, 8 எண்ணுள்ள பெட்டிகளைப் பார்க்கின்றனர்! வாழ்க ஒலி வானைப் பிளக்கிறது! மெய் மறந்தனர் மக்கள்!

நாட்டுக்கு அவன் தந்தை!

மக்கள் கூட்டம் அவனுடைய செல்லக் குழந்தைகள்!

இந்த உணர்ச்சி அங்கே பொங்கியெழுந்தது!

மக்கள் ஆவலோடு எதிர் பார்த்தவன் வந்துவிட்டான்.

நாடகம் தொடருகிறது!

இன்பத்தின நள்ளிரவும் தொடர ஆரம்பித்ததோ? இப்போது வரலாற்றில் இடம் பெறத் துடித்த வாலிபனைக் காணுகிருேம்; குதிரை மீதமர்ந்தவனுக! அவன் தனியன் அல்ல! அவனுக்கும் ஒரு சிலர் துணை...... எதை எதையோ அவர்களுக்குள்ளே பேசிக்கொள்கிருர்கள். கலைகிருர்கள்.

வாலிபன் மட்டும் போர்ட் கொட்டகையை நெருங்குகிருன். பல பேர் அந்த நடிகனுக்கு வணக்கம் தெரிவிக்கிருர்கள்; ஏற்றுக்கொள்ளுகிருன்.

கொட்டகையின் உள்ளே நுழைந்த அவன் கூரிய விழிகள் மாடியிலுள்ள 7,8 எண்ணுள்ள பெட்டிகளைச் சந்திக்கின்றன.

மேலே ஏறுகிருன். 7, 8 பெட்டிகள் பக்கம் கால்கள் இழுக்கின்றன.

நாட்டின் தந்தையும் அவன் குடும்பமும், நாடகத்தில் ஒன்றிவிட்டனர்.

ஒன்ருத ஒரு மனிதன் இந்த வாலிபன்!

அவன் சட்டைப் பைக்குள் கை நுழைகிறது! எதையோ எடுக்கிருன். பளபளப்பாக இருக்கிறது! அதோ, அழுத்துகிருன்! டுமீல்...டுமீல் சத்தம்!

என்ன அது? கைத்துப்பாக்கியின் வெடிப்பா? சுட்டுவிட்டானு? அறை முழுமையும் விஷப்புகை!

நாடக ஆரவாரத்தில் இந்த சத்தத்தை அனைவரும் கேட்க முடியவில்லை.

நாட்டின் தலைவனை, நடிகன் சுட்டுவிட்டான்!

காட்டுத் தீ போல சேதி பரவிற்று!

மலர்ந்த மகிழ்ச்சி, கண நேரத்தில் கருகி விட்டது.

"ஐயோ"—அமெரிக்கா அழுகிறது!

அடிமை விலங்கொடித்த லிங்கன் வரலாருகி விட்டான்!

ஆனுல் அவனைக் கொன்ற அந்த வாலிபன்—நடிகன் அவன் எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டானு?

லிங்கனை நினைக்கிறபோது பலாத்காரமாக அவரைச் சுட்டவனும் நம் நினைவில் நுழைந்து விடுகிருனே!

அபிரகாம் லிங்கனின் தத்துவங்களைச் சுவைக்கிற போது, நம்மை மறக்கிருேம்; அந்த ஒப்பற்ற மேதையை வீழ்த்தியவனைப் பற்றி எண்ணுமலா இருக்க முடிகிறது?

ஆக்க சக்தியின் தனிப் பெரும் பொருளாக, வரலாற்றிலே இடம் பெற்று விட்டான் லிங்கன்.

அழிவு சக்தியின் கரும்புள்ளியாக, அதே வரலாற்றிலே இடம் பெற்றுவிட்டான் அந்த வாலிபன்!

"வாழ்க லிங்கன்" என்று வரலாறு ஆரவாரம் செய்யும் போது,

"வீழ்க ஜான் வில்க்கிஸ் பூத்" என்று காலம் வீழ்ச்சி கீதம் பாடிவிடுகிறது! அதன் மூலம் விரும்பத்தகாத விருந்தாளியாக வரலாற்றில் அவனும்தான் நடமாடிக்கொண்டிருக்கிருன்.

கல்லுடைக்கும்
உழைப்பாளி
[புகைப்படம் அமிர்தம்]

அண்மையில் ஒரு திரைப் படம் பார்த்தேன். ஆங்கிலப் படம், காணுதவர்களுக்காக கற்பனையும் கலந்து, இதைத் தருகிறேன்.

அவசரமாக ஒரு சேதியை அனுப்பிவைத்தான் படைத் தலைவன். சேதியைக் கண்ட அமெரிக்க அரசாங்கம் கிடுகிடுத்தது.

– அமெரிக்காவின்மீது ரஷ்யா அணுகுண்டுகளை வீசப் போகிறது என்பதுதான் கிடைத்த சேதி.

ரஷ்யா வீசுவதற்குள் நாம் வீசிவிட வேண்டும் என்று, விஞ்ஞானிகளுக்கு உத்திரவுகள் பறந்தன. இது எப்படியோ ரஷ்யாவுக்கு எட்ட, எல்லா குண்டுகளையும் எடுத்து உடனே வீசுமாறு கட்டளையிட்டது.

இப்படியாக, யாரோ ஒருவன் வைத்த 'தூபத்தால்' ஒருநாள், இந்த அழகான உலகம் அழிந்தது.

தங்கள் வெற்றியைக் கொண்டாட அமெரிக்காவும் இல்லை; ரஷ்யாவும் இல்லை; ஏன், எந்த நாடுகளுமே இல்லை! அவைகள் இருந்த இடத்தில் வெறும் மண் மட்டுமே இருந்தது. எல்லா உயிர்களும் அழிந்தும் எப்படியோ ஒரே ஒருவன் மட்டும் சாகவில்லை. உலகம் முழுவதுமே இப்போது அவன் ஒருவனுக்குச் சொந்தம் என்று அறிந்தபொழுது, அவனுல் இருப்புக் கொள்ளவில்லை. குதித்தான்; குதூகலித்தான். இங்கு மங்கும் ஓடினுன். 'எனக்கு யாரும் போட்டியில்லை; எல்லாம் என் இடம்; என் சொத்து' என்று ஆனந்தப்பட்டான்.

ஒரு நாள், இரண்டு நாளானதும், உலகமே சூன்யமாகத் தெரியலாயிற்று. ஆனந்தத்தையும் அகமகிழ்ச்சியையும் அவன் மட்டுமே எப்படி அனுபவிக்க முடியும்? யாராவது இருந்தால்தானே சொல்லி மகிழலாம்! சுகத்தையோ, துக்கத்தையோ தனி ஒருவன் மட்டும் அனுபவித்துவிட முடியாது. அதற்குக்கூட யாராவது இருக்க வேண்டும். தான் மட்டும் தனியாக இருந்தால், விரக்தி ஏற்பட்டு சாக வேண்டியது தான் என்று நினைத்தான்.

சூன்யமாய், காற்றுக் கொப்புளம்போல் இருந்த உலகத்தில் அவன் மட்டும் ஓடியும் ஆடியும் உண்டும் களைத்தும் எத்தனை நாளைக்குத்தான் இருக்க முடியும்? சே! இந்த வாழ்க்கையை விட, நாமும் செத்துவிட வேண்டியதுதான் என்கிற முடிவுக்கு வந்தான். அப்படி செத்தால், தனக்காக வருத்தப்படவோ, துக்கப்படவோ யாரும் கிடையாது என்று எண்ணியபோது அவன் இதயமே வெடித்து விடும் போலிருந்தது. மனிதர்கள் தத்தம் இன்ப துன்பங்களை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டதால்தான் இத்தனை நாளும் உலகம் இன்பமாய் இருந்தது என்கிற உண்மை அவனுக்குப்பட்டது. ஐயோ! எனக்கு யாராவது ஒரு துணை கிடைக்க மாட்டார்களா — என்று அலைந்தான். எங்கே போகிருய், ஏன் போகிருய் என்று கேட்க யாரும் இல்லை, தடுக்க எந்த அரசாங்கமும் இல்லை. சுயேச்சையான வாழ்வு கிடைத்திருந்தும் அவனுல் அனுபவிக்க முடியவில்லை.

யாராவது ஒருவர் தன்னைக் கேள்விகள் கேட்க வேண்டும்; அப்படிக் கேட்பவர்களை எதிர்த்துத் தான் பதில் சொல்ல வேண்டும்; தன் பதிலைக்கேட்டு அவர்கள் பதில் சொல்ல முடியாமல் திண்டாடித் திணர வேண்டும்; அதைக் கண்டு, அவர்களைவிட மேலான தன் மதியூகத்தை நிலைநாட்டவேண்டும்; இப்படியெல்லாம் எண்ணம் ஓடிற்று. கட்டுப்பாடுகள் இருந்தால்தானே, அதையொடிக்கும் வேகமும், அந்த வேகத்தால் இதயத்தில் ஒரு கதுகதுப்பும் பெற முடியும்! கட்டுப்பாடுகள் இருந்த உலகத்தை வெறுத்தவன், நேற்றோடு அழிந்த அந்த உலகத்துக்காக இன்று ஆசைப்பட்டான்; அலைந்தான்.

அரங்கண்ணல்

அவன் அலைச்சல் வீண் போகவில்லை. தன்னைப் போல் இன்னும் ஒருவனும் ஒழிந்த உலகத்தில் உயிர் தப்பியிருப்பதைக் கண்டான்.

இன்னொரு உயிரைக் காண மாட்டோமா — என்று இத்தனை நாளும் ஏங்கித் தவித்த அவனது மனதில், உடனடியாக ஏற்பட — வேண்டிய ஆனந்தத்திற்குப் பதில், உடனே வேதனைதான் உண்டாயிற்று. தனக்குப் போட்டியாக இன்னொருவனும் உயிர் பிழைத்துவிட்டானே என்கிற எண்ணத்தால் ஏற்பட்ட வேதனை.

இப்படி எண்ணிய அவனுக்கே, தன்னை நினைக்க வெட்கமாயிருந்தது. கொஞ்ச நேரத்துக்கு முன்பு வரையில் இன்னொரு உயிரைக் காண முடியாதா என்று ஏங்கியதும், இப்போது நேரே கண்டதும் நினைப்பு எங்கோ போவதையும் உணர்ந்தான். 'இதைத்தான் பொறாமை என்று பழைய உலகத்தில் சொல்வோம்; இவ்வளவு பெரிய உலகில் இருப்பது இரண்டே இரண்டுபேர். நமக்குள் என்ன?' என்று மனக் குதிரையின் கடிவாளத்தைப் பிடித்து இழுத்து நிறுத்தினான். இந்த நேரம் வரையில் தனக்கே சொந்தமாயிருந்த உலகத்தை இன்னொருவனுக்கும் பகிர்ந்து கொடுக்க முன்வந்த போது, அவன் உள்ளம் குளிர்ந்தது. குளிர்ச்சிக்குக் காரணம், தன் மனதில் ஏற்பட்ட பொறாமை உணர்ச்சியை வென்றதாலா; அல்லது 'கொடுப்பதில்தான்' இன்பம் என்பதை அறியும் சந்தர்ப்பம் ஏற்பட்டதாலா என்று அவன் சிந்திக்கும் நிலையில் இல்லை.

"நீ என்ன பிராடெஸ்டெண்டா? கத்தோலிக்க மார்க்கமா?" என்றோ, "எந்த மதம்? என்ன சாதி?" என்று கேட்கும் எண்ணமோ அவனுக்கு எழவில்லை. ஏழையா பணக்காரனா என்று 'உலகம் உயிரோடு இருந்தபோது' வந்திருந்தால் கேட்டிருப்பான். ஏராளமான உயிர்ராசிகள் உலகத்திலிருந்தபோது, அண்டை வீட்டுக்காரன் செத்தாலும் வாழ்ந்தாலும் அவன் கவலைப்பட்டதில்லை. இப்போதோ, வந்தவனுடைய அகமும் துக்கமும் அவனுடையதாகப் பட்டது. அவனுக்கு எந்தவித அழிவோ, ஆபத்தோ வந்துவிடக் கூடாது என்பதில் அக்கறைகாட்டினான். நேற்று வரையில் மனதில் எண்ணியதை யெல்லாம் அவனோடு பேசிக் களித்தான். இரண்டு பேரும் சேர்ந்தே உண்டார்கள்—உலவினார்கள்—உறங்கினார்கள். இன்று ஒருவருக்கொருவர் தாங்கள் இருப்பது போல, நேற்று வாழ்ந்த ரஷ்யாவும் அமெரிக்காவும் எண்ணியிருந்தால் இந்த அழிவு உண்டாகியிருக்குமா என்று பேசிக் கொண்டார்கள். உலகத்தை இரண்டு பேரும் பாதியாகப் பங்கு போட்டுக் கொண்டு வாழ்வோம் என்று இருவரும் எண்ணவில்லை. இருவரில் ஒருவன் சொன்னால்கூட, "வேண்டாம்பா! எல்லாவற்றையும் நீயே வைத்துக் கொள். என்னைத் தனியாக மட்டும் விட்டுவிட்டுப் போய் விடாதே" என்று சொல்வதற்கு இருவருமே தயாராக யிருந்தார்ககள்.

இப்படிப் பட்ட சமயத்தில் அவர்கள் மத்தியில் ஒரு பெண் தென்பட்டாள்!

இவர்களைப்போல உயிர் தப்பிய மூன்றாவது நபர் அவள் என்று தெரிந்தது. இரண்டு நண்பர்களுமே அவளை மனமுவந்து வரவேற்றனர். முதலாவது ஆளுக்கு அவளைக் கண்டது முதல் இரண்டாவதாக வந்தவனைப் பார்க்கும் போதெல்லாம், நேற்று வரையிலிருந்த நினைவு மங்கலாயிற்று. 'ஏண்டா வந்தான் இவன்? ஒழிந்த உலகத்தோடு இவனும் போயிருக்கக் கூடாதா?'— என்று எண்ண ஆரம்பித்தான்.

இப்போது வந்தவளும் தானும் மட்டுமிருந்தால், இந்த உலகத்தில் எவ்வளவு ஆனந்தமாகக் கழிக்கலாம்— என்று ஆசைப்பட்டான். இந்த எண்ணம் வந்தது முதல், இரண்டாவது ஆள் மீது நேற்றுவரையிலிருந்த அன்பு குறைந்தது. தப்பித் தவறி அவன் அவளைப் பார்த்தாலும் போதும்; அவள் அவனைக் கண்ணெடுத்து நோக்கிவிட்டாலும் சரி; இருதயத்தைக் கசக்கிப் பிழிந்து வீசுவது போலிருந்தது அவனுக்கு. அதனால் இரண்டாவது வந்தவனைவிட்டு எவ்வளவோ தொலைவில் இருக்க முடியுமோ அவ்வளவு தூரத்திலிருக்க ஆசைப்பட்டான். அவளை, தன்னருகிலேயே, தன் பொருளாக வைத்துக் கொள்ள விரும்பினான். வலம் வந்தான். அவனுடைய போக்கைக் கண்ட அவளுக்கோ வெறிப்பாயிருந்தது. இரண்டாவது ஆளைப் பற்றி, அவன் இல்லாததையும் பொல்லாததையும் சொல்லச் சொல்ல எரிச்சலடைந்தாள். எந்தளவுக்கு இரண்டாம் ஆளின் மீது அவன் குரோதம் கொண்டிருக்கிறான் என்று அறிந்த போது, இவளை அறியாமலே அனுதாபம் மலர்ந்தது, அனுதாபம், ஆழமான காதலாகவும் மாறியது. காதல் கணை இதயத்தில் தைத்த நேரத்திலிருந்து— எப்படியாவது இரண்டாம் ஆளின் நெஞ்சில் இடம் பெற வேண்டும் என்று துடிக்கலானாள்.

உலகமே அழிந்து உயிர் தப்பியது மூன்றே மூன்று பேர். அந்த மூன்று பேருடைய இருதயங்களும் மூன்று கோணத்தில் வேலை செய்யலாயின. பிரச்னைகள் முளைத்தன. பேதங்கள் உருவாயின.

இரண்டாவது ஆளிடம். தான் அழைத்தால் மறுக்கும் பெண், வலிய வலியப் போய் பேசுவதைக் காணக்காண

அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. பற்களாலேயே அவனைக் கடித்துக் கொன்றுவிடலாமா என்று நினைத்தான். ''அவனிடம் போகாதே!'' என்று தடுத்தான். தடை போடப்போட அவள் வேகமாக நெருங்கலானாள்.

ஆனால், இரண்டாவது ஆளோ, அவள் காதலைப் பற்றிக் கவலைப்படவில்லை. முதல் ஆளும், அவளும் எப்படியோ போகட்டும் என்று இருந்தான். இப்படி அவன் அலட்சியம் காட்டக் காட்ட அவளுடைய பிரேமை அதிகமாயிற்று. எந்தப் பொருள்' எட்டியிருக்கிறதோ அதைப் பறிக்கத்தானே மனித மனம் தாவும்? அவள் ஓட ஓட முதல் ஆள் எரிமலையானான். இதை இரண்டாம் ஆள் உணர்ந்தான். தன்னிடம் நெருங்கிடும் தையல் மீது அவனுக்கும் காதல் மலரலாயிற்று. இருந்தாலும் அக்காதலை, முதல் ஆளுக்காக தியாகம் செய்யத் தயாரானான். தியாக குணத்தைக் கண்ட அந்த அழகியின் காதல், இன்னும் பன்மடங்காயிற்று. அதே சமயத்தில் சுயநலத்தையே பெரிதாகக் கருதும் முதல் ஆள்மீது ஆத்திரம் அதிகமாயிற்று. எப்படியாவது இரண்டாவது ஆளை அணைத்து மகிழ்வது—அதன் மூலம் முதல் ஆளைக் கொல்லாமல் கொல்வது—என்று முடிவெடுத்தாள்.

பெண்கள் முடிவெடுப்பது கடினம். எடுத்துவிட்டால் கேட்கவா வேண்டும்?

சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம், முதல் ஆளின் உள்ளத்தை ஊசி கொண்டு குத்துவதையே லட்சியமாகக் கொண்டாள். அவன் தடுத்தால், தள்ளினாள். இழுத்தால் –வெறுத்தாள். இதயம் பதிந்தவனிடம் ஓடினாள், ஆடினாள். இருவரும் இரகசிய இடம் தேடினர். இன்பம் பெறலாயினர்.

முதல் ஆளால் தாங்கமுடியவில்லை. இரண்டாவது வந்தவனைப் பரம எதிரியாக நினைக்க ஆரம்பித்தான். அவனை ஒழித்துக் கட்டினாலொழிய, தனக்கு அவள் கிடைக்கமாட்டாள் என்றெண்ணினான். உலகமே ஒழிந்து மூன்று பேர்தானே மிஞ்சினோம், அவனுக்காக உலகம் முழுவதையும்கூட கொடுக்க இருந்தோமே, தனக்குத் துணையாக இருப்பான் என்று குதூகலித்தோமே, அவன்மீதா ஆத்திரம் கொள்வது என்று நினைக்கவில்லை. அவன் ஒழிந்தால் போதும், தானும் அவளும் மட்டும் இருந்தால் போதும் என்றெண்ணினான்.

இந்த எண்ணம் அவனை வெறியனாக்கியது. தந்திரமாக இரண்டாவது ஆளை அழைத்துப்போய் ஒரு மலையுச்சியிலிருந்து தள்ளிக் கொன்றான்.

மகிழ்ச்சியான இச்சேதியைச் சொன்னால், தன்னை விட்டால் வேறு வழியில்லையென்பதால் தன்னை அணைத்து மகிழ்வாள் என்று எண்ணி இருமாந்திருந்தான்.

பொங்கல் பரிசு

நாட்டிற்கு வந்தது தைப் பொங்கல்-அதை
நலமோடு கொண்டாட எங்கள்
வீட்டிற்குப் பொருள் வாங்கவேண்டி நான்
வெளிச்சென்றேன் தெருவாயில் தாண்டி.

கொத்துமஞ்சள் செங்கரும்பு வாங்கி-அதன்
கூடவொரு மண்பானை தாங்கி
வைத்தஅடி பெயர்க்கின்ற வேளை-அங்கு
வாய்பூத்து நகைத்தான் அக் காளை.

நீர்முகக்கக் குளத்திற்குச் சென்றேன்-"அன்பே
நில்" என்றான். நானங்கு நின்றேன்
"பார் கண்ணே! நம் திருநாள் இன்றே என்றன்
பார்வைக்கு நீ விருந்தே" என்றான்.

வீட்டோரச் சோலையின் ஓர் ஓரம்-நான்
விளையாடித் திரும்புமிருள் நேரம்
கூட்டோடே எனையணைத்து நின்று-பின்
கொடுத்திட்டான் ஒரு முத்தம் நன்று.

வாங்கியதைத் திரும்பவும் நான் கொடுத்தேன்-
மீண்டும்
வாங்கியவன் மறுபடியும் அடுத்தான்;
தாங்கியவன் மெய்யுணர்வால் சிரித்தான்-
"பொங்கல்
தரும் பரிசில்" என்றுமுல்லை விரித்தேன்.

- முத்தன் -

இந்தச் சேதியையும் அவ்விடம் வந்து சொன்னான். கனலானாள், அவள்! கர்ச்சித்தாள்! காதலன் எங்கே விழுந்தானோ, அந்த இடம் நோக்கி ஓடினாள். ஓவென்று அலறினாள். தானும் குதித்து மாண்டாள்!

தனியாக நின்ற முதலாமவன், உலகத்தைப் பார்த்தான். எங்கும் ஒரேசூன்யமாயிருந்தது. அவன் செத்தால் அழுவாருமில்லை. பரந்தஉலகு அவனுக்கு மட்டும் உரிமையாயிருந்தது. கேள்வி கேட்பாரற்று உண்ணலாம், உருளலாம். ஆனால், ஒரு வாய் மொழி பேச, துணை? தன்னைப்பற்றி எண்ணினான். தன் மனதில் எழுந்த பொறாமைத் தீயால் மீண்டும் உயிர் பெற இருந்த உலகத்தையே ஒழித்தோமே என்று வருந்தினான். என்றாவது ஒரு நாள் தான் இறந்தால், அதோடு மனித ஜாதியே அற்றுப் போய்விடுமே என்று துக்கித்தான்.

இரண்டு பேரை அனுசரித்துப் போக முடியாததால், இந்த உலகத்தின் அழிவுக்கே ரஷியா அமெரிக்காவைவிடத் தானே பெருங் காரணமாக விளங்குவதை உணர்ந்தான்.

"ஆசை -- அதை அடக்க முடியாத நிலை-பொறாமை —கிடைக்காததை பலத்தால் பெற்று விடலாம் என்கிற சபலம் — கெடுமதி — விட்டுக் கொடுத்துப் போகாத தன்மை—

இதனால், உருவாக யிருந்த உலகை அழிந்து விட்டேனே அய்யோ!" என்று அலறிக் கொண்டு, அவனும் மலையிலிருந்து உருண்டான். இரண்டு பெரும் அரசாங்கங்களால்அழிந்தமனிதசாதியை மீட்கும் வழியிருந்தும் சுயநலக்காரனால், உலகம் மீளுகின்ற ஒரு வழியையும் இழந்தது.


இந்தோ சீன
பாய்!
பாய்!

"என்னைச் சுமந்தவள்—நான்பிறந்ததும், தான்பட்ட வேதனையை மறந்து தாமரை முகம் காட்டியவள் — நான் சிரித்தால் சிரித்து- அழுதால் அழுது எனக்கு அமுதூட்டிய பெருமாட்டி-என் தாய்—என் தெய்வம்— என்றைக்காவது ஒருநாள் என்னைவிட்டுப் பிரிந்துவிட்டால்!......

அம்மவோ! அதை நினைக்கவே என் நெஞ்சுக்குத் தெம்பில்லை. இந்தத் தள்ளாத வயதிலும் எவ்வளவு சுறுசுறுப்பு! எத்தனை குடும்பக் கவலை! ஒருக்கணம் அந்த எலும்புக் கால்களுக்குத் தான் ஓய்வு இருக்காதா? கொல்லைப்புறம் — கூடம் — அடுக்களை — தெருவாயில் — மாடிப்படி—இப்படி எங்காவது ஒருஇடத்தில் கீழேகிடக்கும் துரும்பையாவது எடுத்து வெளியே போட்டுத் தூய்மைப்படுத்தும் பணியில் துருதுருவென்று இருக்க எப்படித்தான் முடிகிறதோ!

உழைத்து உழைத்து ஓடாகத் தேய்ந்துவிட்ட அந்தத் திருவுருவம் ஒரு நாள் நீங்காத் துயில் கொள்ள நேரிடுமே; அந்த வேதனையை எவ்வாறு

தாங்கிக் கொள்ளப் போகிறேனே; தெரியவில்லையே! எலும்பும் தோலுமாக ஒரு கிழம் கிடப்பது வீடு முழுதும் விளக்கேற்றி வைத்ததுபோல ஒளிமயமாய் திகழும். குஞ்சு குளுவான்கள் நிறைந்த குடும்பத்தையே தாங்கிக் கொண்டிருக்கும் தூண் அந்தப் படுகிழம் தான்! அந்தப் பழுப்பு

இலையின் நிழலிலே நாங்கள் காணும் குளிர்ச்சியை இழந்துவிடுவதற்கு எப்படித்தான் மனம் வரும்!''

இத்தகைய நினைவால் தாழ்வாரத்தில் உலவிக்கொண்டிருந்தேன். தாயின் அன்புக் கரத்தின் தழுவல் இல்லாத பாலைவனம் போன்ற ஒரு வறண்ட எதிர்காலத்தைக் கற்பனை செய்து களைத்துப் போய் மெலிந்த பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தது என் நெஞ்சம். தாயில்லாத வீடு—தாய் அளிக்காத உணவு—தாயின் அன்புமொழி கேட்டு இன்பம் பெறமுடியாத செவிகள்—தாயின் அருள் முகம் காண இயலாத விழிகள்—தாயில்லாத நான்—இவைகள் எல்லாம் எனக்கு வருங் காலத்தில், புயல்—பூகம்பம்—சூறாவளி எனத்தக்க பெரும் சுழற்சிக் கொந்தளிப்புகள் அல்லவா?

தாயின்மீதுள்ள பாசம் மட்டும் மனிதனை ஏன் இவ்விதம் ஆட்டிப்படைக்கிறது? வாட்டிவதைக்கிறது? தாய் என்ற சொல்லுக்கு இவ்வளவு மகிமை ஏன்? மதிப்பு ஏன்? உண்மையிலேயே தாய் என்றால் யார்? தாய்க்குரிய லட்சணங்கள்தான் என்ன? பெற்றுவிட்டால் அவள் தாயாகிவிடுவாளா? பிள்ளை பெற்றவர்கள் எல்லாம் தாய்கள்தானா?

இந்தக் கேள்விகளுக்கு விடைகாண வேண்டுமென்ற அவா, உள்ளத்தில் கொடி கட்டிப் பறந்தது.

அப்போது என் தாயார் மெல்லமெல்ல என் பக்கம் வந்து நின்று, என் முகத்தை அன்பு கசிய உற்றுப்பார்த்து ''ஏம்பா! ஒரு மாதிரியிருக்கிறாய்?'' என்று ஆவலைக் கொட்டினார்கள்.

''ஒன்றுமில்லையம்மா! உட்காருங்கள்!'' என்றேன். என்னை உட்காரவைத்தவாறு அவர்களும் உட்கார்ந்தார்கள்.

''அம்மா! ஒரு சந்தேகம்—நீங்கள் விளக்கவேண்டும்'' என்றேன்.

''என்னடா கண்ணு; ஓயாமல் படிக்கிறாய்—ஊருக்கெல்லாம் பேசுகிறாய்—என்னிடத்தில் வந்து சந்தேகம் கேட்கிறாய்?'' என்று அம்மா கொஞ்சினார்கள்.

''ஓயாமல் படிக்கிறவன்—ஒப்பற்ற மேதை—உலகு புகழ் நிபுணன்—என்றெல்லாம் உயரத்தில் நிற்கிறவனுக்குக்கூட சில சமயங்களில் தாயின் அருமை தெரிவதில்லையே; அந்த அடிப்படையில் எழுந்ததுதான் இந்தச் சந்தேகம்''

''ம்! மேலே சொல்லு!'' என்றார்கள் தாயார்.

''தாய்மை என்றால் என்ன? தாய் என்றால் யார்? பெற்றவள் தாயா? பேணி வளர்த்தவள் தாயா? இதற்கு எனக்கு விளக்கம் வேண்டும்!''

தாயின் கண்களில் புது ஒளி தோன்றியது. அமைதியாகப்பதில் சொன்னார்கள்:

''நடந்த கதையொன்றைச் சொல்கிறேன் கேள்! கதையைக் கேட்டால் உன் சந்தேகம் நீங்கும். விளக்கம் கிடைக்கும்!'' என்றவாறு கதை சொல்லத் தொடங்கினார்கள். தாயார் கூறிய கதை இதுதான்:—

* * *

''அண்ணா! எனக்கு இப்போது திருமணமே வேண்டாம். தயவு செய்து என்னைத் தொந்திரவு செய்யாதீர்கள் விட்டுவிடுங்கள்''

''தம்பி! திருமணம் என்ன தீக்குண்டமா? ஏன் இப்படி நடுங்குகிறாய்? இதோ நானும் உன் அண்ணியும் மகிழ்ச்சியோடு வாழ்க்கை நடத்தவில்லையா?''

''திருமணமே கூடாது என்று கூறவில்லை, அண்ணா! இப்போது தேவையில்லை என்கிறேன். என்னதான் வசதிகள் இருந்தாலும் மாதம் நூறு ரூபாய் சம்பாதிக்கிறேன் என்ற கௌரவம் இல்லாவிட்டால் எனக்குயார் அண்ணா திருப்தியோடு பெண் கொடுப்பார்கள்?''

''பணக்காரவீட்டுப் பெண்—படித்த பெண் வேண்டாமே! உன் அண்ணி சொல்வதுபோல டெய்லர் ஏகாம்பரத்து மகள் மரகதத்தைக் கட்டிவிட்டால் என்ன?''

''நல்ல வேடிக்கை! சந்திரன் தம்பி சேகருக்குப் பெரிய இடங்களில் பெண் கிடைக்கவில்லை. காரணம், மாப்பிள்ளை வேலையெதுவும் பார்க்கவில்லையென்று பணக்கார வீடுகளில் மறுத்துவிட்டார்களாம்-என்று ஊரெல்லாம் பேசுவார்கள். வேண்டாம் அண்ணா! அப்பா வைத்து விட்டுப்போன சொத்திலே வாழ்க்கை நடத்தாமல் உன்னைப்போல மாதம் நானும் நாலு காசு சம்பாதிக்கிறேன். அதற்குப் பிறகு பெரிய வீட்டுப் பெண்ணே எனக்குக் கிடைக்கும்!''

''மரகதம், தங்கமான பெண். அவளைத்தான் உனக்குக் கட்டவேண்டுமென்று உன் அண்ணி துடியாய்த் துடிக்கிறாள். அண்ணியின் மனம் கோண நீ நடக்கமாட்டாய் என்று நம்பியிருக்கிறாள். பிறகு உன் இஷ்டம்!''

''அண்ணீ! என்மீது உனக்கு வருத்தமா? நான் சொல்வது உனக்குப் புரியவில்லையா, அண்ணீ?''

''சௌந்தரீ! சேகரிடம் நீயே பேசு! என் உயிரை வாங்காதீர்கள், நீங்களே ஒரு முடிவு செய்யுங்கள். நான் வருகிறேன்!''

''சேகர்! பார்த்தாயா; உன் அண்ணா வருத்தத்தோடு போவதை! எங்கள் மனம் குளிர நீ திருமணம் செய்து கொண்டால் என்ன குடி முழுகிவிடும் தம்பி?''

''அண்ணீ! போயும் போயும் டெய்லர் ஏகாம்பரத்தின் பெண்ணையா? பரம

ஏழை அவன்! அந்த ஐகர் காலத்துத் தையல் மிஷின் தான் அவனுக்குச்சொத்து!''

''ஆனல்—தையல் மிகவும் அழகப்பா!''

''அந்தத் தையலை நீதான் புகழவேண்டும். சட்டை தைக்கக் கொடுத்தால், பையை முதுகில் வைப்பான்; கையைக் கழுத்தில் வைப்பான்!''

''நான் சொல்வது அவன் தையலையல்ல தம்பி! அவன் பெற்ற தையல் இருக்கிருளே மரகதம்—அவளைச் சொல்கிறேன். அவள்கூட எவ்வளவு அழகாகச் சோளி ரவிக்கையெல்லாம் தைக்கிருள் தெரியுமா? இப்போது எனக்கு வேண்டியதையெல்லாம் அவள்தான் தைத்துத் தருகிருள். தம்பி! மரகதம் ரொம்ப நல்ல பெண். உன்னைக் கல்யாணம் செய்துகொள்ள அவளுக்குக்கொள்ளை ஆசை. உன் பேச்சை எடுத்தாலே நாணிக்கோணி புன்னகை புரிவாள். அடேடே, உனக்குக்கூட வெட்கம் வந்துவிட்டதே! சரி...சரி...உனக்கும் ஆசை இருக்கு அண்ணனிடம் சொல்லக் கூச்சப்பட்டுக்கொண்டு இத்தனை நாளும் மறுத்திருக்கிருய். தம்பீ! சேகர்! சொல்லு! திருமண ஏற்பாட்டையெல்லாம் கவனிக்கும்படி உன் அண்ணனிடம் சொல்லிவிடட்டுமா?''

''சரியண்ணி! எல்லாம் உங்கள் இஷ்டம்!''

* * *

டெய்லர் ஏகாம்பரத்தின் பெண்ணுக்கு அதிர்ஷ்டம் அடித்தது என்று உற்ருர் உறவினர் பேசிக்கொண்டார்கள். யார் கட்டப்போகிருர்கள் இந்த ஏழை வீட்டு எழிலரசியை என்று வாய்ப்புக் கிட்டாதவர்கள் எல்லாம் வாய் பிளந்து கிடந்தார்கள். இப்போது அவர்கள் வாய் மூடிற்று.

சேகரும் மரகதமும் வாழ்க்கைச் சகடத்தைச் சேர்ந்து உருட்டத் தலைப்பட்டார்கள். மரகதத்தின் அன்பும் பண்பும் குடும்பப் பொறுப்பை உணர்ந்து அவள் நடந்து கொண்ட தன்மையும் சேகரின் மனதில் இன்பத்தைப் பொழிந்த வண்ணமிருந்தன. மரகதம் வீட்டுக்கு வந்த பிறகுதான் அதுவரையில் வீட்டில், குடும்பத்தில் ஏதோ ஒரு பெரிய குறை இருந்தது அவனுக்குப் புரியத் தொடங்கியது. அண்ணனும் அண்ணியும் மனநிறைவோடுதான் வாழ்ந்து வருகிருர்கள் என்று அவன் எண்ணியிருந்தான். மரகதம் வந்த பிறகுதான் குடும்ப வாழ்க்கை எப்படியிருக்க வேண்டுமென்ற இலக்கணத்தை அவன் அறிந்து கொண்டான். தன்னுடைய வாழ்க்கைக்கும் அண்ணனுடைய வாழ்க்கைக்கும் இருக்கிற பெருத்த வேறுபாட்டை அவனுல் உணர முடிந்தது. அதற்காக அவன் அண்ணன் மீது ஆழ்ந்த அனுதாபங் கொண்டான்.

வேலைகளை முடித்துக் கொண்டு வீடு திரும்புகிற சந்திரன் களைத்துப்போய் சாப்பாட்டு மேசையருகே உட்காருவான். ''எனக்கு ஒரே அலுப்பாயிருக்கிறது! மரகதம்! சாப்பாட்டைக்

படை வரிசைபோல் பனை வரிசை!

(புகைப்படம் : அமிர்தம்)

கொஞ்சம் எடுத்து வைத்து விட்டுப் போ! அவர் போட்டுக் கொள்வார்!'' என்று சௌந்தரி கூறுவாள்.

அதைக் கேட்டுச் சந்திரன், எந்த முகமாற்றமும் அடைவதில்லை. மரகதம், சந்திரனுக்கு நேராக அதிகமாகப் போகமாட்டாள். சாப்பாட்டை எடுத்துப் போய் மேசையில் வைத்துவிட்டு வந்து விடுவாள். சந்திரன், தானே பரிமாறிக் கொண்டு, பசியாறுவான்.

மரகதம் வந்தபிறகு, வீட்டு வேலைக்காரிக்கும் — சமையற்காரிக்கும் சம்பளம் கணக்கு தீர்க்கப்பட்டு அவர்கள் அனுப்பப்பட்டார்கள். எல்லா வேலைகளுமே மரகதத்தின் தலையில் விழுந்தது. சௌந்தரியின் நோக்கம், மரகதத்திற்குத் தெளிவாகப் புரிந்து விட்டது. தன்னை, சேகருக்குத் திருமணம்செய்துவைக்க சௌந்தரி தலைகீழ் நின்றதற்குக் காரணமே, வீட்டுக்கு ஒரு நல்ல வேலைக்காரியும் சமையற்காரியும் சம்பளமில்லாமல் கிடைப்பாள் என்பதற்காகத்தான் என்பதை மரகதம் உணர்ந்து கொண்டாள். அந்த மன உளைச்சலை அவள் தன் கணவனிடம் வெளியிடவில்லை. குடும்பத்தில் தன்னால் குமுறல் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக அவள் கொதிப்பை அடக்கிக்கொண்டு கூனிக் கிடந்தாள். சௌந்தரியோ அந்த வீட்டு மகாராணிபோல ஆர்ப்பாட்டங்கள் நடத்திவந்தாள். மரகதம் படும் கஷ்டங்களைக் கண்ட சந்திரன், சௌந்தரியிடம் ஒரு நாள் மனம் விட்டுப் பேசிவிட்டான்.

''என்ன இருந்தாலும் அவளும் இந்த வீட்டு மருமகள் தானே! அவளை இப்படிக் கஷ்டப் படுத்தலாமா?'' என்று சௌந்தரியிடம் மெதுவாகக் கேட்டான், அடக்க உணர்ச்சியுடன்!

''எனக்கு வேலை செய்வதற்காகத்தான் ஒரு ஏழை வீட்டுப் பெண்ணை உங்கள் தம்பிக்குக் கட்டிவைக்க நான் முயற்சி செய்தேன். இல்லாவிட்டால். எனக்கிருக்கிற உடம்புக்கு இந்த வீட்டில் வேலை செய்தால் சீக்கிரம் சாக வேண்டியதுதான்!''— என்று கண்ணீர் வடித்தாள் சௌந்தரி.



''அழாதே! கர்ப்ப ஸ்திரீ இப்படிக் கண் கலங்கக் கூடாது! மரகதமும் கர்ப்பமாயிருக்கிறாளே, அளவுக்கு மீறி ஓய்வின்றி வேலைகளைச் செய்து கஷ்டப்படுவாளே யென்றுதான் சொன்னேன்.''

''அய்யோ பாவம்! தம்பி மனைவிமீது எவ்வளவு அக்கறை! அந்த அக்கறையில் பாதி என்னிடம் காட்டக் கூடாதா?''

—என்று முகத்தை நீட்டிக் கொண்டு சௌந்தரி எழுந்து போய் படுக்கையில் படுத்துக் கொண்டாள்.

பிறகு சந்திரன் சமாதானப் படலத்தை ஆரம்பிக்க முதலில் சரணாகதிப் படலத்தில் வீழ்ந்தான்.

* * *

மரகதமும், சௌந்தரியும் ஒருவார இடைவெளியில் அழகான பெண் குழந்தைகளுக்குத் தாய்களாயினர். தான் பெற்ற செல்வத்தின் அருகே படுத்திருந்த சௌந்தரியின் கண்கள் எதிரில் உள்ள சுவற்றில் மாட்டப்பட்டிருந்த அவளது திருமணப் படத்தின்மீது பாய்ந்தன. பாய்ந்த கண்கள் அந்தப் படத்தின்மீதே நிலைத்து நின்றுவிட்டன. சந்திரனுக்கு அருகே கட்டுக் குலையாமல் கனிமரமென நிற்கும் தன் அழகைக் கண்டு சௌந்தரி பெருமை கொண்டாள், பொன்னால் செய்தசிலைபோல் நிற்கின்ற தோற்றமும்—எடுப்பான உடற்கட்டும்—எழில் சிந்தும் முகமும்—அவளுக்கு திடீரென ஏதோ ஒரு பீதியை ஏற்படுத்திவிட்டன என்பது அவள் முகத்தில் பளிச்சிட்ட விகாரத்திலிருந்து தெரிந்தது. உள்ளத்தில் புயல் ஆரம்பமாகிவிட்டது.

'சௌந்தரி ஒரு குழந்தைக்குத் தாயாகிவிட்டாள். வயிற்றுக்குள்ளேயிருந்து அந்தக் குழந்தை அளித்த வேதனையால் ஏற்கனவே உடல் இளைத்துப் போய்விட்டது. இனி இந்தக் குழந்தை, பால் என்ற பெயரால் அவள் ரத்தத்தையெல்லாம் வேறு உறிஞ்சி, அவளது உடற்கட்டையும் குலைத்துவிடும்.''

இப்படி ஒரு அச்சம் ஊட்டும் அவலக் குரல் ஓநாயின் தொனியை வெல்லும் விதத்தில் அவள் நெஞ்சத்தின் ஒரு மூலையில் எழுந்து ரத்த அணுக்களில் எல்லாம் எதிரொலித்து அவளை நடுக்கம் கொள்ளச் செய்தது.

எழுந்து நின்று நிலைக் கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டாள். அறையில் மாட்டப்பட்டிருந்தஹாலிவுட் சினிமா நடிகைகளின் அரை ஆடைப் படங்களை, வைத்த கண் வாங்காமல் பார்த்தாள். முழங்கால் அளவுத் தண்ணீரில் நின்று கொண்டு முரளீதரனிடம் தாங்கள் இழந்த ஆடைகளைத் திரும்பக் கேட்கும் கோபிகளின் படங்களைப் பொறுமையுடன்நோக்கினாள் மீண்டும் கண்ணாடியைப் பார்த்துக் கொண்டாள். ''குழந்தைக்கு பால்கொடுக்க ஆரம்பித்தால் எழிற்கட்டுக் குலைந்துவிடும் — இளமை அழிந்துவிடும்!'' என்று அவள் நெஞ்சம் மீண்டும் புலம்பி விம்மியழுதது.

விழிகள் வேறு திசையில் திரும்பின. ஜன்னல் கம்பிகளின் இடைவெளியில் நுழைந்த பார்வை தூரத்தில் மாட்டுத்தொழுவத்தில்தாய்ப் பசுவிடம் பால் குடிக்கும் கன்றின் மீது விழுந்தது. கன்றின் முதுகில் தாய்ப்பசு, தனது நாக்கினால் நக்கிக் கொண்டிருக்கிற காட்சியையும் அவள் கண்கள் கண்டன; தோட்டத்

துச் சுவரின்பக்கம் 'கிரீச்' என்ற ஒரு ஒலி! அங்கே பார்த்தாள். குரங்கு, தன் குட்டியைத் தூக்கொண்டு மதில் மேலிருந்து மரத்திற்குத்தாவியது. கூடத்து மூலையில் "உச் உச்!" என்ற சப்தம் கேட்டது. பார்த்தாள். அவர்கள் வீட்டு நாய், தன்னுடைய ஐந்து குட்டிகளிடமும் தன் பால் சுரப்புப் பையை ஒப்படைத்துவிட்டு அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தது. மேலே "மியா மியாவ்" என்று ஒலி காதைப் பிளந்தது. பார்த்தாள். குட்டிகள் புடைசூழ வீட்டுப் பூனை பரண்மீது தன் படுக்கையை அமைத்துக் கொண்டு தன் குழந்தைகளின் சங்கீதத்தில் மெய் மறந்து கிடந்தது. அந்தப் பூனை அந்த வீட்டுக்கு வந்து இப்போது மூன்றாவது தடவையாக அரை டசன் குட்டிகளைப் போட்டுப் பால் கொடுக்கும் வேலையைக் கவனித்து வருகிறது என்பதும் அவளுக்குத் தெரியும்.

போர்க்களத்துக் கூச்சலில் எங்கேயோ ஒரு வீணையின் நரம்பு லேசாக அதிர்ந்த ஒலி கேட்பதுபோல அவளது இருதயத்துப் பேய்க் கூச்சலினிடையே ஒரு மெல்லிய குரல் அதிர்ந்தது!

"நாயும் பூனையும் மாடும் குரங்கும்கூட தங்கள் குழந்தைகளுக்குப் பால் கொடுக்கின்றனவே — அவைகளுக்குள்ள தாய்மை உணர்ச்சிகூட உனக்குக் கிடையாதா?"

அந்த ஈன சுரத்தை உடனே அடக்கிவிட்டு வெறிச் சத்தம் காதைச் செவிடுபடுத்தும் வகையில் முழங்கியது.

"நாயும் பூனையும் மாடும் குரங்கும் தன் பிள்ளைகளுக்குப் பால் கொடுக்கின்றன. ஆனால் அவைகளின் அழகு குலைவதைப் பற்றியோ— இளமை குன்றுவதைப் பற்றியோ அவைகளுக்குக் கவலை கிடையாதே! அவைகள் கடற்கரையில் போய் நாலு பேரோடு உலவப்போகின்றனவா? சினிமாவுக்கு நாள் தவறாமல் செல்லவேண்டியவைகளா? நண்பர்களுடன் 'பிக்னிக்' போகவேண்டிய சங்கடந்தான் அவைகளுக்கு உண்டா? எடுப்பும் சிறப்பும் பொருந்த அஜந்தா ஓவியங்களைப் போலவும், மாமல்லபுரத்துச் சிற்பங்களைப் போலவும் ஆடையை நெகிழ விட்டுக் கொண்டு வாலிபப் பருவத்தின் வனப்பையெல்லாம் வாரியிறைத்த வண்ணம் விருந்துகளில் கேளிக்கைகளில் வந்து அமரும் பெரிய மனிதர் வீட்டுப் பெண்களுக்கு நடுவே எள் முனையளவுஇளமையையும் இழந்து விடாமல் காட்சியளிப்பதுதான் இந்தக் காலத்துப்பெண்களுக்குக் கௌரவம். அதை விட்டு, 'தாய்மை' என்ற ஓர் அர்த்தமற்ற வார்த்தையைக் காப்பாற்றுவதற்காக நாலு பேர் மத்தியில் தலை குனிந்து உட்கார்ந்திருக்க வேண்டுமோ? உன் எழிலைப் பார்! இளமையைக் காப்பாற்று! மாம்பழ மேனிபடைத்தவளே! மண்ணாக்கிவிடாதே பருவத்தின் பூரிப்பை!"

இறுதியில் இளமைக்கு வக்கீல் வேலை பார்த்த பேய்க் குரல்தான் வெற்றி பெற்றது. தாய்க்குரல் தந்தியறுந்த யாழ் போல் ஆயிற்று.

அதன் விளைவு, மரகதம் — தன் மகளுக்கு மட்டுமல்லாமல் சௌந்தரியின் செல்விக்கும் பால் கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டாள். இரண்டு குழந்தைகளுக்கும் அவளே தாயாக விளங்கினாள்!

"ஏழைப் பெண் மரகதத்தை சேகருக்கு மனைவியாக்கியது எவ்வளவு நல்லதாயிற்று பார்த்தீர்களா?" - என்று பரவசத்துடன் சந்திரனைத் தழுவினாள் சௌந்தரி.

அந்த அணைப்பில் அவன் கண்ட சுகத்தில் "நீ புத்திசாலியடி என் தங்கமே!" என்று உளறினான் சந்திரன்.

மழலை பருகிட வேண்டிய தாய்ப்பாலை,மருந்து பருகியது. பருவத்தின் பொலிவு குலையாத சௌந்தரி, தன்னைக் கண்ணாடியில் ஏற இறங்கப் பார்த்துக் கொண்டு பெருமிதத்துடன் நாலு பேர் மத்தியில் நடந்தாள். கணவனுடன் கடற்கரைக்குச் சென்றாள்.

மரகதம் படும் கஷ்டத்தை இனியும் சகித்துக் கொள்ளச் சேகரன் தயாராக இல்லை. மரகதத்தைத் திருமணம் செய்து கொள்ள அவன் முதலில் விரும்பவில்லை என்பது உண்மைதான். அவள் அழகில்லாதவள் அல்ல. குடும்பத்திற்குத்தகுதியற்ற பெண்ணல்ல. ஆனால்ஏழை அதனால் அவன் தயங்கினான். ஏழைப்பெண்ணைக் கலியாணம் செய்து கொள்வது கூடாது என்ற கொள்கை உடையவனல்ல அவன்.. தன்னுடைய வீட்டுச் சூழ்நிலைக்கு ஒரு பெரிய வீட்டுப் பெண் வந்தால்தான் அவள் மற்றவர்களுக்குச் சமமாக வாழ முடியும், ஏழையாயிருந்தால் அடிமையாக வேண்டியதுதான் என்ற காரணத்தினாலேதான் மரகதம் தன்னை விரும்புகிறாள் என்று சௌந்தரி கூறிய பிறகு அவனையறியாமல் அவள்மீது ஒரு பிரியம் ஏற்பட்டு விட்டது. அது கலியாணத்தில் வந்து முடிந்து இருவரும் ஒரு குழந்தைக்குப் பெற்றோராகவும் ஆகிவிட்டனர்.

அவன் எதிர்பார்த்தபடி மரக

தம் அந்த வீட்டில் சர்வ சாதாரணமாக நடத்தப்பட்டாள். அண்ணனிடத்தில் வைத்திருக்கிற அன்புக்கும் மதிப்புக்கும் ஊறு தேடக் கூடாதே என்பதற்காகப் பல்லைக் கடித்துக் கொண்டு பொறுமையைக் கடைப்பிடித்து வந்தான். அந்தப் பொறுமை அணையையும் உடைத்துக்கொண்டு ஒரு நாள் குமுறி யெழுந்து விட்டான்.

முதல் நாள் இரவு சந்திரனின் குழந்தைக்கு லேசாகக் காய்ச்சல்; சேகர்குழந்தைக்குவயிற்று நோய்.

இரண்டும் மாறி மாறி இரவெல்லாம் அழுது தொல்லை கொடுத்துக் கொண்டேயிருந்தன. மரகதம் கண்ணை மூட வில்லை. இரண்டு தொட்டில்களையும் ஆட்டுவதும் 'ஆராரோ' பாடுவதும் — பிணிக்கு மருந்து தருவதும் — தூக்கி வைத்துக் கொண்டு உலாவுவதும்தான் அவளுக்கு இரவு முழுதும் வேலை.

குழந்தைகள் போட்ட கூச்சலைக் காதிலே வாங்கிக்கொள்ளாமல் சந்திரனும், சௌந்தரியும் தங்கள் படுக்கையறையிலேயே வெகு நேரம் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தனர்.

அந்தக் கொடுமையைச் சேகரால் சகிக்க முடியவில்லை. தன் மனைவி கஷ்டப்படுவதை நினைத்து அழுவதா? அல்லது பெற்ற குழந்தையைப் பற்றிக் கவலைப் படாமல் வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருக்கிற வன்னெஞ்சர்களை நினைத்து அழுவதா?

* * *

பொழுது விடிந்தது. குழந்தைகளோடு கஷ்டப்பட்ட மரகதம், விடிந்த பிறகு சற்று அயர்ந்து தூங்கிவிட்டாள். அதனால் சௌந்தரிக்கு 'பெட்காபி' கிடைக்கவில்லை. ஆத்திரங்கொண்ட சௌந்தரி, மரகதத்தை மிகச் சூடான வார்த்தைகளில் போட்டு வறுத்து எடுத்தாள்.

மரகதம் எதுவும் பதில் பேசாமல் வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தாள். அவளுடைய கவலையெல்லாம் அந்தக் குடும்பத்தில் தன்னால் எந்தக் கலகமும் வந்துவிடக் கூடாது என்பதுதான்! சௌந்தரியின் ஏசற்கணைகளுக்கு எதிர் நிற்க முடியாமல் திக்குத் தெரியாமல் திண்டாடும் மான்போல் மிரள மிரள விழிக்கும் மரகதத்தைக் கண்டு துடித்துவிட்ட சேகரன் அண்ணியின்மீது எரிதழலென வார்த்தைகளை அள்ளி வீசினான்.

''மரகதம், எனக்கு மனைவி. உங்களுக்கு வேலைக்காரி அல்ல. உங்கள் குழந்தையை வளர்க்கும் பால்காரி அல்ல!'' என்று உறுமினான்.

''சரிதான் நிறுத்து! பெரிய ராஜகுமாரியைப் போய் கலியாணம் செய்து விட்டாயாக்கும்!'' என்று சௌந்தரி செய்த கிண்டலுக்குச் சபாஷ் கூறி சந்திரன் அங்கே வந்து விட்டான். சௌந்தரியின், சேதமடையாமல் கட்டிக் காக்கப்படும் யௌவனத்தின் நீங்காத அடிமையல்லவோ அவன்! ஆகவே அவள் பக்கம் நின்று தான் நியாயம் பேசினான்.

அண்ணன் தம்பிகளுக்கிடையே வார்த்தைகள் முற்றிப் போய், கை கலப்புவரையில் சென்று, இருவரும் துப்பாக்கிகளைத் தூக்கிக்கொண்டு மரண முகப்புவரையில் நடப்பதற்குத் துவங்கிவிட்டனர். யார் வெடிக்கிற தோட்டா, முதலில் யார் மார்பில் பாயப் போகிறது என்ற பயங்கரமான நிலைமை உருவாகிவிட்டது.

அந்தச் சமயத்தில் குறுக்கே விழுந்து அவர்களைச்சமாதானப் படுத்த முயன்றும் தோல்வி கண்ட மரகதம், அறையில் போய் நிம்மதியாகப் படுத்துக் கொண்டிருந்த சௌந்தரியிடம் ஓடி ''எப்படியாவது இருவரையும் சமாதானப்படுத்துவோம் வா!.'' என்று அலறினாள்.

சௌந்தரி, மரகதத்தின் தலை மயிரைப் பிடித்து இழுத்து அவள் கன்னத்திலே அறைந்து ஓவென்று கத்த ஆரம்பித்தாள்.

''சின்ன புத்திக்கார நாயே! ஏழை வீட்டு எச்சில் இலையே! நாயைக் குளிப்பாட்டி நடு வீட்டில் வைத்தது என் குற்றம்!''

—இப்படிப் பட பட வென்று ஆவேசம் கொண்டு கத்திக் கொண்டிருந்த சௌந்தரி, திடீரென்று இருமத் தொடங்கினாள். இருமல் நிற்கவில்லை. இருமி முடிந்ததும் மயக்கம் வந்து விட்டது. சௌந்தரி கீழே விழுந்து விட்டாள்.

மரகதம் பயந்துபோய் ''அய்யோ! ஓடி வாருங்கள்!'' என்று கூச்சலிட்டாள். குறி பார்த்த துப்பாக்கியுடன் நின்று கொண்டிருந்த அண்ணனும் தம்பியும் பரபரப்புடன் ஓடிவந்தார்கள். சண்டையை மறந்து விட்டு சேகர், டாக்டர் வீட்டுக்குப் பறந்து சென்றான்.

டாக்டர், நீண்ட நேரம் பரிசோதித்துவிட்டு ''இது டி. பி. எலும்புருக்கி நோய்! ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள்!'' என்று மருந்து எழுதிக் கொடுத்து விட்டுப் போய்விட்டார்.

★

சௌந்தரி, விழித்துக் கொண்டுதான் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள்.

சண்டையும்.......

(புகைப்படம்: வி. நாகசுந்தரம்)

தயாராகிறது!
கலைஞர் மு.கருணாநிதியின்
சுருளிமலை
திராவிடப்பண்ணை. ★★★ திருச்சி-2

எதிரேயுள்ள நிலைக் கண்ணாடியில் ஒரு எலும்பு உருவம் நிற்பதுபோல் தெரிந்தது. அவளுடைய பருவப் பூரிப்புக்கு ஒளியூட்டிக் காட்டிய அதே நிலைக் கண்ணாடியில்தான் அவள் அந்த உருவத்தைக் கண்டாள். கைகால்கள் பிரம்புக்குச்சிகள்போல் இருந்தன. கன்னங்களில் உள்ள குழியில் இரண்டு எலுமிச்சம் பழங்களைத் தாராளமாக வைக்கலாம். கண்கள் இருந்த இடம் என்று அடையாளம் காட்ட இருபள்ளங்கள். வெளுப்பேறித் தும்பை மலர் போன்று காட்சியளிக்கும் உதடுகள். அழுகிய பழத்தைக் கம்பிலே கோர்த்து வைத்தது போலத் தலையும் கழுத்தும்! அது யாருடைய உருவம்? எங்கே இளமைப் பருவம்? சௌந்தரி, கேள்வி கேட்டு முழங்கினாள். அந்த உருவத்தின் முகம், சௌந்தரியைப் போலவே தோற்றமளித்தது.

"ஐயோ! நானேதான்! அந்த எலும்புக் கூடு நானேதான்! க்ஷயரோகம் எனக்குத் தந்த பரிசு இந்த உருவம்தான்! அய்யோ, என் அழகு எங்கே? இளமை எங்கே? கடுக் குலையாத மேனி எங்கே? எல்லாம் பாழ்தானா? பாழ்தானா?"

எனத் தலையில் அடித்துக் கொண்டு கதறி அழுதாள் சௌந்தரி. அந்த அழுகை கடைசி வரையில் நிற்கவேயில்லை.

★

அதற்குப் பிறகு மூன்றாண்டுகள் ஆகிவிட்டன. எலும்புருக்கி நோய் மருத்துவமனையில் படுக்கையோடு படுக்கையாகத் தேய்ந்த சந்தனக் கட்டைபோல் கிடக்கிறாள், சௌந்தரி!

அவள் வளர்த்த அழகை— காப்பாற்றிய இளமையைகண்களுக்குத் தெரியாத கிருமிகள் சிறுகச் சிறுக அரித்துத் தின்று கொண்டிருந்தன. அவள் கண்கள் நீரைப்பொழிந்து கொண்டிருந்தன. தான் பெற்ற குழந்தைக்குப் பால் கொடுக்க மனம் வரவில்லை அவளுக்கு! கிருமிகளுக்குத் தன் உயிரையே கொடுக்கத் தயாராகிவிட்டாள்.

இப்போது அவள் இதயத்தை அழுத்திக் கொண்டிருக்கும் ஆசையெல்லாம் தன் குழந்தையை ஒரு முறை பார்க்க வேண்டும் என்பதுதான்! குழந்தை, தன்னை "அம்மா!" என்று ஒரு முறை அழைக்கவேண்டும் என்பதுதான்.

அதோ, சந்திரன்-சேகர்—மரகதம்—குழந்தைகள் ஐவரும் வந்துவிட்டார்கள்

தன் குழந்தையை அருகே அழைக்கிறாள். அது வர மறுக்கிறது. கைகளை மெதுவாகத் தூக்கிக் குழந்தையின் தோளில் போட்டுத் தழுவ முயலுகிறாள். குழந்தை, அவள் கைகளை உதறித் தள்ளிவிட்டு "அம்மா!" என அழுதபடி மரகதத்திடம் ஓடுகிறது.

சௌந்தரியின் கண்கள் குளமாகின்றன. "என்ன, மரகதமா உனக்கு அம்மா? நான்தானே உன்னைப் பெற்றேன்!" என்று விக்கிவிக்கி அழுதாள் சௌந்தரி.

அதற்கு அந்தக் குழந்தை பதில் கூறவில்லை. அவளைக் கோபமாகப் பார்த்தது. அந்தப் பார்வைக்கான அர்த்தத்தை இதோ; என் தாயார் சொல்கிறார்கள்.

"பெற்று விடுவதால் ஒருத்தி தாயாகிவிட முடியாது! பிள்ளையை வயிற்றில் சுமந்தேன் என்பதும், பெற்றேன் என்பதும் வலியச் சென்றுசெய்யும் காரியம் அல்ல!

வயிற்றில் கரு, உருவான பிறகு பத்துமாதம் சுமந்துதான் தீர வேண்டும். சுமந்த பிறகு பெற்றுத்தான் தீர வேண்டும். சுமப்பதும் — பெறுவதுமாகிய இரண்டு வேலைகளைச் செய்துவிடுவதாலேயே தாய்க்குரிய அந்தஸ்து யாருக்கும் வந்துவிடாது. பிரியமுடன் பேணிவளர்த்து-கண் திறந்து ஆளாக்கிவிட்டு-எறும்பு கடித்தாலும் சகிக்க முடியாமல் பாசங்கொண்டு ஒட்டிவாழ்கிறாளே; பாதுகாக்கிறாளே; அவள்தான் தாய்! உண்மையான தாய்! சுமந்து பெற்றவள், தன் பிள்ளைக்காகத் தன்னைத் தியாகம் செய்தால்; அவளுக்குப் பெயர் பெற்ற தாய்! பெறாதவள் பிள்ளைபோல் வளர்த்தால் அவள் பெயர் தான்பெற்றவள், பிள்ளையைப் பேணி வளர்க்காவிடில் அவள் தாயல்ல; "சுமந்தவள்" அவ்வளவுதான்!

சமாதானமும்!
புகைப்படம்:
டி. பி. எஸ் சந்தரநாதன்

THE SCHOOL OF ENGLISH LEARNING

ஆங்கிலக் கல்வி நிலையம்

60, பிராட்வே, மண்ணடி, சென்னை-1.



சிந்தித்துப் பதில் சொல்வீர் !

அஞ்ஞானத்தின் அந்தகாரச் சுழலில் சிக்கிச் சீரழிந்த அக்கால மனிதர் கையாண்ட சிகிச்சைமுறை பிணியாளரைப் பீதி கொள்ளச் செய்தது.

விஞ்ஞானச் சுடர் ஒளியில் தெளிவு பெற்ற இக்காலச் சிகிச்சைமுறை பிணியின் பிடியைப் பக்குவமாகத் தளர்த்துகிறது.

இதுபோன்று மருத்துவத் துறையில் மட்டும் அல்ல, மற்றும் மார்க்கத் துறையிலே, சமுதாயத் துறையிலே. அரசியல் துறையிலே, ஆக ஒவ்வொரு துறையிலேயும் மனிதன் படிப்படியாக முன்னேறிக் கொண்டே வருகிறான்.

இந்த முன்னேற்றத்திற்கு ஆதாரமாக நிற்பது அவன் ஏற்படுத்திக்கொண்ட **மொழியும்**, அதனால் அவன் பெறும் **கல்வி** யறிவுமே யல்லவா ?

தமிழ் எழுதப் படிக்க தெரிந்தவர்கள்

ஒரே வருடத்தில்

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி அடிப்படையோடு இலக்கண ரீதியாக

இங்கிலீஷ் தபால் மூலம் கற்கலாம்

சேர கடைசி தேதி : 25—1—61 } **பயிற்சிகள் ஆரம்பம் :** 27—1—61

ஆங்கிலத்தில் கருத்துக்களை அமைத்துச் சொந்தமாக எழுதவும் பேசவும் கட்டுரைகள் வரையவும் கடிதப் போக்கு வரத்துச் செய்யவும் முறையாக அடிப்படையோடு கற்பிக்கப்படும். சிறந்த முறையில் இலக்கணப் பயிற்சி அளிக்கப்படும்.

முக்கிய அறிவிப்பு :— (1) சேர விருப்பமுடையவர் கல்வி நிலையத்திலிருந்து அச்சிட்ட மனுவைப் பெற்றுப் பூர்த்தி செய்து உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும். (2) 16 வயதிற்கு மேற்பட்டவர்களே சேரத் தகுதியுடையவர்கள். (3) ஆதார பூர்வமான ஒப்பற்ற இலக்கணப் பயிற்சி அளிக்கப்படுவதால், ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் சேர்ந்து திருத்தமாகக் கற்றுத் தமக்குள்ள சந்தேகங்களைப் போக்கிக் கொள்ளலாம். (4) இங்கிலீஷ் ஓரளவு தெரிந்தவர்களுக்குத் தனியாகவும், எழுத்து முதல் ஒன்றுமே தெரியாதவர்களுக்குத் தனியாகவும் பயிற்சி யளிக்கப்படும். (5) இத் தபால் முறையில் படிக்க ஆண்களும் சேரலாம், பெண்களும் சேரலாம்.

அச்சிட்ட மனுவையும் முழு விளக்கங்களையும் நயா 8 பைசா தபால் பில்லை அனுப்பிப் பெறுக.

[40-ம் பக்கத் தொடர்ச்சி]

யாகனும்னு நினேச்சாரு. அதுக்கு ஜனங்க ஆதரவு இருக்குன்னு கூப்பாடு போட்டாரு இப்ப அவரு இருக்காரா செத்தாரான்னு இந்த ஜனங்க கவலேப்பட்டாங்களா?

கக்கன்: நம்ப காமராசர் ஆட்சி கடவுள் ஆட்சிங்க! இவருக்கு ஜனங்க கோயில்கட்டிக் கும்பிடாத குறைதான்!

கு. தலேவர்: பிறகு நாடெங்கும் பயங்கரவாதிகள் சிறையடைப்பு நடத்தினர்களே; அது எப்படி?

காமராசர்: ஏதோ நாலு பொடிப் பசங்க கலாட்டா பண்ணி ஜெயிலே உடைச்சுட்டானுங்க. சாமர்த்தியத்தாலயா ஜெயிலு உடைஞ்சுது? ஏதோ அந்த ஜெயில் களோட சுவரு 'வீக்கா' இருந்தது.

கக்கன்: அப்ப அந்தப் பசங்க வச்சிருந்ததுகூட சும்மா தீபாவளித் துப்பாக்கித்தானுங்க! அவனுங்க மிரட்டுன மிரட்டல்ல நம்ப சிப்பாய்ங்க பயந்துட்டானுங்க.

கு. தலேவர்: ஓகோ, நிலைமை அப்படியா? என் மிலிட்டரி அட்வைசர் என்ன கூறினர் தெரியுமா? இந்த நேரம் தென் மாநிலம் போவது என் உயிருக்கே ஆபத்து என்று கூறித் தடுத்தார்!

காமராசர்: நல்ல வேளே; நீங்க வராம இருந்தா என் மானம் போயிருக்கும்!

கக்கன்: இனிமே நீங்க பயப்படாதீங்க. இன்னேக்கி இவ்வளவு கூட்டம் வந்திருக்கிறதுக்கு அர்த்தம் நம்ப காமராசர் கழகத்துக்கு கருமாதி பண்ணிட்டாருங்கிறதுதான்!

[தேசிய கீதம்பாடி முடிக்கப்படவே; குடியரசுத் தலேவர் பேச எழுகிருர்.]

காமராசர்: சும்மா இந்தியிலே பேசுங்க; கழகத்துக்கு அதுதான் கருமாந்திரமா இருக்கும்!

[குடியரசுத் தலேவர் 'ஜெய்ஹிந்த்' என்கிருர். சென்றகாட்சியில் ஆயுதங்கள் வழங்கிய வாலிபன் மேடைக்கு வருகிருன்.]

வாலிபன்: குடியரசுத் தலேவரே! உமது பேச்சைக் கேட்க யாரும் தயாராக இல்லே!

[காமராசர் 'சிப்பாய்......சிப்பாய்'...என்று கதறுகிருர். பதில் இல்லே. அவருக்குப் பயம் அதிகரிக்கிறது]

கு தலேவர்: யார் நீ?

வாலி: காமராசர் கருமாதி செய்யப்போவதாகச் சொன்ன தி. மு. கழக உறுப்பினன்!

காமராசர்: பொய் சொல்ருன்; நீங்க நம்பாதீங்க! அந்தக் கட்சிக்காரன் ஒருத்தன் கூட இப்ப வெளியிலே இல்லே...பாருங்க; இவ்வளவு கூட்டமும் பிரிவினே கூடாதுன்னு கூடியிருக்கிறது!

வாலி: அட பரிதாபத்திற்குரியவர்களே! இவ்வளவு ஆயிரம் பேரையும் ஏக இந்தியப் பித்தர்கள் என்று நினேத்துக்கொண்டு குதூகலமாக இருந்தீர்கள்? இவர்கள் அனேவரும் எங்களவர்கள், அய்யா! சப்தம் போடாமல் உங்கள் சிப்பாய்களேக் கட்டிப்போட்டுவிட்டு என் வீரர்கள் அவர்கள் உடையிலே நிற்கிருர்கள்!

காமராசர், கக்கன்: அய்யய்யையோ!

கு. தலேவர்: என்னய்யா இது; தி. மு. க.ன்னு ஒரு கட்சி இருந்ததையே ஜனங்க மறந்துட்டாங்கன்னு சொன்னீரு; கக்கன் என்னடான்னு அந்தப் பசங்ககிட்ட இருக்குறது தீபாவளித் துப்பாக்கின்னு சொன்னரு; அவுங்க நம்ப சிப்பாய்களேயே மடக்கிட்டார்களே! யோவ், கக்கன்! என்னய்யா இது?

கக்கன்: நான் முதல்ல அப்படித்தான் நினேச்சேன்...ஏன்ன...காமராசருக்கு நாட்டுல ரொம்ப ஆதரவு...

கு. தலேவர்: சரிதான் நிறுத்துய்யா......நீ...... யோவ். காமராஜ்! இப்பதான்யா எனக்குத் தெரியுது, கக்கனுக்கு நீர் ஏன் மந்திரி பதவி கொடுத்தீருண்ணு! அவர் கையிலே ஒரு ஜால்ரா வாங்கிக்கொடுய்யா; உமக்குச் சரியா தாளம் போட்டுகிட்டே இருப்பாரு! அப்பவே என் 'மிலிட்டரி அட்வைசர்' சொன்னரு; நான் கேட்டேனு?

வாலிபன்: குடியரசுத் தலேவரே! பேசிக்கொண்டிருக்க நேரமில்லே. நீர் திராவிடநாடு விடுதலேப் பிரகடனத்தை வாசிக்க வேண்டும்... வாருங்கள் எம்மோடு!

கு. தலேவர்: எனக்கு உண்மையான அதிகாரமில்லே என்பது உங்களுக்குத் தெரியாதா? பிரதமர் நேருவோடு நான் பேசித்தான் முடிவு செய்யவேண்டும்.

வாலிபன்: எங்களிடம் கம்பியில்லாத் தந்தி இருக்கிறது. அதன் மூலம் பிரதமருடன் தொடர்பு கொள்ளலாம் வாருங்கள்...

கு. தலேவர்: அப்போது இவர்கள்?

வாலிபன்: யார்? காமராசரும், கக்கனுமா? பாவம், அவர்களால் என்ன பிரயோஜனம்? நீங்கள் வாருங்கள்...

[அழைத்துப்போகிருன். கூட்டமும் கலேகிறது]

காமராசர்: நான் அப்பவே சொன்னேன்: உண்மையை ஓரளவாவது ஒத்துக்கன்னு! கேட்டீரா? தீபாவளித் துப்பாக்கின்னு ஏன்யா கரடி விட்டீரு?

கக்கன்: நீங்க சொல்லலியா ஜெயில் சுவரு 'வீக்கு'ன்னு!

காமராசர்: சர்தான்...சும்மா வாய்யா...

(திரை)

காட்சி 8 — ஒரு வீடு

ஒரு வாலிபன் கட்டிலில் படுத்துத் தூங்கிக் கொண்டே பேசுகிருன்.

வாலிபன்: டக்... டக்.... கம்பியில்லாத் தந்தி.... நேருவுக்கு வேறே வழியில்லே... குடியரசுத் தலேவர் சம்மதிச்சுட்டாரு... அண்ணு விடுதலே... அண்ணு விடுதலே... திராவிடநாடு கிடைச்சுடுத்து... திராவிடநாடு கிடைச்சுடுத்து...

[அப்போது 'என்னடா தம்பி' என்று கேட்டவாறு அவன் தாய் ஓடி வருகிருள். 'திராவிடநாடு கிடைச்சுட்டுது. ?என்றுமேலும் அவன்

புலம்புகிறான். தாய் அவனை எழுப்புகிறாள்.)

தாய் : தம்பீ...தம்பி... திராவிடநாடு வந்துட்டுது! திராவிடநாடு வந்துட்டுது!!

வாலி : (கண்விழித்து) என்ன; திராவிடநாடு வந்துவிட்டதா?

தாய் : ஆமாண்டா; இதோ பாரு...

(என்று 'திராவிடநாடு பத்திரிகையை எடுத்து நீட்டுகிறாள்.)

வாலி : இதுவல்ல' அம்மா! உண்மையிலேயே திராவிடநாடு கிடைத்துவிட்டது... அண்ணா சொன்ன ஓட்டு முறையால் அல்ல; வேட்டு முறையால்! அப்படிக் கனவு கண்டேன், அம்மா!

தாய் : கனவுதானே? இன்றைய 'முரசொலி' படித்தாயா? அண்ணாவின் பேச்சு வந்திருக்கிறது.

வாலி : என்ன'ம்மா?

தாய் : இதோ படிக்கிறேன் கேள்!

[படிக்கிறாள்]

"எந்தக் காரணத்தைக் கொண்டும் திராவிடம் பெறுவதற்கு என் தம்பிகள் வேட்டுமுறையை நாடமாட்டார்கள். ஓட்டுமுறையாலும் அறவழிப் போராட்டத்தாலுமே நாங்கள் நாட்டு விடுதலை பெறுவோம்!

வாலி : அப்படியே நடக்கட்டும்; நான் கண்டதெல்லாம் கனவாகவே போகட்டும்!

[என்று கழுத்திலே கயிறு மாட்டிக் கொள்வதைப்போல கையால் சுற்றிக் காட்டுகிறான்.]

தாய் : என்னடா சொல்றே?

வாலி : கிருஸ்தவர்களுக்கு சிலுவை சின்னம்! விடுதலைவீரர்களுக்குதூக்குக் கயிறு சின்னம்! அப்படி அந்தப் புரட்சிக்காரன் உருக்கமாகப் பேசினான் அம்மா!

தாய் : ஓ... கனவிலா? நல்ல பிள்ளையப்பா, நீ! சதா உனக்கு நாட்டு நினைப்புதானே?

[சிரிக்கிறாள். திரை விழுகிறது.]

[74-ம் பக்கத் தொடர்ச்சி]

என்ன என்பது நமது அமைச்சர்களுக்குத் தெரியாதது ஆச்சரியமல்ல. ஆனால் டெல்லி ஓர் அளவுக்குத் தெரிந்திருந்தது. நமது போராட்டத்தின் அங்கமாக திடீர் என ஏற்பட்டது கருப்புக் கொடி நிகழ்ச்சியாகும். இதைப்பற்றி சென்னை சர்க்கார் உணர்ந்ததைவிட, டெல்லி சர்க்கார் நன்கு உணர்ந்து இருந்தது.

விடுதலைப் போராட்டம் என்று தி. மு. கழகத்தவர்கள் சொல்லியும் இவர்கள் அலட்சியமாக இருந்தார்கள். இதற்குக் காரணம் என்ன? இவர்களின் பலமேயாகும்.

தமிழ், ஆங்கிலப் பத்திரிகைகள் இருப்பது! ஒவ்வொரு மாவட்டத்திலும் மோட்டார் மன்னர்கள், காண்டிராக்டர்கள், கனவான்கள் —இவர்கள் ஆங்காங்கே சொன்னதைச் செய்து விடுகிறார்கள். இப்படி அந்தஸ்து, அதிகாரம் படைத்த நம்மை தி. மு. கழகத்தாரால் என்ன செய்யமுடியும் — என்ற பைத்தியக்கார நினைப்பால் தான் நமது மரியாதையான வேண்டுகோளை அலட்சியப் படுத்தினார்கள்.

ஆனால் டெல்லி சர்க்கார் ஏன் இந்த சூழ்நிலை வர அனுமதிக்காது முன்னமேயே தடுக்க ஏற்பாடு செய்ய அரும்பாடு பட்டது? தங்கள் சென்னை ஏஜண்டான மந்திரிமார்களைக் கூட அலட்சியப்படுத்தியதேன்?

இத்தகைய சூழ்நிலை படேல் காலத்தில் ஏற்பட்டது. டெல்லி சர்க்கார் தனது ராஜதந்திரிகளால் நிலைமையை சமாளித்துக்கொண்டது. அப்படி இன்று செய்துகொள்வதற்கு என்ன என்பதே டில்லியின் கவலை!

மாநில சர்க்காரின் பாதுகாப்பை தன் கையில் அப்போது வைத்திருந்தவரும் இன்றைய அரசியல் தலைவர்களில் நீண்ட அனுபவம் நிறைந்தவருமான மந்திரி பக்தவத்சலனார் ''தி. மு. க. பசங்கள் சொல்வதை பொதுஜனம் கேட்காது! பொதுஜனம் எங்களிடம் தான் இருக்கிறது! இவர்கள் மிரட்டலுக்கு டெல்லி சர்க்கார் பயப்பட வேண்டாம். வரட்டும், ராஜேந்திர பிரசாத்! அவர் சுற்றுப் பிரயாணத்தை நான் பார்த்துக் கொள்ளுகிறேன்!'' என்று சொல்லியிருக்கவேண்டும்.

ஆனால் அழகேசனாரும் பக்தவத்சலனாரும் தெரிந்துவைத்திருப்பதை விட மிக நன்றாக டெல்லி நம்மைப்பற்றி தெரிந்து வைத்திருக்கிறதே!

மும்முனை போராட்டம் பற்றியும், நேரு சென்ற தடவை சென்னை வந்தபோதும் தி. மு. க. தலைவர்களைப்பற்றி சென்னை சர்க்கார்—டெல்லி சர்க்காருக்கு சொன்னது என்ன? ஆனால் அதன்பின் அழகேசனார் கையில் அடங்கிய பொதுஜனம் என்ன செய்தது என்பதை டெல்லி சர்க்கார் நன்றாகத் தெரிந்து வைத்திருப்பதால் தான் இந்தத் தடவை ராஜேந்திரர் வருகைபற்றி முழுப்பொறுப்பையும் தானே எடுத்துக் கொள்ள நேர்ந்தது.

தங்களின் தெரியாத்தனம், அகம்பாவம், ராஜதந்திரமின்மை, இவைகளை டெல்லி உணர்ந்து கொண்டதைக் கண்டு சென்னை அமைச்சர்கள் அன்றும் இன்றும் வெட்கப்படுவதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாதிருக்கவே என்னென்னவோ பிதற்றுகிறார்கள்'

பொதுஜனம் தன் கட்சிப் பக்கம் என்கிறார் அரியலூர் அழகேசனார்.'

நேருவைக் கெஞ்சிக் கேட்டு ஓர் கடிதம்பெற்றோம் என்கிறது காங்கிரஸ் பிரச்சார ஏடு.

ஆகஸ்ட் 31-ம் தேதியை தி. மு. க. தலைவர்கள் குறிப்பிட்டது எதற்கு? இம்மாநில சர்க்காரின் கையாலாகாத்தனத்தினால், டெல்லி சர்க்கார் ''இந்தி மொழி'' உத்திரவிற்கு ராஜேந்திரர் ஒப்பமிட்டுவிட்டார். அதை 'வாபஸ்' பெற வேண்டுமென்பதே நமது கோரிக்கை!

துருக்கி சர்க்கார் கவிழ்ந்தது. இராணுவம் ஆட்சிக்கு வந்தது. ஜப்பானிய சர்க்கார் திணறுகிறது. உலகப் பெரியவர் இருவரில் ஒருவரான அமெரிக்கக் குடியரசுத் தலைவர் தனது ஜப்பானிய விஜயத்தை பாதிதூரம் வந்தபின் ஒத்தி வைத்தார். உலக அரசியல் செய்திகள் இந்த நிலையில். ரஷ்யாவுக்குச் சென்று தன் நாடு திரும்பிய குடியரசுத் தலைவர் ராஜேந்திரர் தன் நாட்டிலேயே பகிஷ்கரிக்கப் படப்போகிறார் என்ற பயங்கரநிலை உருவாவதைக் காண; அல்ல-நினைக்கக்கூட டெல்லி சர்க்கார் விரும்பவில்லை.

நாமோ உடனே அவசர ஆலோசனையை நடத்தினோம். இந்தி எதிர்ப்பு மாநாட்டைக் கூட்டினோம். மறுதினம் சென்னை வரவிருக்கும் ராஜேந்திரருக்கு சென்னை மாநகர முதல்வர் கருப்புக்கொடி கொடுத்து வரவேற்பார்-என்று அண்ணா சொன்னார்.

என்ன நடந்தாலும் சட்டப்படி தி. மு. க. வினரை நடத்த வேண்டும் என்று திரு. பக்தவத்சலனார் விரும்பினார். திரு. காமராஜரும் சரி என்று சொல்வது போல் தூத்துக்குடி சென்றார்.

மப்பும் மந்தாரமுமாக இருந்த சென்னை அரசியலில் ஒரு புயல் உருவாக ஆரம்பித்தது. அது துருக்கியையும், ஜப்பானையும் நினைவூட்டியது. டெல்லிக்கும், ஹைதராபாத்துக்கும் பறந்தது. இத்தகைய ஒரு நல்ல நிலை இவ்வளவு விரைவில் ஏற்படும் என்று முதலில் தி. மு. கழகத்தார் எண்ணவில்லை.

நாம் டெல்லியிலிருந்து பெற விரும்புவதை எத்தகைய பலி வேண்டுமானாலும் டெல்லிக்குத் தந்து பெற எண்ணினோம், ஆனால் நமது மாநில சர்க்காரின் முட்டாள்தனம், அல்லது ராஜதந்திரமின்மை நமக்கு நல்ல சந்தர்ப்பத்தை உண்டாக்கிக் கொடுத்தது.

காங்கிரஸ் பிரச்சார ஏடு சொல்லும் கெஞ்சிக் கேட்கும் வேலையைச் செய்யும்படி சென்னைக்கு டெல்லி பணித்தது. முதல் நாள்வரை நிமிர்ந்து நடந்த மந்திரிமார்கள் மறுதினம் குரலைத் தாழ்த்திக் கொண்டார்கள். தி. மு. க. குறைகளைப் பற்றி மாநில சர்க்கார் சட்ட சபையில் கலந்து பேசி நல்ல பரிகாரம் காணும் என்று உறுதி கூறினர்.

இம்மாநில மந்திரிகளின் சொல்லை நம்பிவிட அவ்வளவு அறியாதவர்கள் அல்ல தி. மு. கழகத்தார். இன்னும் நல்ல நிலை உருவாக எதிர்பார்த்து இருந்தார்கள். ஹைதராபாத்திலும் ராஜேந்திரருக்குக் கடிதம் எழுதியிருப்பதை வெளிப்படுத்தினார்கள். இதைக்கண்ட பின்பே 'அதி மேதாவி'யான திரு. பந்த் அதுவரை தான் செய்து வந்ததைவிட சற்று சுறுசுறுப்பாக வேலை செய்யத் தொடங்கினார்.

ராஜேந்திரர் வருகை, பொது மொழி பற்றிய நிலை இரண்டை பற்றியும் யோசித்தார்.

ஆகஸ்டு 31-ம் தேதி விடுதலைப் போராட்டத்துக்கு, நாம் செய்து வந்த யுத்த முயற்சியையும், ராஜேந்திரர் வருகைக்குக் கருப்புக் கொடி பிடிக்கும் நமது முஸ்தீபையும் தற்காலிகமாகத் தடுக்க முடிவு செய்தனர்.

இவ்வளவு நல்ல நிலைமையை இறுதியில் நாம் உண்டாக்கியதற்கு நம்மை வேலூர் காங்கிரஸ் அறிக்கை பாராட்டியிருக்க வேண்டும். பாராட்டாவிட்டாலும் சட்ட சபையில் நிதி மந்திரி சுப்பிரமணியம் 'இன்னபடி சொன்னார்' என்றாவது சொல்லியிருக்கவேண்டும். அதற்கு பெரிய மனம் வேண்டும். திரு. அழகேசனார் கருப்புக் கொடி பேச்சே பேசாமலாவது இருந்திருக்க வேண்டும், மந்திரிமார்களாவது தடுத்திருக்க வேண்டும் நாளைக்கடத்துபவர்களை, நாட்டை உணராதவர்களை! பொதுஜனம் அழகேசனாருடனா, அறிஞர் அண்ணாவுடனா என்பது முன்பு கோபிசெட்டிப்பாளையத்தில் அவர்கள் மாநில மாநாடும், நமது மாவட்ட மாநாடும் நடந்ததிலிருந்தே தெரிந்திருக்கிறது!

வேலூரில் கூடிய கமிட்டிக் கூட்டத்திலும், அவர்கள் கட்சி அறிக்கையிலும், நான் தவறு சொல்ல வரவில்லை.

எங்களைப்பற்றி பொறுப்பான பதவிகளில் இருந்துகொண்டு பொய்யான செய்தியை வெளியிட்டு, மக்களை ஏமாற்றுவதாகக் கருதி, தங்களையும் தங்கள் கட்சியில் உள்ளவர்களையும் ஏமாற்றிக் கொள்கிறார்களே என்பதை எண்ணித்தான் கண்டிக்கிறோம்.

ஆகஸ்ட் 31-ம் தேதிவரை தி. மு. க. தாமதிக்க வேண்டுமா? ராஜேந்திரர் வருகை குறித்து நாம் யோசிப்பது சரியா? முதலில் கொடுத்த நோட்டீஸ் கெடுவுக்கு முன்பே ஒரு புது முயற்சி செய்வது நல்லதா என்பதுபற்றி தி. மு. க. தலைவர்களிடம் பேச்சு வார்த்தைகள் இருந்ததாகச் சிலபத்திரிகைகள் எழுதின.

இந்த சந்தர்ப்பத்தில் நான் ''முரசொலி'' அலுவலகத்திற்குச் சென்றிருந்தேன். சில தலைவர்கள் இதைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். மாணவர் இயக்கம், இந்திப் போராட்டத்தில் கலந்து கொள்ளக் கூடாது என்று அண்ணா கடுமையாகச் சொல்லியிருப்பதைப் பற்றியும் அங்கு பேசினார்கள். திராவிட கலைச் செல்வர்களான எம். ஜி. ஆர்., கே. ஆர். ஆர்., எஸ், எஸ். ஆர்., டி. வி. என். இவர்களையும், சிலரது பெயர்களையும் கூறி போராட்டத்தில் கலந்துகொள்ளாதிருக்கக் கேட்டுக்கொண்டுள்ளது பற்றியும் பேச்சு வந்தது.

முடிவாக நண்பர் க. ராஜாராம் அவர்களிடம் ஒரு நண்பர் சொன்னார், ''உடனே மாநாடு கூட்டி, பகிஷ்காரம் செய்ய முடிவு செய்தால் என்ன?'' என்று.

''நாம் பகிஷ்காரத் தீர்மானத்தைச் செய்துவிட்டு முதலில் ஆகஸ்டு 31-ந் தேதி போராட்டத்திற்காகத் தயாரித்துள்ள அத்தனை முறைகளையும் இதில் பயன்படுத்திவிட வேண்டும். அப்படிச் செய்தால் நாம் எதிர்பார்க்கும் பலன் உடனே கிடைத்துவிடும். பல லட்ச ரூபாய்கள் செலவு — 20, 30 ஆயிரம் தோழர்கள் சிறையில்—1000 பேருக்கு ஒரு வருடம் வரை தண்டனை; 3 வருடங்கள் வரை தண்டனை— 500 தோழர்கள் பரிதாபகரமான மரணம்— இவைகள் எதுவும் ஏற்படாமல் நமக்கு வெற்றியும் கிட்டலாம். ஒன்று இதில் தோல்வியும், எதிர்காலத்தில் வீழ்ச்சியின் எழுச்சியும் ஏற்படலாம்!'' என்றார்.

அந்த அளவிற்கு ஆர்வத்துடன் திராவிடர்கள் காத்திருந்தனர்.

இத்தகைய திடுக்கிடும் சம்பவங்கள் ஏதும் நேராமல் இந்தி பற்றி மீண்டும் டெல்லி உறுதிமொழி தந்திருப்பது நல்லது.

திரு. அழகேசனாரும், அவரை ஆட்டிவைக்கும் தலைவர்களும் எங்களைப்பற்றி போட்டுள்ள கணக்கைக் கவனித்து அதற்கான முறைப்படியே நாங்கள் நடந்துவருகிறோம்- அவர்களின் 10 வருட முயற்சியில் எங்களிடம் துரோகிகளை உண்டாக்க முயற்சித்துத் தோல்வியைத் தழுவுவதும் ஒன்று.

பொது மொழி சம்பந்தமாக ஏற்பட்ட நல்ல தோல்வியை, அறிக்கையாலும் இழித்துப் பேசுவதாலும் அவர்கள் மறைத்துவிட முடியாது.

பொங்கல் புதுநாளில் அவர்களுக்கு நல்ல புத்தியும், நமக்கு சகிக்கும் தன்மையும் கிடைக்கட்டும்.

மானம் காத்த மங்கை

டாக்டர் சத்தியவாணிமுத்து எம்.எல்.ஏ

ஞாயிறு எழுந்தான்; ஞாலம் விழித்தது! புள்ளினம் பள்ளு பாடிப் புறப்பட்டது; மக்கள் கடமையிலிறங்கினர்.

பிரடெரிக்லாந்து! சுற்றிலும் மேரிலாந்தின் சுற்றுச் சுவர்களைப்போல் பச்சைப் பசேலென மலைத் தொடர்கள்! அடிவாரத்தில் கனி குலுங்கும் மாமரங்கள்! வாச மலர் நிறைந்த பூக்காடு! அழகிய வயலோரங்கள்! கவி பாடும் சிற்றாறு! கதை பேசும் புள்ளினம்! ஓவியம் தீட்டிடும் எழிற் காட்சி! "இயற்கை தவழ்ந்து விளையாடும் இன்பத் தொட்டில் இதுதானே" என எதிரியும் வியக்கும் சிற்றூர்.

'இன்றே முற்றுகை இட்டாக வேண்டும்; முடிவு இந்நாடு நமதாக வேண்டும். ஆதிக்க வெறிகொண்டு பிற நாடுகளை ஆக்ரமித்து அரசோச்ச வேண்டும் என்ற ஆத்திர எண்ணம் கொண்ட லீ திட்டமிட்டு உள்ளே நுழைந்தான்.

மலையைக் கடந்துவிட்டோம், இனியென்ன? குதிரைப்படையும், காலாட்படையும் போதுமே; தேரும் யானையுமா தேவை இந்த திக்கற்ற கூட்டத்தின் கொற்றத்தைச் சாய்க்க? — என்று தலைகனத்தோடு தட்டிக் கேட்பாரின்றி சுற்றினான்; செங்கிறத்தில்வெண்ணிற விண்மீன் பொறித்த பட்டுக் கொடிகளைத் தாங்கிய எதிரியின் படை எதிர்ப்பாரின்றி பவனி வந்தது பிரடெரிக்லாந்தில்.

படையின் வேகத்தில் பகலவனும்பிந்திவிட்டான்! காலைத் தென்றல் மாறி உச்சி வேளையில் ஒளியைச் சற்று கடுமையாகக் காட்ட முடிந்ததே அன்றி அவனால் எதிரியை அடக்க முடியவில்லை.

ஊரோ சாவூராகியது. மக்கள் சாகவில்லை—மறம் செத்துவிட்டது! இல்லை, இல்லை. அவர்களின் உள்ளம் உரம் பெறவில்லை. எதிரியின் நிலை அறிய ஆற்றலில்லை. தங்கள் வலிமையை தாங்களே உணரவில்லை. எனவே, தலைமை தாங்க பகலவன் புறப்பட்டான்! பொழுது சாயும்நேரம், அவனும் போகவேண்டுமே புத்துலகிற்கு. எனவே தான் மருண்டு நின்றான்.

இதோ, எதிரியும மருண்டு நிற்கிறான். எனக்கு நிகர் யாருமில்லை என்ற நெஞ்சுரத்தோடு உருமிச் சுற்றிவந்த தானைத் தளபதி ஸ்டோன்வால்ஜாக்சன் மிதித்துதுவைக்கப்பட்ட பிரடெரிக்லாந்து கொடி ஒன்று மீண்டும் மாடி ஒன்றில் கம்பீரத்தோடு "இதோ நான்; எடு வாளை! தொடு போரை!" என்று வீர அழைப்பு விடுவது போல் பறப்பதைக் கண்டான்.

அவனுக்கு ஆத்திரம் பொங்கியது. இதுவரை யாருமில்லை தன்னை எதிர்த்து நிற்க! மிதித்துத் தள்ளப்பட்ட கொடி மீண்டும் மாடிக் கம்பத்திலா?

"அதோ! அந்தக் கொடி"

விடாதே! சுடு. அழி!'' என எக்காளமிட்டான் ஜாக்சன்.

கொடி மரம் சுடப்பட்டது! கொடி சுக்கு நூறுகியது.

ஆனால், கொடி கீழே விழவில்லை! விழ இருந்த கொடியைத் தாவிப் பிடித்தாள் ஒரு மூதாட்டி! வீரத்தின் வழி வந்த வீராங்கனை! தாய்த் திருநாட்டைக்காக்கப் புறப்பட்ட ஒரு தாய். அவள்தான் பார்பரா பிரெட்சி! தொண்ணூறு வயதைதொட்டுவிட்ட அவள் எண்ணூறு வீரர்களின் உரத்த குரலில் முழங்கினாள்!

"சுடு, உன்னால் முடிந்தால் இந்தக் கிழட்டு நரைத்த தலையை! ஆனால், உன் நாட்டுக்கொடியைக் காப்பாற்றிக் கொள்!''

திடுக்கிட்டான் ஜாக்சன். அந்தக் குரல் யாருடையது? உயரப் பார்த்தான்; கிழிந்த கொடியை கையிலே ஏந்திய கிழவி மீண்டும் கொடியைப் பறக்கவிட்ட வண்ணம் பேசுவதைக் கண்டான்!

நாணம் அவன் தலையை சாய்த்தது! வெட்கம் அவன் விலாவினை ஒடித்தது! அச்சம் அவன் முகத்தின் ஒளியை அழித்தது! கிழவியின் வீரம் அவன் பேச்சைத் தடுத்தது!

தன்னை அறியாமலேயே அவன் பேசத் தொடங்கினான். "நாயைப் போல் சாகும் இந்த நரைத்த தலையின் முடியை யார் தொடுவார்? விலகிச் செல்!''—வீண் வீரம் பேசிவிட்டு அவனும் விலகினான்.

கிழவியின் தலை கீழே உருண்டது! ஒடிந்த கொடிக் கம்பத்தில் கிழிந்த பழையக் கொடி ஒட்டிக்கொண்டிருந்தது. கிழவியின் வீர வேட்கையினால், தாயகப் பற்றினால் பிரடெரிக்லாந்து மக்களின் எழுச்சிப் படை திரண்டெழுந்தது! நாடு தன்னைக் காத்துக் கொள்ளத் தயாரானது. பழையக் கொடி தலைமை தாங்கியது! வீரம் சாகவில்லை! விவேகம் இழக்கவில்லை! மறம் மறையவில்லை! மாலை வந்தது. பகலவன் பூரிப்போடு தன் பணி முடிந்தது என்று மறைந்தான்!

பார்பரா பிரெட்சியின் பணி முடிந்தது. எதிரிகள் ஓடி ஒளிந்தனர்! ஆணவம் அழிந்தது! ஆம்; ஸ்டோன்வால் ஜாக்சன் மாண்டான்! வீராங்கனைக்காக சிந்தப்பட்ட தண்ணீர் அவனது சவத்தின்மீது பட்டது. ஒற்றுமையின் விடுதலைக் கொடி அந்த வீராங்கனையின் கல்லறைமீது ஒளி வீசிப் பறந்தது!

வரலாற்றில் பார்பரா பிரெட்சியைப் போன்ற வீராங்கனைகளைத் தேடித்தான் பார்க்க வேண்டியிருக்கிறது. வீட்டோடு அடங்கி விடுவதல்ல இலட்சிய வாழ்க்கை; நாட்டோடு நயவஞ்சகர் மோதும் போது வெஞ்சினம் கொண்டு வீரக் காவியம் படிக்கத் துணிந்தெழுந்தோர் மிகச் சிலரே!

ஆனால், திராவிடத்திலே அத்தகைய தியாகச் சுடர் மணிகள் இன்று ஒளி விடுகிறார்கள்; அடுப்பூதும் வாய் ஆட்சி பீடத்தினரை அதட்டிக் கேட்கும் துணிவைப் பெற்றுவிட்டது! தாய்க்குலம் எழுந்தால் பேய்க் குணத்தார் ஆட்டம் காணுவர்; அழிந்துவிடுவர் என்பது மெல்ல மெல்ல உண்மையாகிக் கொண்டு வருகிறது! நாளை......பார்பரா பிரெட்சியைப் போன்றோர் தேவை என்றாலும் தயங்காது!

வெறி கொண்ட லீயின் குதிரைப் படை அதிகாலையிலேயே அநீதியிழைக்கத் துவங்கியது.

திருவாளர் 420

'இந்தியன் பினல் கோடு' செக்ஷன்களில் 420 ஒரு தனிரகம். சமுதாய அமைப்பில் பல்வேறு துறைகளில் இயங்கிவரும் திருவாளர்களைக் குறித்தும், அவர்கள் செயல் முறைகளில் எந்த அளவிற்கு மூளையைப் பயன்படுத்தி பலன் அடைகிறார்கள் என்பது பற்றியும், அவர்களுடைய வன் முறைச் செயல்களுக்கு முடிவுகட்டி அளிக்கப்படும் சிறைப்பரிசுகள் பற்றியும் விளக்குவதே 420ம் அதனை ஒட்டிய பிரிவுகளும்.

இந்த 'பேரும், புகழும் பெற்ற420'-ல் சிக்குபவர்கள் யார்? பாங்குகளில், சினிமாக் கொட்டகைகளில் மாட்டப்பட்டிருக்கும் 'கேடி'களின் பட்டியல் மட்டுமல்ல; பெரிய மனிதர்கள் என்ற பெயரில்கூட அந்தத்திருவாளர்கள் பதுங்கியிருப்பார்கள்.

திருடனைக் கண்டு பிடித்துவிடலாம் கொலைகாரன் சிக்கிவிடுவான்; ஆனால் செக்ஷன் 420 கிடைப்பது சற்று கடினம்தான்.

பக்திமான் போல் வேடமிடும் பகல் கொள்ளைக்காரர்கள், பகவான் பெயரைச் சொல்லி பணம் பறிக்கும் பாதகர்கள், செப்புக்காசை அசல் தங்கமென்று சொல்லி குறைந்த விலைக்கு அளிக்கும் குடிகேடர்கள், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் உன்மத்தர்கள், அரிசியில் கல்லையும், மண்ணையும் கலந்து அளக்கும் அசகாய சூரர்கள், நோட்டை இரட்டிப்பதாகச்

இரா. இளம்வழுதி
எம்.ஏ., பி.எல்

சொல்லும் எத்தர்கள், சீட்டுக்கம்பெனி நடத்துவதாக விளம்பரம் செய்து ஏழைகளின் பணத்தை ஏப்பமிடும் இழிசெயலர்கள், அரசியல் சூதாடிகள், இன்னும் எத்தனையோ ரகங்கள்—அத்தனைபேரும் திருவாளர்கள் 420 தான். ஏமாற்று உலகத்தின் அரசகுமாரர்கள் இந்த 420.

* * *

இந்த நூற்றாண்டிலுமா அந்தக் கைங்கரியம் என்று கேட்கத் தோன்றும். ஆனால் மனித வாழ்க்கை முன்னேற முன்னேற ஒவ்வொரு கோணத்திலும் யாராவது ஒரு திருவாளர் 420 ஐச் சந்திக்காமல் நம்மால் மேலே போக முடியாது. நீறு பூசிய நெற்றியும், உருத்திராட்சம் கட்டிய கழுத்தும், விசிறிமடி தொங்கும் தோளும், துவளும் ஜிப்பா தழுவும் உடலும், அத்தர் நெடி வீசும் வாடையும், புன்சிரிப்பு தவழும் வாயும், விஷமம் விளையாடும் கண்களும், ஏமாற்றுக் கலை பயிலும் மூளையும், அப்பாவிகளைக் காணோமே என்று ஏங்கும் இதயமும், நயமான பேச்சும் கொண்ட மனித உடல் நடமாடும்போது, திருவாளர் 420ன் உலகம் விடிந்துவிட்டது என்றுதானே பொருள்!

* * *

ஆனால் அவர்களுடைய சரளப்பேச்சில் மயங்கி கைப்பொருளை இழக்கும் ஏமாளிகளைக் காணும்போது உள்ளபடியே நமக்கு ஆச்சரியமும் திகைப்பும் ஏற்படுகிறது. பத்திரிகைகளில் பத்தி பத்தியாக செய்தி வருகிறது, படித்தவர்களும் பாமரர்களும் எப்படி எத்தர்களிடம் ஏமாறுகிறார்கள் என்று.

ஆனால் அந்தச் செய்தி தொடர்கதையாக வருகிறதே தவிர, முற்றுப்புள்ளி வைத்து முடிக்க முடியவில்லையே! மனிதர்களின் பலவீனம், பேராசை, குறுக்கு வழியில் பெரும் பொருளீட்டும் பேராசை — அந்தப் பேராசையை மூலதனமாகக் கொண்டே செயல் புரிகிறான் ஏமாற்றுக்காரன். சில சந்தர்ப்பங்களில் பயமுறுத்தியும் ஏமாற்றுகிறான். பழைய பஞ்சாங்கத்தைக் காட்டியும் ஏமாற்றுகிறான். ஆக இந்த ஏமாற்றுக் கலை வளர்ந்து வருகிறதே தவிர குறைவதாகக் காணோம்.

* * *

ஆண்டவன் பெயரைச் சொல்லி எப்படி அசகாய சூரனொருவன் அப்பாவி ஒருவரை ஏமாற்ற முனைந்தான் என்ற ஒரு கற்பனை—நடந்த நிகழ்ச்சி ஒன்றை மையமாகக் கொண்டு தரப்படுகிறது.

சுமார் 30, 35 ஆண்டுகளுக்கு முன்னர் கடலூரில் ஷேக் இமாம் என்ற ஒரு பணக்கார முஸ்லிம் குடியிருந்து வந்தார். அவருடைய முன்னோர்கள் மலேயாவில் வணிகம் செய்து பெரும் பொருள் திரட்டியவர்கள். வம்சபரம்பரையாகவே நல்ல செல்வாக்கில் உள்ளவர்கள்.

ஷேக் இமாம், மார்க்கத் துறையில் கெட்டிக்காரர். தொழுகையை முறை தவறாமல் மேற்கொள்ளுபவர். அல்லாவின் திருநாமம் உச்சரிக்கப்பட்டால் போதும்; மெய் மறந்துவிடுவார். நாகூர் ஆண்டவர்மீது அசைக்க முடியாத பக்தி. இமாம் சாயபுவின் தகப்பனார் ஹஜ் யாத்திரைக்குப் போய் வந்தவர். முஸ்லிம் பேட்டையில் நல்ல மதிப்போடு வாழ்ந்து வந்தார்கள்.

* * *

திடீரென்று தந்தை இறந்துபோன கவலையால் பீடிக்கப்பட்டிருந்த ஷேக் இமாமுக்கு பீதியும் பயமும் தரத்தக்க இரு கடிதங்கள் நேரே நாகூர் ஆண்டவனிடமிருந்து தபாலில் வந்தன. வந்தன என்று சொல்வதைக் காட்டிலும் ஆண்டவனால் அனுப்பப்பட்டிருந்தவைபோல் இருந்தன.

ஆண்டவனின் கட்டளைகளாக சில பயங்கர உத்தரவுகளும் அவைகளில் கண்டிருந்தன. ஒரு குறிப்பிட்ட நபருக்கு ஒரு குறிப்பிட்ட இடத்துக்குச் சென்று ஒரு பெருந்தொகையை உடனடியாக ஷேக் இமாம் கொடுக்காவிட்டால், ஷேக் இமாமின் குடும்பம் அடியோடு நாசமாகிவிடுமென்றும், அல்லாவின் ஆணைக்குக் கட்டுப்படாவிட்டால் இமாமின் குடும்பத்தில் திடீர்ச்சாவுகள் ஏற்படுமென்றும், தீப்பிடித்து எரியுமென்றும், இன்னும் எவ்வளவோ பயமுறுத்தல்களைத் தாங்கி

மாட்டை இழுக்கச் செய்தான் மனிதன்....

வந்திருந்தன, அந்த இரண்டு கடிதங்களும். மேலும், ஆண்டவனின் கோபம் இமாமின் குடும்பத்தின்மீது இருப்பதால்தான் அவரின் தந்தையும் திடீர் மரணமடைந்துவிட்டாரென்றும் கடிதங்கள் பயமுறுத்தின.

தகப்பனர் மரணமடைந்து நாட்கள் சில ஆனதாலும், நாகூர் ஆண்டவனிடம் அழியாத பக்திகொண்டிருந்ததாலும், ஷேக் இமாம் தெய்வக் கட்டளைக்குப் பயந்து, தன்னுடைய மைத்துனனையும் துணைக்கழைத்துக்கொண்டு, கடிதங்களில் குறிப்பிட்டிருந்த கடற்கரைப் பகுதிக்கு மாலை 6 மணிக்குச் சென்றார். பணமும் எடுத்துச் சென்றிருந்தார் என்று சொல்லவும் வேண்டியதில்லை.

கடற்கரைப் பகுதியில் ஒரு கனவான்—கார்த்திகேய அய்யர் எனப் பெயர் படைத்தவர் வீற்றிருந்தார். முதலில் வர்ணித்திருந்த திருவாளர் 420 க்குள்ள சர்வ லட்சணங்களும் பொருந்திய சீமான் தான் அவர். அவரைக்கண்ட இமாம் ஆண்டவனை நேரே கண்டதுபோல் ஆனந்தம் கொண்டு, வந்த விவரங்களை அவரிடம் சொல்லி பணத்தையும் கொடுக்க முன்வந்தார்.

ஆனால் திருவாளர் கார்த்திகேயர் பணத்தை வாங்கவில்லை. வாங்காதது மட்டுமல்ல; விபரத்தை அறிந்து கேலியும் செய்தார். ஆண்டவனவது கடிதமாவது அனுப்புவதாவது; இதெல்லாம் என்ன கேலிக்கூத்து; என்று சொல்லி, இமாமை, இப்படியெல்லாம் ஏமாறக் கூடாது என்று புத்திமதியும் கூறி அனுப்பினர். அவருடைய பேச்சில் நயம் இருந்தது; நயவஞ்சகம் இருந்தது தெரியவில்லை. போதனை இருந்தது; சூது இருந்தது தெரியவில்லை. இவ்வளவுக்கும் காரணம் இமாம் தனியாக வராமல் துணையோடு வந்ததுதான் என்பதை விபரம் அறிந்தவர் கூறுவர். இமாமும் அவரது மைத்துனரும் திரும்பிவிட்டனர்.

* * *

மழைவிட்டும் தூவானம் விடவில்லை. மேற்படி திருவாளர் கார்த்திகேயர் சில நாட்களுக்குப் பிறகு இமாம் வீட்டுக்கே சென்றார். தனக்கும் ஆண்டவர் இரு கடிதங்கள் எழுதியதாகவும், இமாமின் குடும்பத்தை ரட்சிக்க வேண்டுமானல், இமாம் கொடுக்கும் பணத்தைத் தான் வாங்கிக் கொண்டுதான் ஆகவேண்டும் என்று சொல்லி இரு கடிதங்களை இமாமிடம் கொடுத்தார்.

அக் கடிதங்களில் ஆண்டவர் விவரமாகக் குறிப்பிட்டிருந்தார். பணம் பெற வேண்டிய ஆளின் அடையாளத்தையும் கடிதங்களில் காட்டியிருந்தார். முழு அடையாளமும் திருவாளர் 420க்குப் பொருந்தியிருந்தது.

இமாமும் ஆண்டவனைத் திருப்தி செய்ய வேண்டி பணத்தைக் கொடுக்க முன்வந்தார். திருவாளரின் முகமும் அகமும் மலர்ந்து ஆண்டவனைத் தியானித்துக் கொண்டே அமர்ந்திருந்தார்.

அந்த நேரம் பார்த்துத்தானு இமாமின் மைத்துனர் வர வேண்டும்? அங்கு நடந்த நாடகத்தைக் கண்டு மனம் பொருத அந்த நல்லறிவாளர், திருவாளர் 420-ன்மீது லேசாக சந்தேகம் கொள்ள ஆரம்பித்து, தன் எண்ணத்தைச் சூசகமாக தன் மைத்துனருக்குத் தெரியப்படுத்தினர். விவரம் புரியாமல் குழம்பியிருந்த இமாமும் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையே என்று ஏங்கிய திருவாளரும் சற்று நேரம் ஒன்றும் பேசாமலேயே அமர்ந்திருந்தனர். பிறகு இமாமின் மைத்துனர் திருவாளருக்குத் தெருவழியைக் காட்டினர். வேறு வழியின்றி அவரும் நடையைக் கட்டினர்.

* * *

எதையும் நம்பும் ஏமாளி இமாமிருக்க, திருவாளர் 420 சும்மாயிருப்பாரா? அல்லது அரிய சந்தர்ப்பத்தை இழக்க மனந் துணிவாரா?

திடீரென ஒரு நாள் இமாமுக்குக் கடைசி எச்சரிக்கையாக நாகூர் ஆண்டவரே நேரில் தபால் எழுதினர். எப்படியாவது முன்னூறு ரூபாயாவது திருவாளர் கார்த்திகேயருக்குக் கொடுக்காவிட்டால், இமாமின் குலக்கொழுந்தைக்கொன்று, சொத்துக்களைச் சூறையாடி, குடும்



....அந்த மனிதனும் இழுக்கிறன், காணீர்!

[புகைப்படங்கள்: சி. எஸ். பதி]

பத்தின் பூண்டே இல்லாமல் அழித்துவிடுவதாக நாகூர் ஆண்டவர் மிரட்டியதுபோல அந்தக் கடிதம் எழுதப்பட்டிருந்தது. ஆண்டவன் மனது புண்பட்டுவிட்டதே என்று பயந்து நடுங்கிய இமாம் திருவாளர் கார்த்திகேயரை வீட்டுக்கு அழைத்தார். குழையக் குழைய பேசினார். தன்னை மன்னித்துக் கொள்ளும்படி மன்றாடிக் கேட்டுக் கொண்டார். ஏதோ தவறு நடந்துவிட்டது; ஆகையால் அதை மனதில் கொள்ளாமல் ஆண்டவன் ஆணைப்படி தான் கொடுக்கும் முன்னூறு ரூபாயையும் பெற்றுக் கொண்டு தன்னை ரட்சிக்கும்படிக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்.

"ஆண்டவனின் இச்சைப்படி நடப்பதுதானே இந்த இமாமின் கடமை! உங்களிடம் உயிரையேகொடுத்துவிடு என்று அவர் எனக்குக் கட்டளை இட்டாலும், தப்பாமல் செய்திருப்பேன்! கேவலம் இந்தப் பணம்தானா எனக்குப் பிரமாதம்? நீங்கள் மறுக்காதீர்கள்; இனியொரு முறை அந்த ஆண்டவனிடமிருந்து எனக்கு இத்தகைய அச்சுறுத்தும் கடிதங்கள் வந்தால் நான் தாங்கமாட்டேன்!'' என்று சொல்லிக் கொண்டே உள்ளே அவசர அவசரமாக நுழைந்த இமாம், திரும்பி வரும்போது கையில் ஒரு தட்டுடன் வந்தார்.

மலர், பழம், சர்க்கரை இவைகளை வைத்து 3 நூறு ரூபாய் தாள்களை வைத்து மரியாதையாக திருவாளரிடம் இமாம் கொடுத்தார். ஆவல் பொங்கும் கண்களோடு தன் திறமையைத் தானே வியந்து கொண்டு, இமாம் கொடுத்த நோட்டுகளையும் எடுத்து தன் மடியில் வைத்துக்கொண்டு வெளியே செல்லக் கிளம்பினார். ஆனால் அவர் அறிவாரா இமாமின் மைத்துனர் ஏமாளி அல்லவென்பதை!

கடைசிக் கடிதம் வந்தவுடன் மைத்துனர் உள்ளூர் போலீஸ் நிலையத்தில் தகவல் கொடுத்து, அவர்களை இமாமின் வீட்டுக்கு வெளியே மறைவாகக் கொண்டுவந்து வைத்திருந்தார். திருவாளர் 420 அட்டகாசத்துடன் வெளியே வரும்போது 3 நூறு ரூபாய் நோட்டுகளுடன் போலீசார் அவரைக் கைது செய்து கைவிலங்கு மாட்டி ஆண்டவன் பெயரால் அப்பாவி ஒருவரை ஆட்டிப்படைத்த அந்த கார்த்திகேயரை காராக்கிரகத்தில் கொண்டு தள்ளினார்கள்.

பின் முறைப்படி வழக்கு நடந்தது. கடைசியில் நாகூர் ஆண்டவரை கைவிட்டு உயர்நீதி மன்றம்வரை திருவாளர் 420 வழக்காடிப்பார்த்தார். கடைசியில் உயர்நீதி மன்றமும் 6 மாதம் சிறையில் தள்ளி அவரைக் கைவிட்டுவிட்டது. அந்தோ பரிதாபம்

இந்த உலகத்தில் மனிதனை மனிதன் ஏமாற்றுவதென்பது அவ்வளவு சுலபமான செயலல்ல! என்ன காரணத்தாலோ ஏறிட்டு நோக்குகிறவனையே சந்தேகக் கண்களுடன் பார்ப்பார்கள். இரண்டு முறை ஒருவன் தம்வீட்டு வாசல் வழியே நடந்துவிட்டால் வீட்டுக் கதவைத் தாளிட்டு விடுவார்கள் பெண்கள்.

இத்தகைய 'உஷாரா'ன உலகில் கார்த்திகேயரைப் போன்றவர் காலம் தள்ள முடிவது எப்படி? சுக வாழ்வு என்றால் சாதாரணமாகவா? ஆண்டுக்கு ஒன்பது லட்சம் வாங்கும் கவர்னர்களுக்கும் கிடைக்காத வரவேற்பைப் போறல்லவா அவர்களுக்கும் தருகிறார்கள்? இதற்குள்ளே புகுந்து கிடப்பது ரகசியமல்ல; எல்லாரும் உணர்ந்த அறியாமை—மூட நம்பிக்கை!

அதை ஒழிக்க சட்டம்; இருக்கிறது என்றாலும் பகுத்தறிவு இயக்கத்தின் சீரிய பணிக்குப் பின்னரே மக்கள் சிறிது உண்மையை உணரத் தலைப்பட்டனர்.

இந்தச் சிறிய நிகழ்ச்சி உண்மையில் நடந்த ஒரு சம்பவத்தை வைத்து கற்பனையாகப் பின்னப்பட்டதாகும். மனித சமுதாய அமைப்பில் ஏமாற்றுக்காரர்கள் எப்படி எப்படியெல்லாம்வேஷப் போட்டு ஏய்க்கிறார்கள் என்பதை உணரும்போது எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ—என்று நாமும் சற்று உணர்வோடு இருக்க வேண்டும் என்பதை நல்லறிவாளர்கள் ஒத்துக்கொள்வார்கள்.

இருபதாம் நூற்றாண்டிலும் இத்தகையோர் வாழ்வது விசித்திரமே!



ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும், மு கருணாநிதி, முரசொலி அச்சகம்
4/128 பவுண்ட்ரோடு — சென்னை 6.

Wrapper Printed at Asian Printers, Madras - 5